வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப்பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12

புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 சித்திரை திங்கள் 21-ம் நாள் (3—5—1964) ஞாயிற்றுக்கிழமை துல்ஹஜ் 20 | இதழ் 49

மில்க்வைற் நீலசோப்




பிரகாசமாய் சலவை செய்கிறது:

மில்க்வைற் சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம்

# தேர்தலை ஒத்திவைக்க முயற்சி?

## மொழிப் பிரச்சினைக்கும் தீர்வு காணப்படுமாம்

பொதுத் தேர்தலை 4 ஆண்டுகளுக்கு ஒத்திப்போடுவதற்கான சாத்தியக் கூறுகளிருந்தால் தான் கூட்டரசாங்கம் ஏற்பட முடியு மென்று தெரிகிறது. இரு மந்திரிகளை மந்திரிசபையிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்ற தனது கோரிக்கையைத் திரு. பிலிப் குணவர்தன தொடர்ந்து வற்புறுத்தினுல் கூட்டாட்சி ஏற்பட இடமில்லை யென்றும், 9-ந் திகதி கூடவிருக்கும் சுதந்திரக் கட்சிக் கமிட்டிக் கூட்டம் ஒரு கண் துடைப்புஎன்றும் சுதந்திரக் கட்சி வட்டாரங்களில் சுட்டிக்காட்டப்படுகிறது.

உத்தேச கூட்டரசாங்கத்தின் வேலைத் திட்ட மொன்றை நிறுவ இடதுசாரி ஐக்கிய முன்னணி பிரதம மந்திரியிடம் சமர்ப்பித்திருப்பதாகவும், அது 14-அம்சங்களைக் கொண்டதென்றும், அத்திட்டத்தைப் பெரும்பாலும் பிரதமர் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இது ஓர் ஐந்தாண்டுத் திட்டமாம். 1965 ஜூலையில் பொதுத் தேர்தல் நடக்கவிருப்பதால் ஒரு வருட காலத்துள் எதையும் சாதிக்க முடியாதென்றும் 'ஓராண்டுக் கூட்டாட்சிக்கு' இணங்க முடியாதென்றும் இ. ஐ. முன்னணி தெரிவித்திருப்பதாகவும், ஆகவே ஐந்தாண்டுகள் ஆட்சி செலுத்தக் கூடியதாக ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

### தேர்தலைப் பின்போட முயற்சி

இன்னும் 5 வருடங்களுக்கு ஆட்சி செலுத்துவதானுல் பொதுத் தேர்தலை 4 ஆண்டுகளுக்கு ஒத்திப் போட வேண்டுமாதலின், அதற்கேற்ப அரசியற் சட்டத்தைத் திருத்த பாராளுமன்றத்தில் இரு பங்கு வாக்குகளைப் பெறுவதைப் பற்றியும் இரு தரப்பினர்களும் விவாதித்தார்களாம்.



சிங்களம் மட்டும் சட்டத்தை முறியடித்த அரசாங்க எழுது வினைஞர் சங்கத் தலைவர் திரு. செ. கோடீசுவரன்.

(கட்டுரை 5-ம் பக்கம்)

இடதுசாரிகள் அரசாங்கத்துடன் சேர்ந்தாலும் மூன்றில் இரு பங்கு வாக்குகள் கிடைக்காது. ஆகவே மொழிப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான முடிவைக் கண்டு அதன் மூலம் தமிழரசுக் கட்சியின் ஆதரவைப் பெற்று விட்டால் அரசியற் சட்டத்தைத் திருத்தலாம் என்ற கருத்துப் பற்றிப் பிரதமரும் டாக்டர் என். எம். பெரேராவும் விவாதித்தார்களென்றும், அவர்கள் நுரரெலியில் நடத்திய பேச்சு வார்த்தைகளில் அதிக நேரத்தை தேசிய ஒருமைப்பாடு ஏற்படுத்துவது பற்றியும், மொழிப் பிரச்சினை தீர்ப்பது பற்றியும் விவாதிப்பதிலேயே கழித்தனரென்றும் கூறப்படுகிறது.

### கூட்டாட்சி ஏற்படாது

பொதுத் தேர்தலை ஒத்திவைப்பதற்குச் சாத்தியக் கூறுகளில்லையேல் ஒரு வருடத்துக்காக மட்டும் கூட்டரசாங்கம் ஏற்படாதென்றும் இடதுசாரி அரசியல் வட்டாரங்களில் சுட்டிக்காட்டப்படுகிறது.

அந்த ஐந்தாண்டு ஆட்சியை "ஜனநாயக சர்வாதிகாரம்' என்று அரசியல் வட்டாரங்கள் வர்ணிக்கின்றன.

திரு. சி. பி. டி. சில்வாவையும், திரு. மைத்திரிபால சேனநாயக்காவையும் மந்

(8-ம் பக்கம் பார்க்க)

## பௌத்த சங்கம் தடுமாறுகிறது

இடதுசாரி ஐக்கிய முன்னணியின் கூட்டுறவுடன் ஆளும் கட்சி ஆட்சி நடாத்துவதை இதுவரை வற்புறுத்தி வந்த ஒரு பௌத்த சங்கம் கூட்டாட்சி வேண்டாம் என்று கூற ஆரம்பித்திருப்பதாகவும் செய்தி கிடைத்துள்ளது.

• இடதுசாரிகளின் கூட்டுறவைப் பெற்று ஒரு வருட காலத்தை கடத்திவிட்டு பொதுத் தேர்தலுக்காக ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதே நல்லது பொதுத் தேர்தலின் பின்னர் ஓர் கூட்டாட்சியினை ஏற்படுத்தலாமே தவிர அதற்கு முன்னர் சேருவது நல்லதல்ல என்று அச்சங்கம் குறிப்பிட்டுள்ளதாம்.

தேர்தலுக்குப் பின்னர் கூட்டாட்சிக்கான ஒப்பந்தத்தைச் செய்துவிட்டால் எதிர்வரும் சிம்மாசனப் பிரசங்க வாக்கெடுப்பிலும் ஆளும் கட்சிக்கு சாதகமாக வாக்களிக்காவிட்டாலும், எதிர்த்து வாக்களிக்காமல் இடதுசாரிகளைக் கட்டுப்படுத்தலாம் என்று அந்தச் சங்கம் பிரதமருக்குச் சுட்டிக் காட்டியிருப்பதாகத் தெரியவருகிறது.

## சிங்கள இரகசிய சங்கங்களின் ஏற்பாடு

## மொழி வழக்குத் தீர்ப்பின் பயனை முறியடிக்க முயற்சி

கோடீசுவரன் வழக்குத் தீர்ப்பு வெளியானதும் சில சிங்கள தீவிர வகுப்பு வாத இயக்கங்கள் தங்கள் அந்தரங்க வேலைத் திட்டங்களில் புத்துணர்ச்சியுடன் ஈடுபட ஆரம்பித்துள்ளனர் என்று செய்தி ஒன்று கூறுகிறது.

'தமிழ் பேசும் மக்களின் கோரிக்கைகள் சட்டத்தின்படி பார்க்கப் போனுல் நியாயமானவையாகவே இருக்கலாம். அவர்களுடைய கோரிக்கைகளை விட்டுக் கொடுத்தாலும், 'சிங்கள மக்களின் உரிமைகள் யாவும் பிடுங்கப்பட்டு விடும். ஆகவே சட்ட மார்க்கங்களுக்கு அப்பாற்பட்ட முறையில் அந்தரங்கமாகச் செயல்பட வேண்டியது அவசியம்', என்று ஒரு இரகசியக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிய ஒரு புத்த பிக்கு கூறினுராம்.

தமிழ் பேசும் மக்களின் ஆதிக்கங்களை படிப்படியாக முறியடிப்பதற்கான திட்டங்கள் தயாரிப்பதில் சிலர் தீவிரமாக ஈடுபட்டு வருகிறுர்களாம். தமிழ் பேசும் மக்கள் கூடுதலாக வசிக்கும் பிரதேசங்களில் சிங்கள மக்களை திட்டமிட்டுக் குடியேற்றுவது இத்திட்டங்களில் முதன்மையாக இடம் பெறுகிறதாம்.

திருகோணமலையை தமிழ் பேசும் மக்களிடமிருந்து பிரித்து எடுத்துவிட வேண்டுமென்பதில் பல தீவிர சிங்கள வகுப்புவாத இயக்கங்கள் மும்முரமாக ஈடுபட்டு வருவதாகத் தெரிகிறது. திருகோணமலையை அடுத்துள்ள பிரதேசங்களிலுள்ள முடிக்குரிய காணிகளில் பலாத்காரமாகக் குடியேறுவதுடன், அடுத்த பொதுத் தேர்தலுக்குள் சிங்கள வாக்காளர் தொகையை திருகோணமலைத் தொகுதியில் கணிசமான அளவு உயர்த்திவிடவும் தீவிரமாக முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.



வழக்குரைஞர் வரிசை முன் செல்ல பின் நின்று வழக்கை நடாத்தி வைத்த சட்ட நடவடிக்கை அணியின் நெப்போலியன் என்று கூறும் அளவிற்கு; ஊன் மறந்து, உறக்கம் மறந்து வழக்கின் வெற்றிக்கென்றே தன்னை அர்ப்பணித்துக்கொண்ட; அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் ஆரம்பகாலம் முதல் பொதுச் செயலாளராக இருந்து வரும் திரு. இ. பாலசுப்பிரமணியம்.

(செய்தி 4-ம் பக்கம் பார்க்க)

## மலையக இளைஞருக்கு தமிழாசிரியர் பதவி வழங்கவும்

எஸ். எஸ். ஸி. சித்தியடைந்த மலையக வாலிபர்களுக்கு, பின் தங்கிய வகுப்பாருக்கு வழங்கும் சலுகைகளை அடிப்படையாகக் கொண்டு, ஆசிரிய நியமனங்கள் வழங்கவும், கல்வி வெள்ளை அறிக்கையினைப் பரிசீலிக்கவும் தமிழரசுக் கட்சிச்செயற்குழு தீர்மானித்துள்ளது.

பின் தங்கிய வகுப்பார்களுக்குக் கல்வித்துறையில் அரசாங்கம் சில விசேட சலுகைகள் வழங்கி வருகிறது. மலைநாட்டுத் தோட்டத் தொழிலாள வம்சாவளியினரும் இதே சலுகைகள் பெற அருகதையுடையவர்களாவர்.

மலைநாட்டில் சிரேஷ்ட பாடசாலைத்தராதரப் பத்திரப் பரீட்சை சித்தியெய்திய வாலிபர்கள் பலர் இருக்கின்றனர். அவர்களை மலையகப் பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும். இவ்வாறு நடந்த வார இறுதியில் மன்னாரில் கூடிய தமிழரசுக்கட்சிச் செயற்குழு தீர்மானித்தது.

கல்வி வெள்ளை அறிக்கையினை ஆராய்ந்து ஒரு அறிக்கை சமர்ப்பிப்பதற்கான ஒரு உபகுழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் திரு. வி. நவரத்தினம், திரு. வி. என். நவரத்தினம், திரு. செ. இராசதுரை, திரு. க. துரைரத்தினம் முதலியோர் இடம்பெறுகின்றனர்.

கட்டாய ஓய்வுக்கான உத்தரவுச் சீட்டுகள் சிங்களம் படியாத தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படுவதால் எழுந்துள்ள நிலைமையிட்டு, மீண்டும் மே மாதம் 15, 16ம் திகதிகளில்கொழும்பில் நடைபெறவிருக்கும் செயற்குழு ஆராயவிருக்கிறது.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலின் உன்னதமான நிலையை கதைகளில் விளக்குகிறேன்

## எப்படி எழுத ஆரம்பித்தேன்

'காதல் என்பது அன்பின் உன்னதமான ஒரு நிலை' என்ற தத்துவத்தில் நம்பிக்கையுடையவர். அந்த உன்னத நோக்கத்தைப் பிரசாரம் செய்வதே அவரின் எழுத்தோவியங்கள். புதுமை இலக்கியத்தின் சகல துறைகளிலும் காலூன்றி ஓரளவு வெற்றி கண்ட இவர் சிறுகதைத் துறையில் தனக்கெனத் தனி வழி சமைத்துள்ளார். ஈழத்தின் உயர்ந்த சிறுகதைகளை நூல் உருவில் கண்ட இவர்; தனது எழுத்தோவியங்களுக்கு இதுவரை தனிநூல் வெளியிடவில்லை. அகிலனை அபிமான எழுத்தாளராகக் கொண்ட இவர் 'மலர்ந்த காதல்' உருவான வரலாற்றைச் சுவை படக் கூறுகிறார்.

'எப்படி எழுத ஆரம்பித்தேன்? என்ற தலைப்பில்', ஐந்து பக்கங்களுக்கு மேற்படாமல் ஒரு கட்டுரை எழுதி......'—'சுதந்திரன்' ஆசிரியரின் கடிதம் என் மேசையின் மேல், எனக்கு முன்னால் விரிந்து கிடக்க, இந்த அன்புக் கட்டளை உள்ளத்தே புகுந்து குடைகின்றது.

'நான் கட்டுரை எழுதியிருக்கிறேன்; சில கவிதைகள் ஆக்கியுள்ளேன்; கதைகள் எழுதியிருக்கிறேன்; நாவல்களையும் விட்டுவைக்கவில்லை. இவற்றுள் எதை எழுதிய விதத்தை இப்போது நீங்கள் கேட்கின்றீர்கள்?'' என் உள்ளம் வினா எழுப்புகின்றது.

கடிதம் கிளிப்பிள்ளை. சொன்னதைத்தான் சொல்லுமே தவிர, புதிதாகக் கேட்டால் புரியாமல் விழிக்கும்!

' "எப்படி எழுத ஆரம்பித்தேன்?" என்ற தலைப்பில்...'' கடிதம் மீண்டும் கட்டளை இடுகின்றது.

### சிறுகதையில் பெருவிருப்பு

சிறு கதைகள் படிப்பதில் எனக்குப் பற்றும் பாசமும் உண்டு, சிறு கதைகள் எழுதுவதில் எனக்குப் பெரு விருப்பு உண்டு; சிறந்த சிறுகதையாசிரியனாக விளங்க வே[ண்டு]ம் என்ற இலட்சியத்தில் [உ]றுதியான காதல் உ[ண்டு]. எனக்குக் 'கதை கண்ட இடம் கைலாசம்.'

கட்டுரை, கவிதைகளிலும் பார்க்க, நான் எழுதிய கதைகள் அதிகம்.

ஆடி அசைந்து கலங்கிக் கிடந்த சிந்தனைக் குளம், படிப்படியாகத் தெளிவடைகின்றது.

ஆசிரியரின் கேள்விக்கு, நானாகவே ஒரு திருத்தப் பிரேரணையைப் பிரேரித்து, அனுவதித்து, ஏகமனதாக நிறைவேற்றுகின்றேன். கேள்வி புதிய உருவம் பெறுகின்றது; 'எப்படிச் சிறுகதைஎழுத ஆரம்பித்தேன்?'

சிந்தனை பின் நோக்கிப் போகின்றது— பிற்போக்கு!

### பின்னணி

நான் மாணவனாக ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறேன். காந்

**சிற்பி**

தீயப் பற்றுடைய தமிழாசிரியர் வித்துவான் சி. ஆறுமுகம் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகப் பிரியரான வரலாற்று ஆசிர்யர் திரு. சி. கனகசபாபதி (ஈழமன்றன்) அவர்களும் தமிழ் உலகத்தைக் காட்டி, தமிழ் உள்ளத்தைக் காட்டி, தமிழ் உணர்வை ஊட்டுகின்றார்கள். வீட்டிற்குக் 'கலைமகள்' மாதந்தவறாமல் வருகின்றது. அடுத்த வீட்டு உறவினரின் தயவால் 'கல்கி' வாரந்தோறும் கிடைக்கின்றது. இடைக்கிடை 'ஆனந்த விகடனும்' அகப்படுகின்றது.

கதைகள், தொடர்கதைகளை நான் படிக்கின்றேன்; படித்துக் கொண்டேயிருக்கின்றேன். பொழுது போக்காக இருந்தது தொழிலாக மாறுகின்றது. என் பள்ளிப் படிப்பைப் பாதித்து விடுமோ என்று பயப்படும் அளவிற்கு இந்தப் பழக்கம், பைத்தியமாக மாறுகின்றது.

### என்னைக் கவர்ந்த எழுத்தாளர்கள்

'இலக்கியம் என்றால் என்ன?' என்பதில் எனக்கு அக்கறையில்லை 'சிறுகதை இலக்கியமா? என்ற சர்ச்சை ஏற்படவில்லை. கதாசிரியரின் பெயரைப் பற்றிய கவலையே இல்லை. 'கதையா? சரி படிப்போம்'என்றமனப்பான்மை!



நாட்கள் நழுவுகின்றன. வாரங்கள் வந்து போகின்றன; மாதங்கள் மறைகின்றன. நான் படித்துக் கொண்டிருக்கின்றேன். சில எழுத்தாளர்கள் நினைவில் இடம்பெறுகின்றார்கள்: கல்கி, தேவன், லக்ஷ்மி, அகிலன், த. நா. குமாரசாமி—இப்படி இன்னுஞ் சிலர்.

அகிலனின் கதைகள் சற்று அதிகமாகவே என் உள்ளத்தைக் கவர்கின்றன. அன்பும்,பண்பும், பரிவும் பரோபகாரமும், தியாகமும் தூய்மையும் நிறைந்த இன்பமயமான ஓர் இலட்சிய உலகை அகிலனின் கதைகளில் நான் காண்கின்றேன் அவருடைய அன்புப் பிரச்சாரம் என் நெஞ்சைக் கவர்கின்றது. முதன் முதலாக நாராயணசாமி ஐயர் பரிசைப் பெற்ற நாவலாகிய 'பெண்', 'வழி பிறந்தது', 'அவளுக்கு–', 'இதயச் சிறையில்'—போன்ற சிறு கதைகள், புத்தக உருவில் வெளியான 'சிநேகிதி' என்ற நாவல்—அனைத்தும் என்னை ஆட்கொள்கின்றன. 'கலைமகள்' வந்தால் முதலில் அகிலனின் கதையையே படிப்பது என்ற நிலை ஏற்படுகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் டாக்டர் மு. வரதராசனாரின் நாவல்களையும் படிக்கின்றேன்.

இந்த இருவருமே இலட்சியவாதிகள்; புத்துலகம் சமைக்கத் துடிப்பவர்கள். அந்த உலகில் புனிதமான அன்பு ஒன்றே தனியாட்சி செலுத்தும்.

### காதலுக்கு கட்டுப்பாடு

இப்படியான ஓருலகை உருவாக்கும் எண்ணம் என் உள்ளத்திலும் எழுகின்றது. ஆனால் எப்படி உருவாக்குவது?

வாளாற் சாதிக்க முடியாதவற்றை எழுது கோலினாற் சாதிக்கலாம். வாளின் சாதனை வாழாது; எழுத்தின் சாதனை என்றென்றும் அழியாது நிற்கும்.

இந்த [illegible] எழுதிப் புகழ் பெற வேண்டும் என்ற ஆசையும் இணைகின்றது. நல்லவற்றை எழுதினாற்றான், நல்லவர்களின் நெஞ்சங்களில் நீடித்து வாழலாம் என்ற உண்மையும் 'பளிச்'சிடுகின்றது.

உலகின் இழி நிலையைக் காட்டினால், படிப்போருக்கு எரிச்சல் ஏற்படும்; அடிக்கடி காட்டினால், அலுப்பு ஏற்படும். என்றுமே அதைப் பற்றி எழுதினால், அந்த நிலையே பழக்கப்பட்டுவிடும். 'இப்படித்தான் வாழ வேண்டும்' என்ற ஓர் இலட்சியத்தை முன் வைத்தால், இன்பமயமான ஓர் உலகத்[தை] க் கற்பனையிலாவது காணச் செய்தால், ஒரு சிலராவது அந்த இலட்சிய உலகை நோக்கி ஏறு நடை போடமாட்டார்களா? நாளடைவில் அந்தச் சிலர், பலராகப் பெருகமாட்டார்களா?

காதல் என்பது அன்பின் உன்னதமான ஒரு நிலையே. அன்பு நெறியே தமிழர் நெறி. காதல் வாழ்வே தமிழர் வாழ்வு. தூய்மையான காதலுக்கு அனைவரும் துதி பாட வேண்டும். காதல் என்றால் காத தூரம் ஓடும் நிலைமை மாற வேண்டும். அதே சமயத்தில், காதல் வயப்பட்டவர்கள், கல்யாணம் செய்து கொள்ளும் வரை கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றிலி

(13-ம் பக்கம் பார்க்க)




**ரிஷி**

**அஜமாமிச லேகியம்**

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதைப் பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைத்துவிடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பத்தியமில்லை.

விலை 1 ருத்தல் ரூபா 35/00

விலை ½ ருத்தல் ரூபா 22/50

(தபாற் செலவு 95 சதம்)

ஆயுர்வேத டாக்டர்:

**T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்**

**ஞானசுந்தர வைத்தியசாலை,**

187, செட்டியார் தெரு, கொழும்பு.


## கவிதைப் பூங்கா

### உழைப்போன் உலகின் உயிர்!

—இராஜபாரதி—

கொட்டும் வியர்வைக் குருதிக் குளம்ஆடி
முட்டும் மிடிபோக்கும் பாட்டாளி,—'மட்டுண்ட
வண்டு குழல்மேய வசைந்தொடியுஞ் சிற்றிடையோய்'!
இன்றேல் வளமே தெமக்கு?

உலகமெலா மோர்குலமாய் உன்னி உழைப்போர்
கழகங்கள் வெற்றிக் கரத்தே—புளகமுடன்
மின்னற் கொடியேந்தும் மேதினத்தை வாழ்த்தியே
அன்னப் பெடைநடையாய்; ஆடு.

முத்தொழிலோன் போலென்றும் முன்னின்றிவ் வையத்தை
நித்தம் புறம்காக்கும் நீர்மையால்-அத்திக்கொம்(பு)
ஏந்தும் இளமாதே! எவ்வுயிர்க்கும் ஆதரவாய்
வாய்ந்த உழைப் பாளிகளை வாழ்த்து.

உண்ண உடுக்க உறைந்திருக்கச் சாதனங்கள்
பண்ணும்பாட் டாளிப் பரம்பரையைக்—கண்ணால்
கொடுங்கூற்ற மாய்த்தோற்றுங் கோதாய்; மறந்தகுடி
அடுங்காடாய் ஆம் என்றறி.

கத்திசுத்தி ஒள்ளரிவாள் கைவண் கருவியெனும்
அத்தனையும் அங்கமதாய் வைத்திருக்கும்—முத்தாய்
ஒளிர்ப்ப மெருகிட்ட ஒண்நகையோய்! உண்மை;
'உழைப்போன் உலகின் உயிர்.'

### மூடிற்று தமிழின் கண்கள்

—(கோவை-பகேசன்)—

வெடித்தது இதயம் வெம்பியதுள்ளம்
வெய்துயிர்த்தழுதது நெஞ்சம்
வடித்தனர் கண்ணீர் வண்டமிழ் மக்கள்
வார்த்தைகள் இழந்தது வாயும்
துடித்தழுகின்றாள் செந்தமிழ் அன்னை
துயர்தனை ஆற்றுவார் யாரோ
வடித்த செந்தமிழை வழங்கிய கவிஞன்
மண் மூடிப்போனான் ஐயோ!

பைந்தமிழ்க் கவிஞன் எங்கே
பாரதிதாசன் எங்கே?
செந்தமிழ்க் கொருவன் எங்கே?
சிறுமையின் எதிரி எங்கே
பங்கமாம் தமிழுக்கு என்றால்
பதறிடும் உள்ளம் எங்கே?
சிங்கத்தின் வீரம் எங்கே?
சீர்பெறு கவிதை எங்கே?

பாரதி தந்த பாதை
பாழ்பட்டு போகாவண்ணம்
சீர் செய்து செப்பனிட்டு
செந்தமிழ் வளர்த்தான் எங்கே?
மார்தட்டி உலகின் முன்பு
மாபெரும் கவிஞன் எங்கள்
பாரதிதாசன் என்றோம்
வேறிலி யாரைச் சொல்வோம்!

தமிழெனதுயிரின் மூச்சு
தமிழ் மொழி எனது தெய்வம்
தமிழ் கவிபாடல் ஒன்றே
தரணியில் எனக்கு இன்பம்
தமிழுக்கு பகைவர் என்றால
தனக்கும் தான் பகைவர் என்ற
முதுதமிழ்க் கவிஞன் போனான்
மூடிற்று தமிழின் கண்கள்!

ஐயகோ விதியே எங்கள்
அருந்தமிழ் மொழியை நீயும்
என்னதான் செய்ய எண்ணி
இருக்கின்றாய்! சின்னாள் முன்பு
இன்னிசை மேதை தன்னை
இழந்தனம் இன்று எங்கள்
தன்னிகரில்லா நல்ல
கவிஞனை பறித்து கொண்டாய்!

பாண்டியன் பரிசு தந்த
பகுத்தறிவாளன் போனான்
மாண்ட செந்தமிழை இங்கு
வாழ்வித்தோன் மறைந்தே போனான்
ஆண்ட நம்பெருமை சொல்லி
அகிலத்தில் பெருமைகாத்த
தீந்தமிழ்க் கவிஞன் போனான்!!
திக்கிலை எமக்கு இன்று!!

பாவல நம்மை விட்டு
பறந்தனை உனக்கு நாங்கள்
தீவினை என்ன செய்தோம்?
திரும்பிப் பாராமல் சென்றாய்!
நீ தந்த காவியங்கள்
நெஞ்சினுள் உள்ளமட்டும்
சாவென்ப துனக்கு இல்லை
சத்தியம்! நீ வாழ்கின்றாய்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ம. ச. தம்பையா,
வடலிஅடைப்பு.

கே: நீர்வேலியில் நடந்த சிரமதானத்திஞல் தமிழ் மக்களுக்கு ஏதாவது நன்மை உண்டா?

ப: உண்டு. ஒரே வாரத்தில் ஒன்றரை மைல் சாலையொன்று உருவாகிவிட்டது. அதனைத் தமிழ் மக்கள் பயன்படுத்தலாமல்லவா?

கே: தேசிய லொத்தர் டிக்கட் ஒவ்வொரு கிழமையும் எடுத்துப் பார்க்கிறேன் விழமாட்டேன் என்கிறது அதற்கு என்ன செய்யலாம்?

ப: என்ன செய்யலாம், அது விழும்போது முதலில் அறிவித்துவிட்டு விழுவதில்லையே! வாராவாரம் அந்தப் பணத்தைத் தனியாக சேமித்துவையுங்கள். இறுதியில் ஒரு சிறு தொகையாவது மிச்சமாகும்.

ஃ

கே. கே. யு. ஆனந்தசர்மா,
வறக்காப்பளை

கே: அடுத்த வரவு செலவுத் திட்டத்தைத் தயார் செய்வதற்காக நிதி மந்திரி இலங்கரத்திஞ என். எம். பெரேராவுக்கு இரவு பகலாகப் பந்தம்பிடிக்கிருராமே, உண்மைதாஞ?

ப: பட்ஜட்டைச் சரி செய்ய என். எம். பெரேராவால் பணம் கொடுக்க முடியுமா என்ன? பணம்கொடுத்துதவக் கூடிய அமெரிக்காவைத்தான் பகைத்துக் கொண்டிருக்கிருர்களே. அடுத்த பட்ஜட்டும் தோல்வி கண்டால் அந்தப் பழியை என். எம். மீது போட்டு விட்டுத் தான் தப்பிக்கொள்ள செய்யும் ஏற்பாடாகவும் இருக்கலாமல்லவா இது?

ஃ

சி. பரமேஸ்வரி, சுன்ஞகம்.

கே: வியட்நாமில் கத்தோலிக்கரால் பௌத்த மக்களுக்குப் பெரும் தீங்குகள் ஏற்பட்டதென அன்று இலங்கை அரசாங்கம் கூக்குரலிட்டதே! தற்பொழுது கிழக்குப் பாகிஸ்தானில் உள்ள பௌத்த மக்கள் விரட்டி அடிக்கப்படும் பொழுது மௌனம் சாதிப்பது ஏன்?

ப: இலங்கையிலுள்ள ஒரு சில பாகிஸ்தானியர்களைத் திரும்ப அழைத்துக்கொள்வதாக ஜனதிபதி அயூப்கான் கூறியிருக்கிருரல்லவா? அதற்குச் செலுத்தும் நன்றியாக இந்த மௌனத்தைக் கருதலாம். பௌத்தர்களை வெளியேற்றுவதைக் கண்டித்தால் அது எங்கே இந்தியாவுக்குச் சாதகமாகிவிடுமோ என்று இந்த பௌத்த அரசாங்கம் அஞ்சுகிறது போலும்!

கே: கோடீசுவரனின் வெற்றியின் விளைவு என்ன? அரசாங்கம் அப்பீல் எடுக்குமா?

ப: அப்பீல் எடுத்தாலும் எடுக்காவிட்டாலும் நியாயம் கோடீசுவரன் பக்கமே இருக்கிறதென்பது உலகறிய எடுத்துக் கூறியாகிவிட்டது. அப்பீலிலும் வெற்றி பெற முடியும் என்கிருர் திரு. திருச்செல்வம் கியூ. ஸி. இத்தீர்ப்பின் விளைவாக மொழிச் சிக்கலுக்குச் சுமுகமான ஒரு தீர்வு ஏற்படக் கூடுமென அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபடுகிறது.

ஃ

வை. ச. ஆனந், காரைநகர்.

கே: வெயில் அதிகமாக இருக்கிறது? கொஞ்சம் குளிர் அனுப்பி வைப்பீரா?

ப: குளிர் வேண்டுமா! சிறிது காலம் பொறுத்திருங்கள். பாராளுமன்றம் ஒத்தி வைத்த பிறகு அரசியல் சூடேறியதால் நாடெங்கும் ஒரே வெப்பமாயிருக்கிறது.

ஃ

எஸ். கே. சூரியம், வீரமுனை.

கே: எதிர்வரும் தேர்தலில் அம்மையாரின் கட்சியைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: தற்போது இடதுசாரி முன்னணியுடன் சேர்த்து போடும் திட்டம் அடுத்த பொதுத் தேர்தலுக்கும் சேர்த்துத்தாஞம். எனவே அம்மையாரின் கை அடுத்த தேர்தலிலும் ஓங்கி நிற்கக் கூடும். ஆஞல் அடுத்த தேர்தல் வருமா? என்ற கேள்விக்கு இன்னும் விடை கிடைக்கவில்லையே!

ஃ

அ. சிவப்பிரகாசம்,
ஏழாலை மேற்கு.

கே: கடந்த 25 வருட காலமாக அரசாங்கத்திற்கு எதிராக தொழிலாளரை வேலை நிறுத்தத்திற்கு தூண்டிவிட்ட தோழர் என். எம். தற்பொழுது தொழிலாளர்கள் அரசாங்கத்திற்கு எதிராக வேலை நிறுத்தம் செய்வது தகாது என்று கூறியிருப்பதின் நோக்கம் என்ன?

ப: கூட்டாட்சி ஏற்பட முன்பே தன்னை அரசாங்கத்தின் ஓர் உறுப்பாகக் கருதிவிட்டார் அவர். இனி வேலை நிறுத்தம் தனக்கும் எதிரானது என்பது அவர் எண்ணமாம்.

கே: இடதுசாரிக்குள் தற்பொழுது இருக்கும் கோஷ்டிகளின் பெயர்களை கூறுங்கள் பார்க்கலாம்?

ப: 1. என். எம். கோஷ்டி. 2. பெர்னுட் கோஷ்டி. 3. எட்மன்ட் சமரக்கொடி கோஷ்டி. 4. கோஷ்டியில்லாத கோஷ்டி (கொல்வின், லெஸ்லி). 5. கெனமன்-விக்கிரமசிங்க கோஷ்டி. 6. சண்முகதாசன் கோஷ்டி. 7. பிலிப் கோஷ்டி. 8. ரூபர்ட் கோஷ்டி......

செ. ஞானசபேசன்,
ஏழாலை, மேற்கு,

கே: வீரத் தமிழ் மகன் கோடீசுவரன் பெற்ற வெற்றி கேட்டு ஆனந்தக் கடலில் மூழ்கினேம். அவருக்கு விழா எடுத்தோம். பத்திரிகையில் வந்த அவரது புகைப்படத்தை வெட்டி எடுத்து அலங்காரம் செய்து ஊர் வலம் வந்தோம். அவரைத் தினமும் தரிசனம் செய்யக் கூடியதாக அவருடைய ஒரு முழு உருவப்படம் எங்கள் வீட்டில் தொங்கவிடப் பெரும் ஆசையாய் இருக்கிறது. குயுக்தி மாமா, இதற்கு ஏதாவது வழி செய்நீர்களாஞல் நான் உங்களுக்கு நன்றியுடையவஞக இருப்பேன்.

ப: ஆஞல் 'இது எனது தனிப்பட்ட வெற்றியல்ல! தமிழ் பேசும் மக்களின் வெற்றியே' என்றல்லவா அந்த மனிதர் கூறிவிட்டார். ஆகையால் நீங்கள் இனி தமிழ் பேசும் மக்களுக்குத் தான் விழா எடுக்கவேண்டும்.

வி. ஆர். சி. மூர்த்தி,
உனுக்கொல்லே.

கே: எனது தாய் நாடாகிய இந்தியாவிற்கு இன்னும் ஓரிரு வருடங்களில் செல்ல விருக்கும் நான் இங்கு திருமணம் செய்வது நல்லதா? அல்லது அங்கு செய்வது நல்லதா?

ப: எங்கே வேண்டுமாஞலும் செய்துகொள்ளுங்கள். இங்கே செய்தால் தாயகம் திரும்பும் போது துணைவியாரையும் அழைத்துச் செல்லுங்கள்.

கே: இலங்கை இந்தியப் பிரச்சினை எப்படி முடியும் என்று தங்களால் கூற முடியுமா?

ப: இலங்கையை நிரந்தரத் தாயகமாகக் கொண்டவர்களுக்குக் குடியுரிமை வழங்குவதில் முடிவடையும்.

ஃ

க. மாணிக்கம், உனுக்கொல்லே.

கே: குயுக்தியாரே, தமிழரசுத் தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றை 'சுதந்திரனில்' சிறிதளவு பிரசுரித்து வந்தால் அவர்களின் செல்வாக்கு எப்படி இருக்கும்?

ப: தலைவர்களுக்குச் செல்வாக்குத் தேடிக் கொடுக்கும் பத்திரிகையல்ல சுதந்திரன்.

கே: தாய் நாட்டுக்குச் செல்லும் தமிழர்களுக்குக் கொடுக்கப்படும் ஆயிரம் ரூபாவைப் பற்றி தங்கள் கருத்து என்ன?

ப: அது பழைய ஒப்பந்தமொன்றின் ஒரு ஷரத்தை அமுல் நடத்துகிருர்களாம். அதஞல் வேறு பயன் எதுவுமில்லை. ஒரு கண்துடைப்புத் திட்டம்.

ஃ

த. ச. பிரகாசம், ஆரையம்பதி.

கே: இலங்கையில் தலைவிரித்தாடும் லஞ்சப் பேயை ஒழிக்க ஒரு வழியே இல்லையா?

ப: மேலிடத்தில் ஊழலை ஒழித்தால்தான் லஞ்சப் பேய் ஒழியும்! அதற்கு மேலிடமே மாற வேண்டும்.

ஃ

எம். கே. காந்தி, தியத்தலாவை.

கே: இன்றைய முஸ்லிம் பாடசாலைகளில் "போதஞ மொழியாக" சிங்களத்தை ஏற்றுக் கொண்டால், அங்கு கல்வி பயிலும் தமிழ் மாணவர்களின் நிலை என்னவாகும்?

ப: சிங்களம் படிக்கும்படி அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுவார்கள்.

ஃ

கே. ஜே. லி., மட்டக்களப்பு.

கே: முற்றிலும் அரசியல் உணர்வு பெருத; நாட்டு மக்களிடையே தேர்தல் காலங்களிலே சமஷ்டி வேட்பாளரின் நான்கு மணி நேர மேடை "வாய்ப்புலம்பலை"ப் பற்றி உமது அபிப்பிராயத்தை விளம்புக!

ப: அது புலம்பலல்ல அப்பனே! மக்களுக்கு அரசியல் அறிவூட்டும் விரிவுரை. வேட்பாளர் வென்ருலும் தோற்ருலும் அவரது உரை மக்களுக்கு என்றும் பயன்படுகிறது.

ஃ

சி. சண்முகநாதன், கோணமலே.

கே: குயுக்தியாரே தமிழ் ஆட்சி மொழியாக வந்தால் என்ன செய்வீர்?

ப: சிங்களத்துக்கும் அதற்குரிய அந்தஸ்தை அளிப்பேன்.

திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினுக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

# அணையா விளக்கு

—"பாண்டியூரன்"—

வேட்கை யிழந்து வீதியிலே தூங்குபவன்
மீட்சி பெறப்பாடும் வித்தகனை;
ஆட்கொண்ட,
சங்கத் தமிழாள் சலித்துப் புலம்புகிருள்
பொங்குகிருள் உள்ளப் புளுக்கத்தில்;
மங்கையவள்,
பாடையிலே செல்லும் பாவலனின் காதினிலே
ஊடுருவிப் பாய்ந்து ஒலிக்கின்ருள்;
ஓடையினில்
சாம்பல் கரைகையிலே சங்கீதம் பாடுகிருள்
'தாம்படுவன்' இல்லைத் தமிழ்.

கானகத்து வெள்ளம் கட்டழித்துப் பாய்கையிலே
கூனித் தவழும் கொடிபோல;
தானுமிலா,
ஊனம் தளர்ந்து ஊதிவிடச் சாய்ந்துவிழும்
கூனற் கிழமும் குதித்தெழுந்து;
மானமுடன்,
வீரம் சொரிந்து வேலேந்தச் செய்தகவி
பாரதியின் தாசன் பாவலனை;
யாரறியார்?
தாயகத்திற் பூத்த தங்கத் துருவனையென்
பாவகத்தில் வைத்தேன் பணிந்து.

அந்த விளக்கு அணையா அகல் விளக்கு!
மந்த மகற்றும் மலைவிளக்கு!
சிந்தையிலே,
நின்று சுடரும் நிலையான பொன் விளக்கு!
என்று மொளிரும் எழில் விளக்கு!
மன்றமெனும்,
'நீல விதானத்து நித்திலப்பூம் பந்தலிலே'
கோல நிலவுக் குளிர் விளக்கு!
ஞாலமெலாம்,
பொன்ஞர் தமிழிற் புரட்சிக் கவியாத்துக்
கண்ணுய் ஒளிரும் கவி விளக்கு!
விண்ஞர் கவிதை விளக்கு!

தமிழ் பேசும் மக்கள் விரும்பிப் பாவிப்பது
மாய ஜோதி
ஊது பத்திகளே
சுகந்த வாசனை
நிலைத்து எரியும் தன்மை
நியாயமான விலை
நவீன முறையில் இறுக்கமாக அடைக்கப்பட்ட பாக்கெட்டுகளில் இப்பொழுது விற்பனையாகிறது.
உற்பத்தியாளர்கள்:-
ந. செல்லத்துரை, மாயஜோதி இன்டஸ்றீஸ்.
128/3, வாட்பிளேஸ், கொழும்பு—7.

BLACK FLAG
பக் கில்லர்
மந்திர சக்தி போன்று
மூட்டைகளை
கொன்று விடுகிறது.




கரப்பொத்தான்கள், சிலந்திப் பூச்சிகள், எறும்புகள், படுக்கை மூட்டைப் பூச்சிகள், மற்றும் ஊரும் பூச்சிகளிலிருந்தும் பாதுகாக்க இதோ உத்தரவாதத்துடன் கூடிய மருந்து. பக் கில்லர். இதில் மலாத்தியான், டில்ட்ரன், பிரித்ரின்ஸ் ஆகியன அடங்கியுள்ளன.

ஸ்ப்ரே இணைப்புடன் கூடிய கைக்குகந்த போத்தலாக கிடைக்கும்.

இன்றே உங்கள் வியாபாரியிடம் ஒரு போத்தல் வாங்குங்கள்-

ஏக விநியோகஸ்தர்கள்:
ஹாயிஸ் பிரவுன் அன் கம்பெனி லிமிட்டெட்,
மக்கலம் ரோடு, கொழும்பு. BK1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களத்தில் கடமையாற்றச் சொல்வது சேவை ஒப்பந்தத்தையே மாற்றுவதாகும்

## கோடீசுவரன் வழக்கு தீர்ப்புரையின் விபரம்

ஆங்கில மூலத்தில் சேவைக்கு எடுக்கப்பட்ட கோடீசுவரன், ஆங்கிலத்தில் வேலை செய்வதென்பதுதான் அவர் ஒப்புக்கொண்ட சேவை ஒப்பந்தத்தின் சாராம்சமாகும். அரசகரும மொழி நிறைவேற்றப்பட்ட காலம்வரை, சிங்களத்தில் அறிவு இருக்க வேண்டிய தேவை அவருக்கு இருக்கவேயில்லை. அவரைச் சிங்களத்தில் கடமையாற்றச் சொல்வது, சேவை நிபந்தனையில் செய்யும் ஒரு மாற்றமாகாது; அது சேவை ஒப்பந்தத்தையே மாற்றுவதாகும்.

எனவே வாதிக்கு 1-4-62 லிருந்து கிடைக்க வேண்டிய வாழ்க்கை உயர்வுப்படி அளிக்கப்பட வேண்டு மென்றும், வழக்குச் செலவுக்கும் அவர் உரித்தானவரென்றும் தீர்ப்பளிக்கிறேன்.



‘சட்ட உலகின் முடி சூடா மன்னன்’ அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் மூத்த வழக்குரைஞர் திரு. மு. திருச்செல்வம் கியூ. சி.

இவ்வாறு அரசின் பிரதிநிதியான அற்றணி ஜெனரலுக்கு எதிராக அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு. செ. கோடீசுவரன் திறைசேரி 560ம் இலக்க சுற்று நிருபம் சட்டவிரோதமானது என்று கூறி தொடர்ந்த வழக்கில் கொழும்பு மாவட்ட நீதிபதி திரு. ஓ. எல். டி. கிறெட்சர் வழங்கிய தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

35 பக்கங்களைக் கொண்ட இத்தீர்ப்பின் விபரம் வருமாறு:—

“ஆங்கிலம்மூலம் சேவைக்கெடுக்கப்பட்டவர்களானல் அரசகரும மொழியாகிய சிங்களத்தில் தேர்ச்சி பெறவில்லையென்ற காரணத்துக்காக, அரச ஊழியரின் வாழ்க்கை உயர்வுப் படியை நிறுத்தி வைப்பது நியாயமற்றதும், சட்ட விரோமானதுமாகும்.

அரசகரும மொழிச்சட்டத்தை அமுல் நடத்தும் பிரகாரமாக, இந்த அரச ஊழியர்க்கு பரிசுச் சம்பளப்(போனஸ்), ஓய்வுத்திட்டம் ஆகிய சலுகைகள், 1956 ம் ஆண்டு நவம்பர் 29 ம் திகதியிடப்பட்ட திறைசேரி சுற்று நிருபம் இல. 836 ன் மூலம் அளிக்கப்பட்டன.


### சுலபமாகத் தீர்த்து விட முடியாது

ஆனல், பிரச்சினை அவ்வளவு சுலபமாகத் தீர்க்கக் கூடிய தொன்றல்ல. ஏனெனில், திரு. கோடீசுவரனும், அரசாங்க சேவையில் இருந்த பெரும் பான்மையான தமிழ் உத்தியோகத்தரும், இச்சலுகைகளினல் ஏற்படக் கூடிய நடைமுறைச் சிக்கல்களை விட, சிங்கள மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டதையே தமது சமூகத்துக் கிழைக்கப்பட்ட இழுக்கெனக் கருதுபவராவர்.

திரு. கோடீசுவரனுடைய உத்தியோக நியமனக் கடிதம், ஒப்பந்தம், சேவைக் குறிப்பு இவற்றுடன் வாதியினதும் திரு. பாலசிங்கத்தினதும் சாட்சியமும் சேர்ந்து, ஒரு சேவை ஒப்பந்தத்தை நிலை நாட்டுகின்றன என்றே எனக்குப் படுகின்றது.

### சேவை ஒப்பந்தம் உண்டு

ஆகவே, இந்த முடிவின்படி பார்க்கும் பொழுது, இந்த விஷயம் ஆங்கிலச்சட்டப்படி தீர்க்கப்பட வேண்டியிருந்தால், திரு. கோடீசுவரனுக்கும் அரசாங்கத்துக்கு மிடையே உத்தரவாதமுள்ள சேவை ஒப்பந்தம் ஒன்று உண்டென்று எவ்வித கட்டுப்பாடுமின்றிக் கருத எனக்குச் சித்தமுள்ளதென்பதோடு, என்னுடைய கருத்தில், இங்கிலாந்திலுள்ள சட்ட அதிகாரத்தின் நிறை இந்தக் கருத்துக்கே சார்புடையதாகவும் புலப்படுகிறது.”



வழக்கின் வழிகாட்டியும் ஆலோசகருமான தமிழ் பேசும் தேசிய இனத்தின் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம்.

ஆகவே, ஏப்பிரல் 1, 1962 தொடக்கம் தமது மாதாந்த வாழ்க்கை உயர்வுப்படியான ரூ. 10 க்குத்தான் உரித்தானவர் என்ற தீர்ப்பை நீதி மன்றத்திலிருந்தும் நாடியதில், திரு. கோடீசுவரன் தமது உரிமைகளுக் கடங்கியே செயற்பட்டிருக்கிருரெனத்தாம் கருதுவதாக நீதிபதி கூறினர்.

“வாதியின் வழக்கென்னவெனில், அரச கரும மொழிச் சட்டத்தை அமுல் நடத்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளின் மூலம், அரசியற் திட்டத்தின் பகுதி 29 உப-பிரிவு 2க்கு முரணன, சட்டப்படி பிழையான ஒரு சட்டத்தை அமுல் நடாத்தவே முயல்வதால், சிங்களத்தில் போதிய அளவு தேர்ச்சி பெற்ற தென்பதற்கு அறிகுறியாக குறிப்பிட்ட பரீட்சையில் தான் தேற வேண்டுமென்ற விதியை தாம் உதாசினம் செய்யத் தீர்மானித்தால், அதற்குத் தமது வாழ்க்கை உயர்வுப்படியை நிறுத்தித் தம்மைத் தண்டனைக்குள்ளாக்க முடியா தென்பதேயாகும்.

### ஜென்னிங்சும் சோல்பரி கொமிஷனும்

அரசியற் சாசனத்தின் பகுதி 29ன் உப-பிரிவு, இந்த வழக்கில் சம்பந்தப்படாத ஒரு பகுதியைத் தவிர, மற்றும்படி மந்திரிகளின் அறிக்கைப் பிரதியின் எழுத்துக்கு எழுத்துப் பிரதிமையயாகும், என்பதை சேர் ஐவோர் ஜென்னிங்சிடமிருந்து அறிவதனுல் எமக்குப் பயனுண்டு.

அத்துடன் இலங்கைப் பாராளுமன்றத்தின் சட்டமியற்றும் அதிகாரத்துக்கு இடப்பட்ட கட்டுப்பாட்டை சோல்பரி கொமிஷன் அங்கீகரித்தது என்பதை அறிவதனுலும் எமக்குப் பயனுண்டு.

### கட்டுப்பாட்டுக்கு காரணம்

நடு நிலைமையான பிரிட்டிஷாரின் கைகளிலிருந்து அதிகாரமும், ஆட்சியும் இந்த நாட்டு மக்களின் கைகளுக்கு முற்று முழுதாக மாற்றப்படக் கூடிய நிலை அண்மித்த படியால், மற்றும் சிறுபான்மை சமூகங்களோடு பொதுவாக, தமிழ் மக்களினதும் உள்ளங்களிலும், அதிக பயமும் ஐயப்பாடும் ஏற்பட்டதே. இந்தக் கட்டுப்பாட்டுக்குக் காரணமாக விருந்திருக்க வேண்டும்.

‘சமூகம்’ என்பதற்கு அரசியற் சாசனத்தில் குறிப்பிட்ட பொருள் எதுவும் கொடுக்கப்படவில்லையாதலால், சேர். ஐவோர் ஜென்னிங்ஸ் கூறுவது போல, அந்தச் சொல்லின் பொதுப்படைக் கருத்திலேயே நாம் அதை உணர வேண்டும். 1946ம் ஆண்டில் பொதுப்படச் சொல்லப்போனல் ‘சமூகம்’ என்ற சொல் இனச் சமூகங்கள் என அழைக்கப்படும் சிங்களவர், இலங்கைத் தமிழர், முஸ்லிம்கள், மலாய்க்காரர், இந்தியர், பறங்கியர், ஐரோப்பியர் இவர்களை மட்டுமல்லாது, பலதரப்பட்ட சாதிகளையும் உள்ளடக்கிய தென்றே சொல்ல வேண்டும்.

ஒரு சமூகம், அதன் அறிவு அல்லது அறிவின்மையாலல்ல, அதன் இனம் அல்லது மதத்தினலேயே ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது என்று உதவி சொலிசிட்டர்-ஜெனரல் குறிப்பிட்டிருந்தார்.

இந்த வழக்கில், ஒரு சமூகம் எப்படி அமைகிறது என்பதைப் பற்றி உண்மையில் எமக்கு அக்கறையில்லை. சமூகங்கள் இருக்கின்றன என்பது மறுப்புக்கிடமில்லாததொன்று. இந்த வழக்கின் நோக்கத்தோடு பார்க்கும்பொழுது, சிங்களம் சிங்களச் சமூகத்தின் மொழியா இல்லையா அல்லது அது மிழ் அல்லது ஐரோப்பிய சமூகத்தின் மொழியா இல்லையா என்பது தான் எமக்கு முக்கியமாகிறது. அந்தக் கேள்விக்கு ஒரே மறுமொழி தான் உண்டு. சிங்களம் சிங்களச் சமூகத்தின் மொழி மாத்திரமாகும்.


சிங்களத் தகுதி காண் பரீட்சைகளில் தேற, சிங்களவரல்லாத உத்தியோகத்தர் ஏன் கூடிய கால நேரம் அளிக்கப்படுகின்றனர்? ஒரு சமூகமாகப் பார்க்கும் போது, அவர்களால் சிங்களச் சமூகத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களைப் போல் அம்மொழியில் விரைவாகத் தேர்ச்சி பெற முடியாது என்ற உண்மையை அரசாங்கம்ஏற்றுக்கொண்ட படியினுல்தானே?

‘ஒரு சிறுபான்மைச் சமூகத்துக்கெதிராகப் பாரபட்சம் காட்டப்படுவதெனில், சட்ட நடவடிக்கைகள் மூலமல்லாது, அவற்றிலும் பார்க்கக் கண்டுபிடிப்பதற்கும், வெளிக் கொணர்வதற்கும் கஷ்டமான நிர்வாக நடவடிக்கைகள் மூலமாகவே அது அமுலாக்கப்படுகிறது’ என்று சோல்பரி அறிக்கை கூறுகிறது.

இந்த வழக்கில், ஒரு சட்ட மசோதாவை — அரச கரும மொழி மசோதா-த்தான் பாரபட்சமான சட்டம் என்று வாதியின் வழக்குரைஞர் கூறுகிருர்.

அச் சட்டம் நிறைவேற்றப்பட்ட காலத்தில், சிங்களவரிடையேயும் மற்றச் சமூகங்களிடையேயும் எவ்வளவு பேர் அம் மொழியில் அறிவுள்ளவர்கள் என்பதை, அதற்கு வாக்களித்தவர்கள் அறிந்திருக்க வேண்டுமென்றே ஒருவர் கருத இடமுண்டு. இருந்தாற் போல் இருந்துவிட்டு, இதுவரை காலம் திறமையாகக் கட

(13-ம் பக்கம் பார்க்க)



‘சட்டத் துறையில் தனக்கெனத் தனி வழி கண்ட’ அரசாங்க எழுது வினைஞர் சங்க வழக்குரைஞர் திரு. வி. இரங்கநாதன்.


# கல்வி

● ஜீ. சீ. ஈ. (சாதாரண, உயர்தர) பரீட்சை—

● இலங்கைப் பல்கலைக் கழகப் புகுமுகப் பரீட்சைகளுக்கு ஆயத்தம் செய்ய விரும்பும் மாணவர்களுக்கு நேரடியான வகுப்புக்கள் காலையிலும் மாலையிலும் வார இறுதி நாட்களிலும் நடைபெறும். வயதுக் கட்டுப்பாடின்றி இரு பாலாரும் பங்கு பற்றலாம்.

விபரங்களுக்கு

அதிபர்,
சர்வகலாசாலைப் போதனு கழகம்,
(U. T. I.)
540, மருதானை வீதி,
கொழும்பு-10.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியவாதிகளின் பிற்போக்குத்தனம்

## மொழிவழித் தொழிற் சங்கத்தின் தோற்றத்திற்கு வித்திட்டது

## தமிழர்கள் அழிவில் சிங்கள தொழிலாளர் வளர்ந்தனர்

தமிழ் பேசும் ஊழியரின் உழைப்பிலே—உதிரத்திலே; உருவாகி தியாகி கந்தசாமி போன்றோரின் இழப்பிலே வளர்ந்த அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம் ஈற்றில் தமிழ் பேசும் உறுப்பினர்களின் காலையே வாரிவிட்டது. தேசியவாதமும் முற்போக்கு வாதமும் பேசியவர்கள் சண்டியெடுத்த வகுப்புவாதிகளாக மாறினர். அதன் முடிவு மொழி வழித் தொழிற்சங்கத்தின் கால் கோள் விழா நாட்டியது. மொழிவழித் தொழிற்சங்கங்களின் முன்னேடியாக விளங்கும் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் உருவான வரலாற்றை சங்கத்தின் தலைவர் திரு. செ. கோடீசுவரன் இங்கு விபரிக்கிறார்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் பிறந்த கதையும் வளர்ந்த கதையும் எட்டில் எழுதாமலே தமிழ் பேசும் தொழிலாளரின்-ஏன் தமிழ் பேசும் மக்களினது-இதயத்திலேயே இடம் பெற்றுவிட்ட ஒரு காவியமாகும். பெற்று வளர்த்து, பசுந் தமிழ் பாலூட்டிய அன்னைத் தமிழையும்-தமிழ் நிலத்தையும் மறந்து, அடிமை வாழ்வு அவித்த ஆங்கிலக் கல்வியின் துணையினுல் நாட்டு நிர்வாகத்தின் முதுகெலும்பாக விளங்கிய தமிழ் பேசும் ஊழியர்-வரலாற்றைத் திரும்பிப் பார்க்கவில்லை. எதிர்காலத்தையும் எண்ணிப் பார்க்கவில்லை. 'சர்க்கஸ்' இலே ஆடும்-புலியும் ஒன்ருக நின்று விளையாட்டுக் காட்டும்". ஆகா! என்ன அதிசயம்!" என்று ஆடு-புலி இவற்றின் சாதாரண உறவு முறையை அறிந்தோர் அதிசயிப்பர். ஆனல் அங்கே அவற்றின் எஜமானன் சவுக்கும் கையுமாக நிற்பதைக் கவனிக்க மாட்டார்கள்.


### பத்து ஆண்டு பின் தள்ளப்பட்டோம்

தென்னிலங்கை வந்த தமிழ் பேசும் ஊழியர் ஆங்கில எஜமானனுக்கு அடிமைப்பட்டு நிற்கும் சிங்களத்தோழர்களை கண்டனர். அடிமைகளாகிய தாங்களும் அடங்கினர். அடிமைத்தனம் என்ற பொதுமை மறைந்தால் தங்களிடையே வேற்றுமை இன்றி ஒருமை எந்தத்துறையிலும் இருக்கப் போவதில்லை என்பதை மறந்தனர். இயற்கையின் சக்திகளை அறியாத-உணராத-நிலையிலிருந்த நம்மவர்கள் தங்களுக்கு வேண்டிய பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ள மறந்தனர். விளைவு விபரீதமானது. கால ஓட்டத்திலே எமது வளர்ச்சி பத்துக்கு மேற்பட்ட ஆண்டுகள் பின் தள்ளிப்போடப்பட்டது.

1956ம் ஆண்டு நாட்டிலே வீசிய சிங்களம் மட்டும் என்ற புயல் தமிழ் பேசும் மக்களையே ஒரு உலுப்பு உலுக்கியது. தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களின் உள்ளத்திலே அச்சத்தை உண்டாக்கியது. தொழிற் சங்க வானிலே இன்று விதவைக் கோலம் பூண்டு நிற்கும் அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம் அன்று பூத்

**செ. கோடீசுவரன்**
தலைவர்: அ. எ. வி. சங்கம்

துக் குலுங்கும் புதுமணைப் பெண்ணாக நிறது. இலட்சிய இதயம் கொண்ட இளந் தமிழர் கூட்டம். தொழிற் சங்கவாதிகள்-கந்தசாமியின் குருதியிலே வளர்ந்த அந்தச் சங்கத்தை-வலுப்படுத்தி



மொழிவழித் தொழிற் சங்கங்களின் தந்தை; அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் முதல் தலைவர் திரு.க. சிவானந்தசுந்தரம்.

வந்தார்கள். தாங்கள் கட்டி வளர்த்த சங்கம் தங்கள் காலைப் பின்பு வாரிவிடும் என்பது அவர்களுக்கு அப்போது தெரியாது.

தமிழ் அரசாங்க ஊழியர் சிங்கள மொழி அறிவின்றித் தொடர்ந்து சேவையில் இருக்கவும்—பதவி உயர்வு சம்பள உயர்வு முதலிய உரிமைகளைப் பெறவும்-சேவையில் தொடர்ந்து இருக்க விரும்பாதோர் தாம் வேண்டிய நேரத்தில் முழு நட்டஈட்டுடன் ஓய்வு பெறவும் அவர்களுக்கு உரிமை வேண்டுமென்று 1956ல் நடைபெற்ற அ. லி. சே. சங்கத்தின் மாநாடு தீர்மானித்தது.

### வேற்றுமை வளர்ந்தது


இருபத்து நான்கு மணி நேரத்தில் சிங்களத்தை மட்டும் நாட்டின் அரசகரும மொழியாக்கிவிடுவதாக விரசபதம் செய்து வந்த காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்கா அம்மொழிச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறிய இருபத்து நான்கு மணி நேரத்தில் அச் சட்டத்தைக் காலவரையின்றிப் பின் தள்ளிப் போட்டார். இந்த ஆண்டிலிருந்து தொழிற் சங்கங்களிடையே தமிழர்-சிங்களவர் என்ற இன வேற்றுமை வளர்ந்து கொண்டு வந்தது. சங்கங்களிலே தமிழர்கள் ஒரு அணியும்-சிங்களவர் இன்னோர் அணியுமாக மாறுபட்டனர்.

சிங்களவருக்குக் கிடைத்த நன்மைகள் தமிழர்களுக்கு அழிவைத் தந்தன. தமிழர்களின் அழிவில் தங்கள் வாழ்வை வளப்படுத்தவும் அதே நேரத்தில் தங்கள் இனத்தின் நன்மையைப் பெறவும்-தங்கள் இனமே ஆளும் இனமாக வேண்டுமென்ற வேட்கையும் சிங்களத் தொழிற்சங்கவாதிகளின் உள்ளங்களிலே எழுந்தன. அதன் விளைவு சிங்களத் தொழிற்சங்கவாதிகள் அன்றுவரை கூறி வந்த இன வேற்றுமை கடந்த வர்க்க ஒற்றுமை ஒரு ஏமாற்று வித்தை என்பது தெளிவானது தான்.

1956ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட மொழிச் சட்டம் பின் தள்ளிப் போடப்பட்டதைப் போலவே அரசாங்க லிகிதர் சேவைச்சங்கம் அவ்வாண்டு நிவறவேற்றிய தீர்மானமும் குளிர் அறையில் போடப்பட்டது. அரச சேவையில் மொழிச் சட்ட அமுல் 1961 முதல் பரிபூரணமாகக் கொண்டு வரப்படும் என்று அரசாங்கம் அறிவித்தது.

### தேசிய தொழிற்சங்கத்தின் கழுத்தறுப்பு வேலை

இதற்கிடையில் அரசாங்கம் பல்வேறு சுற்று நிருபங்களை அனுப்பித் தமிழ் பேசும் அரச ஊழியரைப் பயமுறுத்தி வந்தது. 'முற்போக்கு' தொழிற்சங்கங்கள் 'மார்க்சிய' சித்தர் தொழிற்சங்கங்கள் இன மொழி மத பேத மற்ற தொழிலாளர் அணி என்றெல்லாம் தங்களை அழைத்துக்கொள்ளும் தொழிற்சங்கங்கள் சில தங்கள் தமிழ் உறுப்பினர் மீது இப் புதிய சிங்கள மொழித் தாக்குதலை அரசாங்கம் நடத்த முற்பட்ட பொழுது வாய் மூடி மௌனியாயிருந்தன. சில தாங்களும் கூட சேர்ந்து தாக்கின. இதில் இரண்டாவது வகையைச் சேர்ந்திருந்தது அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம். தமிழ் பேசும் ஊழியரின் உழைப்பிலே-உதிரத்திலே உருவாகிய அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம்—தமிழ் பேசும் உறுப்பினர்களின் கழுத்தறுக்கும் கைங்கரியத்திலே மிகத் தீவிரமாக ஈடுபட்டது.



[illegible] துணை நின்ற வழக்குரைஞர் திரு. மணிவாசகம் அண்ணாவூட்.

லங்கா சமசமாஜக்கட்சியின் ஆதரவுள்ள தலைமைப் பீடம் என்று கருதப்பட்டு வந்த அந்தத் தலைமைப் பீடம் 1956-ம் ஆண்டு பேராளர் மாநாட்டிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை உதாசீனம் செய்தது. தமிழ்பேசும் ஊழியர்கள் தங்கள் பிரச்சினையைக் கவனிக்கும்படி கேட்டுக்கொண்டும் அவர்களைப் பலிகடாக்களாக்க அந்தச் சங்கம் தயங்கவில்லை. அச்சங்கம் அமைச்சருக்கு விடுத்த ஒரு கடிதத்திலே தங்கள் சங்கம் சிங்கள அமுலுக்குப் பரிபூரண ஆதரவு தருவதாகவும் சிங்கள அமுலுக்கு இடையூருக இருக்கக் கூடியவர்களுக்குத் தங்கள் சங்கம் பொறுப்பில்லையென்றும் கூறியிருந்தது.

இதைவிட அயோக்கியத்தனமான அக்கிரமமான கழுத்தறுப்பு ஒருபொழுதும் தொழிற்சங்கங்களிலே இருந்ததில்லை. பேராளர் தீர்மானத்துக்கு மாறாக சிங்களத் தொழிற்சங்க வகுப்புவாதிகள் நடந்தார்கள். தமிழ் ஊழியர்கள் மார்பிலே கத்தியைப் பாய்ச்சினர்கள். தமிழ் பேசும் ஊழியர்கள் அப்பொழுதும் விட்டுவிடாமல் ஒரு சிறப்புப்பேராளர் மநாட்டைக்கூட்ட முயற்சித்தார்கள். அதையும் நடைபெற விடவில்லை.



வழக்கின் வெற்றிக்குத் துணை நின்ற வழக்குரைஞர் திரு. எஸ் ஜி. குறசெற் தம்பையா.



வழக்கை நல்ல முறையில் நடாத்தி வைத்த எழுது வினைஞர் சங்க வழக்கறிஞர் திரு. லூசியன் பெரேரா.

### தமிழ் அரசாங்க ஊழியர் சங்கம்

வர்க்க ஒற்றுமை பேசும் நவீன சிங்கள வகுப்புவாத தொழிற்சங்கத் தலைவர்கள் தமிழ்பேசும் ஊழியர்கள் நீதிகோரி சங்கமூலம் நடவடிக்கை மேற்கொள்ள எடுத்த முயற்சிகள் அத்தனையும் தோற்கடிக்கப்படவே தொடர்ந்து வகுப்புவெறி பிடித்த அரசாங்க லிகிதர் சேவைசங்கத்தில் இருந்து எவ்வித பயனுமில்லை என்பதை உணர்ந்து வெளியேறி

(9-ம் பக்கம் பார்க்க)



அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் ஆரம்பகாலம் முதல் அதன் பொருளாளராக இருந்து வரும் திரு. தர்மலிங்கம்.


**மகிழ்ச்சி தரும் செய்தி**

எங்கு நீங்கள் இருந்தாலும்
அல்லது
எங்கு நீங்கள் சென்றாலும்

**எஸ். ஏ. பெர்னண்டோஸ்'**
மலர்களைப் பற்றித்தான்
எல்லோரும் பேசுகிறார்கள்,

கல்யாணம், விவாகப் பதிவு, நத்தார், புதுவருடம், மே மாதம், பிறந்த தினம், வருடாந்த விழாக்கள், மதாலயங்கள், பதவி உயர்வுகள், பிரயாணம்......
சகல சம்பந்தப்பட்ட கொண்டாட்டங்களுக்கும்.

தினசரி விநியோகம்:

மதாலயங்கள், மிஷன் இல்லங்கள், கொண்வெண்டுகள், கல்லூரிகள், ஓய்வு விடுதிகள், ஓட்டல்கள், கிளப்புகள், தோட்ட பங்களாக்கள் முதலிய இடங்களுக்கு.

வேறு இடத்தில் விண்ணப்பிக்க முன் தயவு செய்து எங்களைக் கலந்தாலோசிக்கவும்.

உங்கள் சேவையே எங்கள் நோக்கம்
உங்கள் திருப்தியே எமது பரிசு

திருமண மலர்க்கொத்து, நினைவுச் சின்ன மலர்க்கொத்து
இவற்றில் கைதேர்ந்த நிபுணர்கள்

காய் கறி, மலர்ச் செடி விதைகளும் கிடைக்கும்

நீங்கள் இவற்றிலும் அதிகம் வாங்கலாம்
ஆனல் இவற்றிலும் நல்லதை வாங்க முடியாது

நேரில் வாருங்கள் அல்லது தொலை பேசி மூலமோ எழுத்து மூலமோ தொடர்பு கொள்ளுங்கள்:

**எஸ். ஏ. பெர்னண்டோ**
**பிரதம மலர்-விதை விற்பனையாளர்**
த. பெ. இல. 16,
பழைய பசார்,
நுவரெலியா.

தந்தி: 'பாதிமா' நுவரெலியா
தொலைபேசி: 283 (இல்லத்துக்கு இணைப்பு)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# போராட்டமே சுபீட்சத்தின் அடிச்சுவடு

## மேதினம் கற்பிக்கும் படிப்பினை

மே தினம் பாட்டாளியின் இருண்ட வாழ்வில் ஒளி பெற்ற இன்ப நாள், உழைப்பால் சமுதாய வாழ்வைச் சிறப்பித்து தாங்கி நிற்பவன் எவனோ அவனே பாட்டாளி. உழைப்பின் சிறப்பிற்கு அஞ்சலி செய்யும் தினமே மே தினம். அதுவே பாட்டாளியின் துயர் போக்கிய பொன்னுள். அதுவே சமுதாயத் திருநாள்.

அன்று...

கொடுமையின் கோரப் பிடியிலே சிக்கித் தவித்த தொழிலாளர்வர்க்கத்தின் மனக்கண் திறந்தது. பாடுபடும் பாட்டாளி வர்க்கம் மூச்சுவிடமுயன்றது. தொழிலாளி முதலாளி வர்க்கத்தை சீர்தூக்கிப் பார்த்தனர். விளக்கின் உதவியினுல்தான் வீடு வெளிச்சம் பெறுகிறது என்பதை நன்கு உணர்ந்தனர் தொழிலாளிகள்.

### சிக்காக்கோ புரட்சி

அதைப் போல நாமும் நம் உடலை இனியும் முதலாளித்துவ ஆதிக்கத்துக்கு அர்ப்பணிக்க முடியாது என்பதை விளங்கினர். சுதந்திரதாகம் சுடர்விட்டு எரிந்தது. பாட்டாளி மக்கள்தம் அகக்கண் திறந்ததால் சுதந்திர உணர்ச்சியினுல் உந்தப்பட்டு துடித்தனர். ஆவேசம் கொண்டு கொதித்தெழுந்தார்கள். கொடியவர்களின் கொடுங்கோல் ஆட்சிக்கோர் முடிவுகட்ட ஒன்று திரண்டனர். போராட்டமே சுபீட்சத்தின் அடிச்சுவடு என்பதை விளங்கிக்கொண்டனர். அவ்வளவுதான்.

அமெரிக்காவிலே அன்று முதலாளி என்ற பெயரில் பணம் படைத்த குபேரர்களின் கொடுமை எவ்வளவோ! கொடுமையின் கோரப்பிடியிலே சிக்கித் தவித்த மக்கள் புரட்சியை ஆரம்பித்தனர். 1886-ம் ஆண்டு மே மாதம் சிக்காக்கோ நகரில்தான் இப்புரட்சி ஆரம்பித்தது. மக்கள் புரட்சி செய்து எட்டு மணி நேரவேலைக்குவித்திட்டனர்.

**மே**தினம் இருண்ட வாழ்வில் விடிவு தந்த திருநாள். கெடுமையே லட்சியமெனக் கொண்ட கொடியவர்களின் கோரப் பிடியிலே சிக்கித் தவித்த மக்கள் விடுகலை கண்ட நன்னுள். பணமென்னும் பஞ்சணை மெத்தையிலே, படுத்துறங்கும் குபேரர்களின் கொட்டம் அடக்கி கிடுகிடுக்க வைத்த நாள். ஆளப் பிறந்தவர்களை ஆட்டிவைத்த நாள். குமுறும் எரிமலை, கொந்தளிக்கும் கடல் இவைகளைவிடப் பயங்கரமானது பாட்டாளி உலகம் என்பதை வலியுறுத்திய பொன்னுள். அதுவே மேதின நன்னுள்.

அடிமைகளாக அடக்கி கொடுமையின் கோரப் பிடியிலே சிக்கித் தவித்த, சிறை கண்ட மக்கள் வாழ்விலே நிறைகண்ட இந்த மே தினத்திலே பாடுபடும் பாட்டாளி அனைவரும், ஒன்று கூடி ஒற்றுமை முழக்கம் செய்து, உழைப்பாளிகளை உதாசினம் செய்யும் உலுத்தர்களுக்கு தமது சேவை எவ்வளவு தேவை என்பதை உணர்த்திக்காட்ட, உழைத்து உழைத்து உருமாறி உரிமையிழந்து தவிக்கும் நாம் கொடுமைபுரிவோர் கொட்டத்தை அடக்கி உரிமை பெற இன்றே உறுதி பூணுவோம்.

**கே. வி. நாகலிங்கம்**
**தெல்தெனியா**

மனிதரை மனிதராக மதித்து நடக்கத் தெரியாத மதியீனர்கள், மதங்கொண்டோர், ஆணவக்காரர்கள், இரக்கமற்ற அரக்கமனங் கொண்டோர், கொடுமையே லட்சியமென எண்ணிய குபேரர்கள், மக்களை மாக்களாக மதித்து வேட்டையாடினர். அண்டம் கிடுகிடுக்க இடியோசை போல வெடியோசைகள், துடிதுடிக்கும் உயிர்களின் கூக்குரல், மாண்டொழியும் மக்களின் கோரக் காட்சி, அங்கங்கள் பல இழந்து அவதியுறும் குற்றுயிர்கள், இரத்த வெள்ளத்திலே மிதந்தன. சிக்காக்கோ நகரம் செந்நீரால் மூழ்கியது. பச்சிளங் குழந்தைகளின் பரிதாபக் குரல் ஒரு பக்கமும், மக்களின் நிலை கண்டு கதறியழும் பெற்ரேரின் குரல் மறுபக்கமுமாக ஆயிரக்கணக்கானேர் அலறித் துடித்தனர். அச்சமயம் யாரை யார் காப்பாற்றுவது?




### உயிர்துறந்த மகா தியாகிகள்

ஆனுல்...உழைத்து உழைத்து உருக்குலைந்து உறுதி பெற்ற உடலையுடைய அந்த உத்தமர்கள் உடலிலிருந்து கொட்டும் இரத்தத்தையும் கண்டு அஞ்சாது மன உறுதியுடன், 'உடலிலே ஒரு சொட்டு இரத்தம் உள்ள வரை உரிமைக்காக போராடியே தீருவோம்! குபேரர்களின் கொடுமையைக் கண்டு அஞ்சோம்! இறுதி மூச்சுவரை சுதந்திரமே எம் லட்சியம்' என்று ஒற்றுமைக் குரல் எழுப்பி ஒன்றுதிரண்டு முதலாளித்துவ வெறியை எதிர்த்துப் போரிட்டனர்.

அஞ்சா மன உறுதியோடு இறந்தோர் போக இருப்போர் ஒன்றுதிரண்டு எதிர்ப்போம், உரிமையைப் பெறுவோம், அல்லது ஒன்ருக மடிவோம் என்ற ஒரே எண்ணத்தோடு அயராது போராடினர். உடலைவிட்டு உயிர் பிரியும் நேரத்திலும் உத்தமர்கள் உரிமையைப் பெற இறைவனை வேண்டிய வண்ணம் உயிர் துறந்தனர். உக்கிரமான போர் நடந்தது.

முடிவு?...

ஆணவத் திமிர் மாண்டது. வேற்றுமை நீங்கியது. ஒற்றுமை நிலைத்தது. மக்களின் சிம்மக் குரல் ஓங்கியது. மாநிலம் போற்றியது மகா தியாகிகளை. உயிர்துறந்த உத்தமர்களுக்காக உலகம் கண்ணீர் சிந்திற்று. உயிரை அர்ப்பணித்த உத்தமர்களின் ஆத்ம சாந்திக்காக மக்கள் இறைவனை வேண்டினர். இன்ப மணம் கமழ எங்கும் பாட்டாளி பொன்னுன மேதினத்தைப் போற்றிப் புகழ்ந்தான்.

### பலாபலன்

மே தினம் அகில உலக மக்களாலும் கொண்டாடப்படுகிறது. உழைப்பாளி மக்களாகிய நாம் ஒன்றுகூடி பகை நீங்கி நேர்மையான முறையிலே நீதியை நிலைநாட்ட பாட்டாளியே நாட்டின் உயிர் நாடி என்பதை நிரூபிக்க தொழிலாளர் உலமதை சிருஷ்டிப்போமாக!

மலையகம் வாழும் உரிமை யிழந்து வாடும் பாட்டாளி

(13-ம் பக்கம் பார்க்க)

## வேண்டுகோள்

கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் (எஸ். எஸ். சி) சித்தியடைந்த இலங்கைப் பிரஜாவுரிமை உடைய மலைநாட்டைச் சேர்ந்த இருபாலாரிடமிருந்தும் இலங்கைத் தமிழரசுக் கட்சி விபரம் கோரியுள்ளது. முழுப் பெயர், முகவரி, மற்றும் விபரங்களைக் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

நிர்வாகச் செயலாளர்,
இலங்கைத் தமிழரசுக் கட்சி
16, அல்பிரட் கவுஸ் தோட்டம்,
கொழும்பு-3


# 100 பரிசுகள் பெற்றே ஆக வேண்டும்

## புதிய சூப்பர் குயிங்க் "உங்கள் பேனுவுக்கான மை" போட்டி

### அனைவரும் பங்கு பற்றலாம்




இந்தப் படத்தில் காணப்படும் கைகள் யாவும் எல்லா பேனுக்களுக்கும் பாவிப்பதற்கு நேர்த்தியர்ன சூப்பர் குயிங்க்கையே நோக்கிச் செல்கின்றன. ஆனுல் ஏதோ ஒன்று அவர்கள் ஒவ்வொருவரையும் திகைப்படையச் செய்கிறது.

............இந்த கவர்ச்சிகரமான ஏழு நிறங்களில் எதை தெரிவு செய்வது?

**நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம்**

1. ஏழு நிறங்களையும் நன்ருக கவனியுங்கள். பின்னர் உங்களுக்குப் பிடித்தமான நிறங்களை வரிசைக் கிரமப்படி எழுதுங்கள்.
2. பிரவேச கூப்பனில் உங்களுக்குப் பிடித்தமான ஏழு நிறங்களையும் வரிசைக் கிரமப்படி எழுதுங்கள். உதாரணமாக, நிரந்தர கறுப்பு உங்களுக்குப் பிடித்தமானதாக இருந்தால் 1 என்ற எண்ணை நிரந்தரக் கறுப்புக் கெதிரே குறியுங்கள். இப்படியாக ஏழு எண்ணையும் குறிப்பிடுங்கள்.
3. ஒரு துண்டு கடுதாசியில் சூப்பர் குயிங்க் சம்பந்தமான கீழ்க் காணும் சுலோகத்தை 10க்கு மேற்படாத சொற்களை உபயோகித்து பூர்த்தி செய்யுங்கள். "சூப்பர் குயுங்க் மை மட்டுமே......................"
4. பூர்த்தி செய்யப்பட்ட பிரவேசக் கூப்பனையும் சுலோகத்தையும் 1964 ஜூலை 6ம் திகதிக்குப் பிந்தாமல் கீழ்க் காணும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும். சூப்பர் குயிங்க் "உங்கள் பேனுவுக்கான மை" த. பெட்டி. 1301, கொழும்பு.
5. உங்கள் பிரவேசக் கூப்பனுடன் சூப்பர் குயிங்க் பெட்டியின் மேலட்டையையும் சேர்த்து அனுப்புங்கள்.

**கீழ்க் காணும் விதிகளை கவனமாக வாசியுங்கள்**

அ. பிரவேசப் பத்திரங்கள் கீழ்க்காணும் கூப்பனில் அல்லது உங்கள் சூப்பர் குயிங்க் வியாபாரியிடம் கிடைக்கக் கூடிய பாரங்களில் பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும். ஒருவர் எத்தனை கூப்பன் வேண்டுமென்ருலும் அனுப்பலாம். ஆனுல் ஒவ்வொரு பிரவேசக் கூப்பனுடனும் ஒரு சூப்பர் குயிங்க் பெட்டியின் மேலட்டையை இணைத்து அனுப்ப வேண்டும்.

ஆ. எல்லா பிரவேசப் பத்திரகளும் பரிசிலனை செய்யப்படும். நடுவர்களின் அபிப்பிராயப்படி, வரிசைக் கிரமப்படியாக நிறங்களை தெரிவு செய்து சரியாக சுலோகத்தை பூர்த்தி செய்து அனுப்பிய முதல் 100 பேர்களுக்கும் ரூ. 20-00 க்கான வெகுமதி பத்திரம் வழங்கப்படும். அதை உங்கள் சூப்பர் குயிங்க் சில்லறை வியாபாரியிடம் கொடுத்து மாற்றிக் கொள்ளலாம். அல்லது கொழும்பு 11 பாங்ஷால் வீதியிலுள்ள மெஸர்ஸ் ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்டில் கொடுத்து மாற்றிக் கொள்ளலாம். இந்த வெகுமதி சீட்டுகளை விட நீதிபதிகளின் அபிப்பிராயப்படி மிக நேர்த்தியான பிரவேசக் கூப்பன்களை அனுப்பிய முதல் மூன்று மனுதாரர்களுக்கும் பாக்கர் VP பேனுவும் பென்சில் செட்டும வழங்கப்படும்.

இ. பரிசு பெற்றவர்களுக்கு பரிசில்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். பரிசு கோரி யாரும் எழுதவேண்டியதில்லை. பரிசு பெற்றவர்களின் பூரா பட்டியலும் ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்டில் அல்லது பிரபல சூப்பர் குயிங்க் வியாபாரியிடம் 1964 ஆகஸ்ட் 15ம் திகதிதொடக்கம் கிடைக்கும்.

ஈ. நீதிபதிகளின் தீர்ப்பே இறுதியானதும் சட்ட வரம்பிற்குட்பட்டதுமாகும். இந்தப் போட்டி சம்பந்தமாக எந்த விதகடிதத் தொடர்பும் விரும்பப்பட மாட்டாது.

உ. போட்டி விதிகளுக்கு அமையாத மனுதார் போட்டியிலிருந்து விலக்கப்படக் கூடும்.

ஊ. போட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்ட சுலோகங்கள் அனைத்தும் மெஸர்ஸ் ராஜேந்திரம் லிமிட்டெட்டின் உடமையாகக் கணிக்கப்படும்.

எ. பிரவேசப் பத்திரங்கள் சேதமடைதல், காலம் தாழ்த்திக் கிடைத்தல், காணுமற் போதல் ஆகியவற்றிற்கு எவ்வித பொறுப்பும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஏ. இந்தப் போட்டியில் மெஸர்ஸ் ராஜேந்திரம் லிமிட்டெட் அவர்க [illegible] பரிபவர்கள் அவர்களின் விளம்பரப் பிரதிநிதிகள் அல்லது இந்தப் போட்டியில் நேரடியாக தொடர் [illegible] இலங்கை வாசிகள் அனைவரும் பங்கு பற்றலாம்.

**பிரவேசக் கூப்பன்**

பெயர் ..................................................

விலாசம் ..................................................

..................................................

நிரந்தர கறுப்பு............ நிரந்தர நீலம்............

நிரந்தர நீலம்—கறுப்பு............ நிரந்தர சிவப்பு............

நிரந்தர டர்குவயிஸ்............ நிரந்தர பச்சை............

ரோயல் புளு வாஷபல்............

இந்தப் போட்டிக்கான விதிகளை வாசித்து, அவற்றிற்கமைந்து நடக்க நான் சம்மதிக்கிறேன்.

..................................................
கையொப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலீஸ்காரர் தொடுத்த 'அன்பு' பாணம்

## நடுச்சாம வேளையிலே நரகவேதனையை தந்தது

## குமரி முதல் சென்னை வரை-4

## மைனர் தேடிப்பிடித்த முனியாண்டி ஓட்டல்

**இரவு வேளையில் இத்தனைபேரும் இரண்டு மைல்களைத் தாண்டிச் செல்லுவதா? கூடாது. இங்கேயே தங்குங்கள். இவ்வாறு கூறிய பொலீஸ் 'ஏட்டு'க்கு வெள்ளெழுத்தாம். பெண்கள் மட்டும் தங்கும் இடத்தில் ஆண்களையும் தங்க விட்டு, நித்திராதேவியின் ஆலிங்கனத்தில் மயங்கியிருக்கும் வேளையில் சங்கடத்தை ஏற்படுத்தியதற்கு வேறு என்ன காரணம் … …?**

"நீங்கள் தான் அந்த ஆசாமியா?"

'எந்த ஆசாமி?' என்று கேட்டுவைக்கின்றோம் நாம்.

'கோவையிலிருந்து 'எக்ஸ்பிரஸ்' பஸ்ஸில் இங்கு முன்னுடியே வந்துவிட்ட ஆள் நீங்கள் தானு?'

'ஏன் அப்படி வரக்கூடாதோ?' என்று நாக்குழற நாம் கேட்கின்றோம்.

'உஷ்! கேட்டதற்குப் பதில். நீங்களா? இல்லையா?'

'நாம் தான்'

'முன்னுடியே வந்து, தங்குவதற்கு இடம் பிடித்து வைக்கின்றோம்' என்றீரே. இடம் பார்த்தாயிற்ரு?'

'பா…பா…'

'யோவ்! உம்மைச் 'சரிகமபதநி' பாடச் சொல்லவில்லை, இடம் பார்த்தாயிற்ரு என்றுகேட்கின்றேன்'

'பா…பார்த்தாயிற்று'

'உமக்கு என்ன திக்குவாயா? 'பார்த்தாயிற்று' என்று ஏகவசனத்தில் சொல்லுவதற்கு என்ன கேடு? சரி, எங்கே இடம் பார்த்திருக்கின்றீர்?'

'வந்து, வந்து திருச்சி 'டவுன்ஹால்' மைதானத்தில்!'

'வாட்? வாட்?'

'ஓகோ! உங்களுக்கும் திக்குவாய் தானு? 'வாட்? வாட்?' என்று வாக்கியத்தை இரட்டிக்கின்றீர்களே?'-உச்சிப்பிள்ளையார் உதவுவார் என்ற தைரியத்தில் இப்படித் துணிந்து கேட்டுவிடுகின்றோம்.

'திக்கு வாயோ? பொக்கு வாயோ? இருந்துவிட்டுப் போகட்டும். விஷயத்துக்கு வாரும். 'டவுன் ஹால்' மைதானத்திலா பார்த்தீர்?'

'ஆமாம்'

'என்ன பார்த்தீர்?'

'கூட்டம் பார்த்தோம்'

'என்ன கூட்டம்?'

'தேர்தல் கூட்டம்'

'என்ன தேர்தல்?'

'முனிஸிபல் தேர்தல்! ஆ! ஞாபகம் வருகின்றது. முனிஸிபல் சத்திரத்தில் இடம் பார்த்தோம்'

'பேஷ்! இடம் கிடைத்ததா?'

'சத்திரத்திலேயே இடம் இல்லை என்று விட்டார்கள். கூட்டம் ஜாஸ்தியாம்!'

'அப்புறம் என்ன செய்தீர்?'

'சாமியைச் சரணடைந்தேன்'

'எந்தச் சாமியை?'

'சின்னச் சாமியை'

'ஓகோ! சின்னச்சாமி சத்திரத்தையா சொல்கின்றீர்?'

'ஆமாம்'

'பிளேஸ்' கிடைத்ததா?'

'பிள்ளையார் கிருபையில் பேஷாகக் கிடைத்தது'

'சரி இப்போ என்ன செய்யப் போகின்றீர்?'

'சத்திரத்துக்குப் போகப் போகின்றோம்'

'போக முடியாது!'

'எந்த 'செக்ஷ'னின் படி?'

'அன்பு' என்ற 'செக்ஷ'னின்படி!'

'நீங்கள்…நீங்கள்…'

'பார்த்திர்களா? மறுபடியும் திக்க ஆரம்பித்து விட்டீர்கள்!'

'திக்கவில்லை ஸார்; திக்குமுக்காடுகின்றோம்! உங்கள் அன்பு அப்படி எங்களை ஆட்கொண்டிருக்கின்றது.'

'இந்த இரவு வேளையில் இரண்டுமைலுக்குமேலுள்ள சத்திரத்துக்கு நீங்கள் போய்க் கஷ்டப்படவேண்டாம். உங்களோடு இருக்கும் சாமான் சக்கட்டைப் பார்த்

நவம்

தால், குறைந்தது மூன்று ஜட்கா வண்டிகளாவது வேண்டும். இந்த இருட்டு வேளையில் வண்டிக்காரன் ஜாஸ்தி சத்தம் (கூலி) கேட்பான். இராப் பொழுதை இங்கேயே கழித்து விடியற் காலையில் டவுண் பஸ்ஸில் சத்திரத்துக்குப் போய்ச் சேருங்கள்' என்றுர் அந்தப் பொலீஸ்காரர்.

'இப்படியும் ஓர் அன்பா?' என்று வியக்கின்றோம் நாம். பின்னுல், நடு ஜாமத்தில் நம் நித்திரைக்கு நேர்ந்த பங்கத்தைச் சொல்லிக்காட்டி ஆறுதல் அடைய அந்த அன்புள்ளம் கொண்ட பொலீஸ்காரர் அகப்படவில்லை!

நாம் இப்படி இந்தப் பொலீஸ்காரரோடு சம்பாஷித்துக் கொண்டிருக்கும் போது திடீரென்று எதிர்த் திசையிலிருந்து, 'கண்டு பிடித்துவிட்டேன்!' என்று ஒரு குரல் கேட்கின்றது.

குரல் வந்த திக்கில் நம் பார்வையை மேய விடுகின்றோம்.

### மைனர் தேடிய ஓட்டல்

நமது யாத்திரைக் கோஷ்டியிலிருந்த ஒரு 'மைனர்' ஏதோ சாதிக்கமுடியாதவொன்றைச் சாதித்தவர்போல் வந்துகொண்டிருக்கின்றார்.

'என்ன 'மைனர்' ஸார்? அப்படி என்னத்தைக் கண்டு பிடித்துவிட்டீர்?' என்று வினவுகின்றார் கூட நின்ற பொலீஸ்காரர்.

'மதுரை முனியாண்டி' ஓட்டலை!' என்று பதில் தருகின்றார் நமது மைனர்.

'அங்கு யாராவது சொந்தக்காரர்கள் இருக்கிறார்களா?' என்று கேட்டார் பொலீஸ் காரர்

இதற்குள் நமக்கு விஷயம் புரிந்து விடுகின்றது. நிலைமையை விளக்க முற்படுகின்றோம் நாம்.

'ஸார்! உங்களுக்கு விஷயம் தெரியுமா? இந்த 'மைனர்' இருக்கின்றாரே 'மைனர்!' இவர் முற்பிறவியில் 'நளபாக பூஷ'ணுகப் பிறந்திருக்கவேண்டும். இந்தப் பிரயாணத்தில் நமது நாவுக்கு ருசியான உணவு எங்கே கிடைக்கும் என்பதைத் தமது நாவின் மூலமாகத் 'துப்பு'க்கண்டு-தமது நாசியின் மூலமாக மோப்பம் பிடித்து- நமக்கு சிபாரிசு செய்து பெருந் தொண்டாற்றி வருகின்றார். அவருடைய கண்டுபிடிப்புத்தான் இந்த 'மதுரை முனியாண்டி' ஓட்டல்! நாம் சென்ற ஒவ்வோர் ஊரிலும் 'பிராஞ்சுகள்' இருக்கின்றன இந்த ஓட்டலுக்கு. நாம் எந்த ஊரில் கால் வைத்தாலும் முதலில் இந்த 'மைன'ரின் கால்கள், 'மதுரை முனியாண்டி' ஓட்டலைக் கண்டுபிடிப்பதிலேயே செயல்படும். அப்புறம்தான் கோயிலோ குளமோ.'

'அப்படியா சமாச்சாரம்? சாப்பாட்டைப் பொறுத்த வகையில் நல்ல தரமான ரசிகர் தான் உங்கள் 'மைனர்'! நல்ல ஓட்டலாகத் தான் 'செலக்ட்' பண்ணியிருக்கின்றார். எக்ஸலன்ட்!' என்று 'ஸர்டிபிக்கட்' கொடுத்தார்பொலீஸ்காரர்.

அப்போது பார்க்கவேண்டுமே மைனரை; பல்லெல்லாம் வாயாக-தப்பு; தப்பு! வாயெல்லாம் பல்லாக நின்றுர் அவர்.

முனியாண்டி ஓட்டல் முற்றுகையிடப்பட்டது! சாப்பாட்டுக்கு மேல் தலைக்கு இரண்டு மூன்றென்று மலைவாழைப் பழங்களை உள்ளே தள்ளி விட்டு (இந்த மலைவாழைப் பழம் இருக்கின்றதே! சுத்த மோசம்! பிரயாணம் முடிந்துஇலங்கைக்கு மீண்ட நம்மை இங்குள்ள வாழைப் பழங்களைத் தொட்டுக்கூடப் பார்க்க முடியாமல் தடை போட்டு விட்டதே! ருசி என்றால் இப்படியும் தேவாமிர்தமாய் இருப்பதா? சைக்!) ரெயில் நிலைத்திலுள்ள தங்கும் கரைக்கு வருகின்றோம்.

தமக்குப் பத்து மணியுடன் 'டூட்டி' முடிவதாகவும், காலையில் 6 மணிக்கெல்லாம் வந்து நம்மையெல்லாம் பார்ப்பதாகவும், மற்றப் பொலீசாரிடம் நம்மைப் 'பாரம்' கொடுத்திருப்பதாகவும், நிம்மதியாகத் தங்கும் படியும் சொல்லிவிட்டு 'குட்நைட்' கூறிப் பிரிந்தார், அந்தப் பொலீஸ்காரர்.

அவரையே பார்த்துக் கொண்டு நின்ற நம் எண்ணத்தில், நம் நாட்டுப் பொலீசாரின் போக்கு ஒரு கணம் நிழலாடி மறைகின்றது. 'ஹூம்' என்று பெருமூச்சு விட்டுக் கொண்டு குறட்டைவிடத் தயாராகின்றோம் நாம்.

### கும்பகர்ண வதைப் படலம்

ஆழ்ந்த நித்திரையில் இருந்த நம் முதுகைத்தட்டி யாரோ, 'மிஸ்டர்! மிஸ்டர்! என்று எழுப்புகின்றார்கள்.

கண்ணைப் பிய்த்துக் கொண்டு தலையை உயர்த்திப் பார்க்கின்றோம். குழந்தைகளும், பெரியவர்களுமாய் அடிதலைமாறித் துயிலை அநுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டு, நம்மை எழுப்பிய புண்ணியவான் 'யார்?' என்று பார்க்கின்றோம்.

எழுப்பியது சிவப்புத் தொப்பி — பொலீஸ்காரன்! முற்றிலும் புதியவராகக் காணப்பட்ட அவர் இங்கு பெண்கள் மட்டும் தான் படுக்க அனுமதிக்கப்படுவர். அதோ தெளிவாகப் 'போர்டு' கூடப் போடப்பட்டிருக்கின்றது. அப்படியிருக்க ஆண்களாகிய நீங்களெல்லாம் படுக்கலாமோ?" என்று விளக்கம்தருகின்றார்.

"நாங்களெல்லாம் ஒரே 'பாமிலி'…… தவிரவும் உங்களைப் போல ஒரு பொலீஸ்காரர்தான் இங்கு படுக்கும் படி கூறிவிட்டுப் போனுர்" என்கின்றோம் நாம்.

"யார்? இரவு 10 மணி மட்டும் 'டூட்டி'யில் இருந்த 'ஏட்'டா? அவனுக்குச் சற்று வெள்ளெழுத்து. அதிலும் இரவு வேளைகளில் கண்ணே முற்ருகத் தெரிவதில்லை; ஆணுக்கும், பெண்ணுக்கும் வித்தியாசம் தெரியாமல் இப்படி நடந்திருக்கிறுன். நீங்கள் உடனே இடத்தைக் காலி பண்ணுங்கள். பெண்களும், குழந்தைகளும் வேண்டுமானுல் தூங்கட்டும்" என்று சொல்லி எமது யாத்திரைக் கோஷ்டியில் இருந்த எல்லா ஆண்களையும் எழுப்பத் தொடங்கி விட்டார்!

கும்பகர்ணவதைப் படலம் பாடிக் கொண்டிருந்த வர்ணன், கோபால்; வாய் புலம்பிக் கொண்டிருந்த 'மைனர்' மகாலிங்கம் சாமான்கள் திருட்டுப்போய் விடுமே என்ற கவலையில் அரைத்தூக்கம் போட்டுக் கொண்டிருந்த நடராஜா— என்று ஒவ்வொருவராக, பொலீஸ்காரன் என்ற எமதூதனைச் சபித்துக் கொண்டு எழுந்திருக்கத் தொடங்கினர்……

மூலை முடுக்கெல்லாம் தேடி எல்லா ஆண்களையும் இடைத்தூக்கத்தில் இப்படி வெளியேற்றிய அந்தப் பொலீஸ் புலி; அதோ 'ரூமுக்கு' மத்தியில் படுத்திருக்கும் அசல் ஆண்பிள்ளை ஒருவரை மட்டும் எழுப்பாமல் சென்று விடுகின்றுனே! ஒரு வேளை……ஒரு வேளை இவருக்கும் பார்வை 'கம்மி'யோ?… …

(வளரும்)

## அமெரிக்க விஞ்ஞான அரங்க திரைப்படங்கள்

வளர்ந்து வரும் உலகிற்கு விஞ்ஞான ஆராய்ச்சிகள் விளக்குப் போன்றுள்ளன. விஞ்ஞானிகள் தங்கள் ஆராய்ச்சிக் கண்களால் காணும் விந்தைகளனைத்தையும, 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற கருத்துடன் பொது மக்களுக்குக் காண்பித்து அவர்களுக்கு அறிவு புகட்டுகிறுர்கள். இத்துறையில் முதன்மை பெற்று இயங்குவது தான் அமெரிக்க விஞ்ஞான திரைப்படக் கழகம்.

இயற்கை நல்கும் விந்தைகளை, சாதாரண ஊனக் கண்களுக்குப் புலப்படாத புதுமைகளை அமெரிக்க விஞ்ஞானிகள் வண்ணத் திரைப் படங்களில் புகுத்தி நம்மை மெய் மறக்க வைக்கிறுர்கள். பூக்கள் மலர்வதையும் ஒளியின் ஜாலங்களையும், நீரின் விளையாடல்களையும், காற்றின் அற்புதச் செயல்களையும், கடலின் அடியில் காணும் அற்புதங்களையும், கரை புரளும் கடலலையின் வேகங்களையும் காட்டி நம் கருத்துக்கு விருந்தளிக்கின்றுர்கள்.

மனிதனின் உறுப்புக்களையும் உறுப்புக்களை உண்டாக்கும் ஜீவ அணுக்களையும் தந்திரக் காட்சிகளின் மூலம் விளக்கி நம்மை மெய் சிலிர்க்க வைத்து விடுகிறுர்கள்.

விஞ்ஞானத் துறையின் சகல பிரிவுகளையும் அறியக் கூடிய வாய்ப்பை வழங்கும் வகையில் அமெரிக்க விஞ்ஞானத் திரைப்படக் கழகத்தினர் இலங்கையில் கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி ஆகிய இடங்களில் திரைப்படக் காட்சிகளை ஒழுங்கு செய்துள்ளனர்.

விஞ்ஞான அறிஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொது மக்கள் அனைவருக்கும் பெரு நன்மை பயக்கும் இப்படங்களை இலங்கையின் ஏனைய பகுதி மக்களும் பார்த்துப் பயனடைய வழி வகை செய்ய வேண்டியது இன்றியமையாததாகும்.

வாழ்க்கையில் எப்போதாவது ஒரு முறைதான் ஏற்படக் கூடிய இந்த அரிய வாய்ப்பை ஓரளவு சகல மக்களும் அனுபவிக்கும் வண்ணம் சம்பந்தப்பட்டவர்கள் செயற்பட வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறோம்.

## சுதந்திரன் விற்பனையாளர்கள்

**காங்கேசன்துறை**
த. கனகசபை,
பிரதான வீதி
காங்கேசன்துறை.

**தெல்லிப்பளை**
இ. பொன்னையா,
பத்திரிகை விற்பனையாளர்,
தெல்லிப்பளை.

**மாவிட்டபுரம்**
ராஜா ஸ்டோர்ஸ்,
பிரதான வீதி
மாவிட்டபுரம்.

**மல்லாகம்**
சி. முருகையா,
கூட்டுறவு கடை
மல்லாகம்.

**சுன்னுகம்**
என். எஸ். சோமசுந்தரம்,
சந்திக்கடை
சுன்னுகம்.

தி. ச. சுந்தரம்,
இன்ப நிலையம்
சுன்னுகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1964 மே மாதம் 3-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## மே தினச் சங்கற்பம்

மே தினம் 8 மணி நேர வேலைக்காக அமெரிக்கத்தொழிலாளர் போராட்டம் நடத்தி வெற்றிபெற்ற தினம். இந்த நந்நாளை இன்று உலகப் பாட்டாளிமக்கள் ஒரு போராட்ட தினமாகவே கொண்டாடுகின்றனர்.

இலங்கைத் தொழிலாளர்கள் இனவாரியாகவும், கட்சிவாரியாகவும் பிரிந்து மேதினத்தைக்கொண்டாடுகின்றனர். இவ்வருட மேதினத்தில் சிறப்பான அம்சம் தமிழ்பேசும் உழைப்பாளிமக்கள் பிரமாண்டமான அளவில் மேதினம் கொண்டாடுவதே.

இவ்வருட மேநாள் தமிழ்பேசும் மக்களுக்கு இருவகையில் முக்கியத்துவம் பெறுகிறது. ஒன்று, மொழிவழித் தொழிற்சங்கங்களின் துரித வளர்ச்சியை எடுத்துக்காட்டும் நாள். மற்றது, தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்கள் மொழிவழக்கில் பெற்றுள்ள மாபெரும் வெற்றியைக் கொண்டாடும் நாள்.

இவ்வாண்டில்தமிழ்பேசும் தொழிற்சங்கங்கள் துரிதமாக வளர்ச்சியடைந்து வந்துள்ளன. மலையகத் தோட்டமக்களிடையே இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் வளர்ச்சி குறிப்பிடத்தக்கது. இதர தொழிற்சங்கங்கள் பொருளாதாரப் பிரச்சினைகளில் மட்டும் கவனம் செலுத்திக்கொண்டிருக்கும்போது இ. தொ. கழகம் குடியுரிமை, வாக்குரிமை கல்வியுரிமை ஆகிய அடிப்படை உரிமைகளுக்காக குரலெழுப்பி வருவதால் தோட்டத் தமிழர்கள் கழகக்கொடியின் கீழ் ஆயிரக்கணக்கில் திரளத் தொடங்கியுள்ளனர்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் தன்மீது ஏவப்பட்ட எதிர்ப்புக்கணைகளையெல்லாம் முறியடித்து, நீதிமன்றத்தில் நடத்திய சட்டப் போராட்டத்திலும் முழு வெற்றிபெற்று வீரமிக்க தொழிற்சங்கமாக மலைபோல நிமிர்ந்து நிற்கிறது.

இதர தொழிற்துறைகளிலும் மொழிவழித் தொழிற்சங்கங்கள் நிறுவப்பெற்று கனவேகத்தில் முன்னேறுகின்றன.

வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலையில் மொழிவழித் தொழிற்சங்கம் வரலாற்றுப் புகழ்பெற்ற போராட்டமொன்றினை நடத்தி, தனிச் சிங்கள அமுலை முறியடித்து வாகைமாலை சூடியது.

தமிழ்பேசும் அரசாங்க ஊழியர் சங்கங்களை இணைத்து 'தொழிற்சங்க கூட்டணி' யொன்றும் உருவாகியுள்ளது.

இவ்வாறு இலங்கைத் தொழிற்சங்க வரலாற்றிலே ஒரு புதிய திருப்பத்தை மொழிவழித் தொழிற்சங்கங்கள் இவ்வாண்டிலே ஏற்படுத்தியுள்ளன. இந்த வளர்ச்சி அரசாங்கத் தலைவர்களை மட்டுமின்றி இதர தொழிற்சங்கத் தலைவர்களையும் அதிர்ச்சிபெறச் செய்துள்ளது.

மொழி வழக்கின் தீர்ப்பு தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்களுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். இந்த வெற்றி அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் மதிப்பை உயர்த்தியிருப்பதுடன், அரசாங்க ஊழியர்கள் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து நடக்கவும் உதவியுள்ளது.

தமிழ்பேசும்ஊழியர்களை நட்டாற்றில்கைவிட்டு, துரோகப்பாதையில் சென்றதொழிற்சங்கங்களுக்கும், திரைமறைவில் சிங்களம் படித்த ஊழியர்களுக்கும் இது ஒரு படிப்பினையைக் கற்றுக் கொடுத்துள்ளது. அவர்கள் இதுபோன்ற இன்னும் பல படிப்பினைகளைப் பெறும் நாள் வெகு தூரத்திலில்லை.

தமிழ்மொழிக்குக் கிடைத்த இந்த வெற்றியைத் தமிழ்பேசும் பாட்டாளிமக்கள் இந்த மேதினத்தில்குதூகலமாகக் கொண்டாடுகின்றனர்.

மொழிப் பிரச்சினை தீர உறுதுணையாக அமைந்துள்ளது மொழிவழக்கின் தீர்ப்பு. மொழிப் பிணக்கைத் தீர்க்க மனமுண்டானால், ஆட்சியாளர் இத்தீர்ப்பின் மூலம் கிடைத்த வாய்ப்பைச் சரிவரப் பயன்படுத்தட்டும்.

'அப்பீல்' செய்து, வழக்கைத் தொடர்ந்துநடத்தவிரும்பினால் மொழிப்பிரச்சினைத் தீர்வில் அவர்களுக்கு ஆர்வமில்லை என்பது அம்பலமாவதுடன், இன்னும் பல மொழிவழக்குகள் தோன்ற வழிபிறக்கலாம் என்பதையும் ஆட்சியாளர் உணரவேண்டும்.

சட்டப் போராட்டங்கள் மூலமாகவே இழந்த உரிமைகளைப் பெற்றுவிட முடியாது-நமது போராட்டங்களில் அதுவும் ஒன்று என்பதைத் தமிழ்பேசும் பாட்டாளி மக்கள் உணர்தல்வேண்டும்.

'அடிப்படை உரிமைகள் அனைத்தையும் பெற்றே தீருவோம்' என்று மேதினத்தன்று அவர்கள் சங்கற்பம் செய்துகொள்ளவேண்டும்.

உலகத் தொழிலாளர்களே ஒன்றுசேருங்கள்! என்ற கோஷத்துக்குத்தமிழ்பேசும் தொழிலாளர்கள் எதிர்ப்பானவர்களல்ல. இழந்த உரிமைகளை மீட்க உலகத்தொழிலாளர்களின் ஆதரவும் உதவியும் அவர்களுக்குத் தேவை. அத்தகைய ஆதரவை நல்குமாறு குறிப்பாகத் தென்கிழக்காசிய நாடுகளிலுள்ள தொழிலாளர்களுக்கு மேதினத்தன்று வேண்டுகோள் விடுப்பது நல்லபயனை அளிக்கும்.

# பொதுத் தேர்தல் ஐந்து ஆண்டுகட்கு கிடையாதாம்!

எல்லா அம்சங்களிலும் அபிவிருத்தி ஏற்படுத்தும் பொருட்டு புரட்சிகரமான திட்டமொன்றைச் செயல்படுத்தக்கூடிய ஜனநாயகசர்வாதிகாரஆட்சியொன்றினை நிறுவும்பொருட்டுகட்சித்தலைவர்கள் நூரளையில் பேச்சுவார்த்தை நடாத்தினர்கள். இந்தப் பேச்சுவார்த்தைகள் வெற்றிபெறுமானல், அரசியற் சட்டங்களில் அவசியமான திருத்தங்களைச் செய்து 1965 ஜுலையில் பொதுத் தேர்தலை நடத்தாமல், கூட்டு அரசாங்கத்தைத் தொடர்ந்து நடத்துவதற்காக ஐந்து ஆண்டுகளுக்குத்தேர்தலை ஒத்திப் போடுவதற்கு இடமுண்டு.

இவ்வாறு ஒரு செய்தியை 'ரிவிதின' ('தவஸ' பத்திரிகைக் குழுவைச் சேர்ந்த ஞாயிறு பத்திரிகை) கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரசுரித்துள்ளது.

இச்செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

'திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியைப் பிரதமமந்திரி உடனடியாகமறுத்துள்ளார். இஃது எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மாறுதல்களுக்கு ஓர் அறிகுறியென்று கருதலாம்.

### தமிழர் ஆதரவையும் நாடுமாம்

கூட்டாட்சித் திட்டம் அமுலாக்கப்படுமானல், இ. ஐ. முன்னணி-சுதந்திரக் கட்சி கூட்டணி தமிழரசுக் கட்சியின் ஆதரவையும் நாடுமென்பதில் ஐயமில்லை.

பாராளுமன்றத்தில் மூன்றில் இருபங்கு வாக்குகள் உறுதியாகத் தனக்குக் கிடைக்கச் சாத்தியமில்லையேல், பிரதமர் வேறு கட்சிகளுடன் கூட்டுச்சேர முன்வரமாட்டார் என்று கருதலாம்.

வடக்கு,கிழக்குமாகாணங்களில் பிரதிநிதித்துவம் தாங்கும் தமிழரசுக்கட்சியின் ஆதரவுமின்றித் தேவைப்படும் அதிகப்படியான வாக்குகள் பிரதமருக்குக் கிடைக்காமல் போகலாம்.

பொதுத் தேர்தல் நடாத்தப்படவேண்டிய 1965-ம் ஆண்டு ஜுலை மாதத்துக்கு முன்பு நாட்டுக்கு ஏதேனும் நன்மை புரியும் பொருட்டு குறிப்பிட்ட நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்காக இடதுசாரிகளின் நிபந்தனைகளுக்குமட்டும் பிரதமர் சம்மதிப்பார் என்று கருதமுடியாது.

கூட்டுஅரசாங்கம்தோல்வி பெறுமாயின் இ. ஐ. முன்னணியினதும், சுதந்திரக்கட்சியினதும் அரசியல் எதிர்காலம் நாசமாகிவிடும்என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்;

ஆகவே நாட்டின் அத்தியாவசியமான பொருளாதாரச் சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு குறைந்தபட்சம் ஐந்து ஆண்டு வேலைத்திட்டம் ஒன்றின் அடிப்படையிலேயே என். எம். பெரேரா--பிரதமர் பேச்சுவார்த்தைகள் நடைபெறலாம்.

தொழிற்துறையிலும் சமூகத்துறையிலும், பொருளாதாரத்துறையிலும் புரட்சிகரமான மாறுதல்களை செய்யும் நோக்கத்துடன் இந்தவேலைத் திட்டம் தீட்டப்படும். இந்த நோக்கங்களை நிறைவேற்ற [illegible] ஐயமில்லை.

இந்தத் திட்டத்துக்குப் பல்வேறு சருத்துவேற்றுமைகள் தோன்றியுள்ளன. எனினும்இடதுசாரி ஐக்கியமுன்னணியில் சில பகுதிகள் அதனை ஏற்றுக்கொண்டுள்ளன.

நாட்டிலே இத்தகைய புரட்சிகரமான மாறுதலைச் செய்யும்பொருட்டுபொதுத் தேர்தலை இன்னும் ஐந்து

திருமதி சிறிமா இந்தியாவுக்குப் போவார் — இல்லையேல் இந்தியப் பிரதமர் ஸ்ரீ நேரு இலங்கைக்கு வருவார். இது நிச்சயமாக நடைபெறும்.

இரு நாடுகளுக்குமிடையேயுள்ள சரித்திரகாலத் தொடர்பின் காரணமாகத் தானுகவே இப்பிரச்சினை தீர்ந்துவிடும் என்று கருதுவது மதியீனமாகும்.

இந்தியாவில் பிறந்து, அங்கேயே வளர்ந்து, பின்னர் பணம் தேடுவதற்காக இலங்கைக்கு வந்து இங்கே வேரூன்றிக் கொண்ட இந்தியர்கள் இந்தியர்களே என்பதற்குச் சந்திர சூரியர் மட்டுமின்றி, இந்து மகா சமுத்திரமும் சாட்சியாகும். ஆயினும் அவர்களை இந்தியர்களென ஏற்றுக்கொள்ளாமல் இலங்கையின் கழுத்தில்

## சிங்கள இதழ்களில்...

ஆண்டுகளுக்கு ஒத்திப்போடக் கூடுமென்று நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

### இதர நாடுகளின் உதவியை நாடலாம்

இந்தியப் பிரச்சினையைத் தனியாகத் தீர்க்க முடியவில்லையென்ருல், நடுநிலைமை நாடுகளின் உதவியைக் கொண்டு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று 'தவஸ' 28-4-64ம் திகதி எழுதியுள்ள தலையங்கத்தில் கூறுகிறது.

'20 ஆண்டுகளாக இழுபறிபடும் 'நாடற்ற' வர் என்னும் இந்தியர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக விரைவில் இலங்கைப் பிரதமர்

அவர்களைக் கட்டி விட முயற்சி செய்வது இந்திய அரசியல்வாதிகளின் ராஜதந்திரமேயன்றி வேறென்ன?

அத்துடன் சேர்த்துக் கள்ளக் குடியேற்றப் பிரச்சினையையும் ஆராய வேண்டும். ஒரு நிமிடத்துக்கு மூன்று பேர் வீதம் இந்தியக் கள்ளக் குடியேற்றக்காரர்கள் இலங்கையில் வந்திறங்குகிருர்கள். அவர்களில் ஒரு மணி நேரத்துக்கு மூன்று பேர் வீதமே கைது செய்யப்படுகிருர்கள். இதிலிருந்து தமிழ்க் கள்ளக் குடியேற்றக்காரர்களின் தொகை துரிதமாகப் பெருகிவருகிறதென்பது கண்கூடு.' என்று 'தவஸ' தலையங்கம் குறிப்பிடுகிறது.

## தேர்தலை ஒத்திவைக்க........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரிசபையிலிருந்து நீக்கினுலன்றி இடதுசாரிகள் அரசாங்கத்தில் சேரமுடியாதென்று திரு. பிலிப் குணவர்த்தன பகிரங்கமாகக் கூறியது, கூட்டுச்சேர்வதற்காக, டாக்டர் என். எம். செய்த முயற்சிக்கு வெடிவைப்பதாகும் என்று கூறப்படுகிறது.

இந்தக் கோரிக்கையை அவர் கைவிட வேண்டுமென்று கொம்யூனிஸ்ட் கட்சி அவரைக் கடுமையாக நிர்ப்பந்தித்து வருகிறதாம். இதில் கொம்யூனிஸ்ட்கட்சி வெற்றிபெற்ருல்தான் திரு. பிலிப் தனது கோரிக்கையை வற்புறுத்தாமல் விடுவாரென்றும், கோரிக்கையைக் கைவிட்டால்தான் கூட்டு அரசாங்கம் ஏற்பட முடியுமென்றும் தெரிகிறது.

### என். எம். நிதிமந்திரியா?

கூட்டு அரசாங்கம் ஏற்பட்டால் நிதிமந்திரி பதவி டாக்டர் பெரேராவுக்கு வழங்கப்படலாமென்று பேச்சு அடிபடுகிறது. அவர் நிதிமந்திரியாவதைத் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ஆதரிக்கமாட்டாரென்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையே சுதந்திரக் கட்சியில் பிளவு விரிவடைகிறதாம், பாராளுமன்றத்தைக் கலைத்துவிடுவதாகக் கூறி பிரதமர் அவர்களை தனது கருத்துக்கு இணங்கச்செய்து விடுவாரென்றும், தனது கருத்தை அரசாங்க எம். பிகள் ஏற்றுக்கொள்ளாவிட்டால், பாராளுமன்றத்தைக் கலைத்துவிடுவதாகபிரதமர் ஏற்கனவே ஒரு மலைநாட்டு எம். பி.யிடம் கூறியிருப்பதாகவும் விஷயம் தெரிந்த வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

### கண்துடைப்புக் கூட்டமா?

மே 9-ந் திகதி நடைபெறவிருக்கும் சுதந்திரக்கட்சியின் கமிட்டிக் கூட்டத்தில் இதுபற்றி இறுதி முடிவு செய்யப்படலாமென்று கூறப்படுகிறது. ஆனல் அந்தக் கூட்டத்தில் தனக்குத் தேவையான ஆட்களைக் கொண்டுவந்து குவித்து கூட்டாட்சியை ஆதரிப்பவர்கள் தமது எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்வார்களென்றும், அக்கட்சிக் கமிட்டி உறுப்பினர்கள் யார் யாரென்பது சரியாக யாருக்கும் தெரியாதென்றும் சுதந்திரக்கட்சி முக்கியஸ்தர் ஒருவரே கூறியுள்ளார்.

எக்காரணத்தைக் கொண்டும் யு. என். பியை இனி ஆட்சிக்கு வர அனுமதிப்பதில்லையென்று இரு கட்சியினரும் முடிவு செய்துள்ளதாக வதந்தி அடிபடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன வழி நின்று ஒன்றுபட்டுப் போரிடுவோம்

## இழந்த உரிமைகளைப் பெற இதுவே சிறந்த மார்க்கம்


### தொழிற் சங்கத் தலைவர்களின் மே தினச் செய்தி

**இந்தநாட்டின் முதுகெலும்பாகத் தமது உடலுழைப்பாலும், மூளை உழைப்பாலும் இயங்கி வரும் தமிழ் பேசும் தொழிலாளர்கள் தமது இழந்த உரிமைகளைப் பெறுவதற்கு இன வழியில் ஒன்றுபட்டு போராடுவதே மார்க்கமாகும். இந்தப் போராட்டத்திற்குப் புது முறுக்கு ஏற்ற மே நாள் அமையட்டும்.**

இவ்வாறு இ. தொ. கழகத் துணைத் தலைவரும் வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. அ. அமிர்தலிங்கம் 'சுதந்திரன்' மூலம் விடுத்த விசேட மேதினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அச் செய்தியில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:

உரிமை இழந்த உழைப்பாளிகள் உரிமை பெறுவதற்கு உறுதிபூண்டு, ஒன்றுபட்டு, கிளர்ந்தெழுந்ததைக்



திரு அ. அமிர்தலிங்கம்

குறிக்கும் வெற்றித் தினமே மே நாளாகும் இன்று மனித உரிமைகள் அனைத்தையும் இழந்த நிலையில் தமிழ் பேசும் தொழிலாளர்கள் இந்நாட்டில் வாழ்கிறார்கள். குறிப்பாக மலைநாட்டில் வாழும் தமிழ் பேசும் தொழிலாளர் நிலையோ மிக்க வேதனை தருவதாக உள்ளது

ஒரு இனத்தின் உரிமை மறுக்கப்பட்ட நாட்டில் சோஷலிசம் தலைதூக்க முடியாது. பாஸிசமும் சர்வாதிகாரமும் தலைதூக்கும். இலங்கையிலும் இந் நிலையையே நாம் காண்கிறோம்.

உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்! என்று உரக்கக் கூறிக்கொள்பவர்கள், இந்த நாட்டில் வாழும் தமிழ் பேசும் தொழிலாளர்கள் உரிமை மறுக்கப்பட்டிருக்கும் நிலை கண்டும் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. சில சந்தர்ப்பங்களில் மாறாகவும் செயல்படத் தலைப்பட்டிருக்கிறார்கள். இந்த அடிப்படையில் அமைந்த தேசியத் தொழிற் சங்கங்கள் என்று ஒரு காலத்தில் கூறிவந்த தொழிற் சங்கங்களும் தமிழ் பேசும் தொழிலாளர்களைச் சகல வழியிலும் காட்டிக் கொடுத்துவிட்டார்கள்.

எனவே, இந்த மேதினத்தில் மலைநாட்டுத் தமிழ் பேசும் தொழிலாளரும், அரசாங்க சேவையில் உள்ள தமிழ் பேசும் தொழிலாளரும், கிழக்கு-வடக்கு இலங்கையில் வாழும் ஏனைய தமிழ் பேசும் தொழிலாளரும், விவசாயிகளும் ஒன்றுபட்டுத் தமது இழந்த உரிமைகள் அத்தனையையும் பெறுவதற்கு உறுதி பூணுவோமாக.

இலங்கைத் தொழிலாளர் கழகத் துணைச் செயலாளர் திரு. மு. எல்லாளன் விடுத்த மே தினச் செய்தி:

மலைநாட்டில் வாழும் தமிழ் பேசும் தொழிலாளர்கள் மனித உரிமைகள் அனைத்தும் அற்ற நிலையில் வாழ்கிறார்கள். இந்தநிலையில் மே தினத்திற்கு விழா எடுப்பது என்ற பேச்சுக்கு இடமேது. நாம் மே தினத்திற்கு விழா எடுத்தாலும் அது பூரணமான விழாவாக அமையமாட்டாது; இழந்த உரிமைகளைப் பெறுவதற்கு நாம் சபதம் ஏற்கும் நிகழ்ச்சியாகவே அது அமையும்.

மே தினத்திற்கு விழா என்ற நிலை நமது உரிமைகள் அனைத்தையும் பெற்று முழு மனிதர்களாக வாழும் நிலை ஏற்படும் பொழுதே அமையும்.

துறைமுக நாவாய் இயக்குனர் கழகப் பொதுச் செயலாளர்திரு. செ. ஜோ. பிரிட்டோ விடுத்த மேதினச் செய்தி:

தமிழ்மொழிக்காகப் பல தியாகங்கள் புரிந்துவரும் நேரத்தில் சில தமிழர்கள் தெரியாத மொழியில் கடமையாற்ற முற்படுவது வேதனைக்குரியது மட்டு



திரு. செ ஜோ. பிரிட்டோ

மல்ல கேலிக்கிடமானதும் கூட. நமது தொழிற்சங்கத்தைப் பொறுத்தவரையில் நமது சங்க உறுப்பினர்கள் அனைவரும் தாய்மொழி மூலமே நமது கடமைகளைச் செய்துவருகிறோம். இது போன்று ஏனையவர்களையும் செயல்படும் வண்ணம் இத் தினத்தில் வேண்டுகிறோம்;

மேலும் பறிக்கப்பட்ட மொழியுரிமை, குடியுரிமை, இனஉரிமை போன்றவற்றை பெறும் விடுதலைப்போராட்டத்தில் தமிழ்பேசும் ஊழியர்கள் தங்களாலியன்றவற்றைச் செய்யப் பின்னிற்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறோம்.

## எம்மை இகழ்ந்தவர்கள் இன்று தலைவணங்குகிறார்கள்

அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத் தலைவரும், அரசாங்க தொழிற்சங்கக் கூட்டணித் தலைவருமான திரு. வே. கனகசபை முதலி விடுத்துள்ள மே தினச் செய்தி:

உலகத் தொழிலாளர்கள் இன்று உவகையோடு வெற்றிக்கொடி பிடித்து வீர முரசறையும் நன்னாளில் தமிழ் கூறும் நல்லுலகத்தின் ஒரு பகுதியில் எழுச்சியுற்று, உரிமை கூறி இறுமாப்புக்கு இடம் கொடாது நமது சொந்த வலிமையுடன் போராடிக் கொண்டிருக்கும் தமிழ் பேசும் தொழிலாளர்களை இந்த மேதினத்தில் வாழ்க! வாழ்க!! என்று வாழ்த்துகிறேன்.

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இன்று அவர்களுக்கு வழிகாட்டியாக அவர்களது உரிமைகளுக்காக வாதாடி வழக்குரைக்கும் பணியில் எமது தொழிற்சங்கங்கள் முன்னேறுகின்றன என்பதை நினைத்துத் தமிழ் பேசும் தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் மகிழ்ச்சியடைய உரிமையுண்டு.

எமது பணி எம்மை, எமது இதர தொழிலாளர்களை ஒன்றுபடுத்துவதுடன் நின்றுவிடாது, நாம் எந்த அநீதிக்காக எந்தெந்த உரிமைகளுக்காகத் தொழிற் சங்கங்களை அமைத்தோமோ அந்தந்தக் கொள்கைகளை-நோக்கங்களை— நிலைநாட்டுவதற்கு எமது உடல் பொருள் ஆவி அத்தனையையும் தமிழ் பேசும் சமுதாயத்திற்கு அர்ப்பணிப்போமென இத் தினத்தில் சங்கற்பம் செய்து கொள்ளும்படி இரந்து வேண்டுகின்றேன்.

நாம் தொழிற் சங்கங்கள் அமைக்கும் பொழுது எம்மை இகழ்ந்த சமூக சமத்துவவாதிகள் எனச் சொல்லும் சந்தர்ப்பவாதிகள், முளைவிடும்போதே [illegible] எறிந்துவிடலாமென [illegible]



திரு. வே. கனகசபைமுதலி

பூண்ட வகுப்புவாத தொழிற்சங்கங்கள், இன்று எம்மைப் பார்த்து தலைவணங்கும் தன்மைக்கு வந்துவிட்டார்களென்பதை நான் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை.

இன்றைய தினத்தில் நாம் இன்னும் ஒற்றுமையாக ஒரே கொடியின் கீழ் ஒரே நோக்கத்திற்காக முன்னேற பாடுபட்டு உழைத்து எமது தொழிற்சங்கங்களையும் இன்னும் பலமடங்கு வலிமை [illegible]

## தேசியவாதிகளின்....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞர்கள். தமிழ் ஊழியர்களின் வெளியேற்றத்தோடு அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம் தனது உண்மையான பலத்தை இழந்தது.

அரசாங்க லிகிதர்சேவைச் சங்கத்திலிருந்து வெளியேறிய நாங்கள் சில நாட்களின் பின் அரசாங்கசேவையிலுள்ள அத்தனை தமிழர்களையும் சேர்த்து ஒரு அமைப்பை உருவாக்குவது என முடிவு செய்தோம்.

அதன்படிக்கு 1961-ம் ஆண்டு தமிழ் அரசாங்க ஊழியர் சங்கத்தின் ஆரம்பக் கூட்டம் வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகத்தில் நடைபெற்றது.

இச்சங்கத்தின் செயலாளராக இப்பொழுது இலங்கை தொழிலாளர் கழக நிர்வாகச் செயலாளராக விளங்கும் நண்பர் நாகேந்திரம் தெரிவு செய்யப்பட்டார். தமிழ் அரசாங்க ஊழியர்சங்கத்தின் ஆரம்பக் கூட்டத்திலே திரு. ஜி. ஆர். குணநாயகம் பேசியது இன்றும் என் உள்ளத்திலே நீங்காத இடம்பெற்று நிலைத்திருக்கிறது திரு. குணநாயகம் தீவிர சமசமாஜ வாதி என்று பெயர்பெற்றவர்.

அரசாங்கலிகிதர் சேவைச் சங்கத்தின் பெரும் புள்ளிகளில் ஒருவராக விளங்கியவர்.

### எழுதுவினைஞர்சங்கத்தின் தோற்றம்

அவர் தமிழ் அரசாங்க ஊழியர் சங்கத்தின் ஆரம்பக் கூட்டத்திலே பேசுகையில், 'ஊழியர்சங்கம்அமைப்பதன்நோக்கம் தமிழர்களைத் தொடர்ந்துஅரசசேவையில் வைத்திருப்பதற்கல்ல; தமிழர்களை அரச சேவையிலிருந்து மானத்துடன் வெளியேற்றுவதற்காகத்தான் ஊழியர் சங்கம் உருவாகிறது' என்று மிக ஆணித்தரமாக எடுத்துக் கூறினார். வரலாற்றில் இடம்பெறக் கூடிய பொன்மொழிகளாக திரு. குணநாயகத்தின் பேச்சை நான் இன்றும்கருதி வருகிறேன். தீவிரவாதியாகியதிரு. குணநாயகம்இன்று எம்மத்தியில் இல்லை. அவர் இப்பொழுது ஓய்வுபெற்று விட்டார்.

தமிழ் அரசாங்க ஊழியர் சங்கம் ஒரு தொழிற்சங்கம் அல்ல. எனவே அதற்குசட்டரீதியான அந்தஸ்து இருக்கவில்லை. ஆகவே தமிழ்பேசும் ஊழியர்களுக்குத் தொழிற் சங்கங்கள் உருவாக்கவேண்டும் என்ற எண்ணம் அரும்பலாயிற்று. இந்தஎண்ணம் உருவானது எமது சங்கத்தின் முதற் தலைவரான திரு. சிவானந்தசுந்தரத்துக்கே.

மொழிவழித் தொழிற்சங்கங்களின் தந்தையான திரு. க. சிவானந்த சுந்தரம் பற்றிச் சில எழுதாவிட்டால் மொழிவழித் தொழிற்சங்க வரலாறு ஒரு பொழுதும் முடிவுறாது.

(அடுத்த இதழில்முடியும்)

### தனிச் சிங்கள சட்டத்தை தகர்ப்போம்

தமிழ் அரசாங்க ஊழியர் சங்கச் செயலாளர் விடுத்த மேநாள் செய்தி:-

தமிழ்பேசும் ஊழியர்களை வேரோடு களைந்தெடுக்கவும் தமிழ் பேசும் மக்களின் விழியான தமிழ்மொழியை இந் நாட்டிலிருந்து அழிக்கவும் மூலகாரணமாக அமைந்திருக்கும் 'சிங்களம் மட்டும்' சட்டத்தை தகர்த்தெறியும் பொருட்டு தமிழ்பேசும் மக்கள் ஒருவரும் எக்காரணம் கொண்டும் சிங்களம் கற்காதிருப்பதுடன் இந்நாட்டில் மீண்டும் எம் கன்னித் தமிழ் மொழி அரசோச்ச ஆவன செய்ய வேண்டுமென்பதே இம் மேதினத்தில் நாம் விடுக்கும் வேண்டுகோளாகும்.

கடைசியில் ஆட்சியினருக்கும் ஓர் செய்தி. இந்நாட்டின் இரு விழிகளாக இருக்கும் இரு தேசிய மொழிகளில் ஒன்றை மறைத்துவிட்டு மற்ற ஒரு கண்ணால் மட்டும் திருட்டுப் பார்வை பார்த்தால் ஒரு பொழுதும் நாடு சுபீட்சமடைய முடியாது என்பதேயாகும்.


"மந்திர சக்தியை"
நிரூபிப்பதற்காக உங்கள் காரணம் எதுவானாலும் நிறைவேற்றித்தர முடியும். உங்கள் காரணத்தை விபரமாக எழுதி அனுப்பவும்.
கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்
பி. எம். திசாநாயக்க
நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா
அருத எண்ணெய் தலைமை காரியாலயம்
கம்பளை.



இலங்கைக் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சைக்கான
(G. C. E. Ord. Lev.)
புதுமுறையாகவும், இலகுவில் விளங்கக் கூடிய நடையிலும்
★ எண் கணிதம் ★ சரித்திரம் ★ பூமிசாஸ்திரம்
★ தமிழ் பாஷை ★ குடியியல் ★ இஸ்லாம்
★ 101 தமிழ் கட்டுரைகள் ★ உடநலவியல்
என்பனவற்றிற்கான, பரீட்சைப் பத்திரப் பயிற்சிக் கோவைகள் வெளியாகி உள்ளன.
இலவச விபரங்களுக்கு எழுதவும்.
சர்வகலாசாலை போதனா கழகம்.
540, மருதானை வீதி, த. பெ. 1079. கொழும்பு.
தொலைபேசி: 91699


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சிறுகதை

# சர்வாதிகாரம்

அன்று எனக்குச் சரியான காய்ச்சல். வேலைக்குப் போகவில்லை. நான் ஓர் கடைச் சிப்பந்தி. எனது வாடகை அறையிலேயே படுத்திருந்தேன்.

மாலை வந்தது. எனது சக கடைச் சிப்பந்திகளும், நண்பர்களும் சுகம் விசாரிக்க வந்திருந்தனர்.

அன்று என்னுடைய கடைக்குப் பக்கத்தில் இருக்கும் கோவிலில் தேர்த் திருவிழா. அந்தப் பட்டணத்திலேயே அது ஒரு பெரிய கோவில். இடத்தாலும், பொருள் பலத்தாலும் பென்னம் பெரிய கோவில். அதன் பூர்வ சரித்திரமே பெரியது தான். தேர்த் திருவிழாவிற்கு வரும் 'கண் காட்சிகளை' கண்டுகளியாமல் என்னை வந்து பார்க்க அவர்களுக்கென்ன பைத்தியமா? அதனுல் காலை வரவில்லை. மாலை, கடைகள் மூடிய பின் வந்தார்கள்.

நான் வாடகைக்கு எடுத்திருப்பது ஒரு மேல்மாடி அறை. அதிலிருந்து, மஞ்சள் வெயிலையும், மாலை இளந் தென்றலையும் அனுபவித்துக் கொண்டிருந்தேன். இது புழுக்க காலமல்லவா?

வந்தார்கள் நண்பர்கள். ஒரு படையெடுப்புத்தான். இரண்டு நாளைக்குச் சுகமில்லை என்று படுத்திருந்தால் போதும், இரண்டு மாசத்திற்குக் காலாட்டிக் கொண்டு சாப்பிட்டுப் பொழுது போக்கக் கூடிய அளவுக்குச் சாமான்கள் குவிந்து விடும்.

ஒவ்வொருத்தனும், ஒவ்வொரு கேள்விக்கணை.

நண்பர்கள்தானே கேட்டு விட்டுப் போகட்டுமே. எனக்குமொரு சந்தர்ப்பம் வரும்தானே.

'டேய், உனக்கு உண்மையாகக் காய்ச்சல்தானு?'

'இல்லை, அவனுக்கு அதல்ல, அவளைப் பார்த்ததினுல் வந்த ஏக்கக் காய்ச்சல்'

'ஏதேன்.........'

பொல்லாதவம்புகள். சும்மா கேட்டுக் கொண்டேயிருந்தார்கள். ஒருவன் நெற்றியில் கை வைத்துப் பார்க்கிறுன். போக்கிரிகள். பின் கதை அளந்தோம் கதை.

அவள் உடுத்திருந்த நீலப் பட்டாடை தொடங்கி, அன்றைய பிரதான சினிமாப் படம் தொட்டு, இன்றைய அரசியல் நிலை வரை கதை வளர்ந்து முடிந்தது.

சிலர் போய்விட்டார்கள். அவர்கள் குடும்பக்காரர். சோலி உள்ளவர்களல்லவா? ஒரு சிலர் இருந்தனர். அதுகள் பொறுப்பற்றதுகள். அவர்களுடன் இன்றைய அரசியல் நிகழ்ச்சி ஆராயப்பட்டது. பத்திரிகைகளிலும், பலர் நாவிலும் தவழ்ந்து வரும்.

'சர்வாதிகாரம்' எங்கள் பிரச்சினைக் குரிய பொருளாகிவிட்டது.

ஒருவன் கேட்டான்-கேட்டேவிட்டான்.

'சர்வாதிகார ஆட்சி எப்படி இருக்கும்?'

'ஆமா, எப்படி இருக்கும்?' அதே சுரிதியில் மற்றவன்.

நான்தான் பதில் கூற வேண்டிய பொறுப்பில் இருந்தேன். எனக்குத் தெரிந்த அரசியல் ஞானத்தைக் கொண்டு விளாசிவிட்டேன், விளாசி.

எல்லாரும் வாயைப் பிளந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். நான் தொடங்கினேன்.

'எனக்குச் சர்வாதிகாரம் என்றுல் என்ன என்பது தெரியாது.'

'என்னடா, எடுத்த எடுப்பிலேயே, கல்யாண வீட்டில் பெண்பிள்ளையைக் கடத்திக் கொண்டுபோன மாதிரிக் கதையை முடித்திட்டியே?' பொறுமையற்ற ஒருவன்.

'பொறடா, நான் இப்பதான், 'சப்ஜட்'டுக்கு வாறன். நீ அவசரப் படுகிறீயே?'

'சரி, சரி நீ கதையைச் சொல்லு.'

ஜனநாயக ஆட்சி எங்களுக்குத் தெரிந்த ஒன்று.

'அதுதானே இப்பொழுது அனுபவித்துக் கொண்டிருக்கிறுமே?'

'புளித்த கதை — பழைய கதை.'

கம்யூனிசம் அண்டை அயல் நாடுகளில் நடக்கிறது.

'அதைத்தானே தோழர்கள் சொர்க்கம் என்று புளுகுகிருர்கள்'

அது கிடக்கும் — நீ நம்ம கதைக்கு வாடா!

சர்வாதிகாரம் என்றுல் என்ன? அந்த ஆட்சி எப்படி இருக்கும் என்பதை விளக்குமுன், ஒரு சர்வாதிகார ஆட்சியில் நடந்த ஒரு சிறு சம்பவத்தைக் கூறுகிறேன் கேளுங்கள் — எனக் கூறி கதை சொன்னேன்.

ஃ

இந்து மகா சமுத்திரத்திலே உள்ள ஒரு பெரிய கண்டம் அது. இந்து மகா சமுத்திரத்திற்கே ஒரு தனிச் சிறப்பு. அதனுல் இயற்கை அழகு ஒழுகும் வனப்புமிகு நாடது.

அந்தக் கண்டத்திலே 15, 16ம் நூற்றுண்டுக்குப் பின்னிருந்தே கதையை ஆரம்பிப்போம். அந்நிய ஆட்சிகள் பல வந்து முடிந்தன. கடைசியாக வெள்ளைக்கார ஆட்சியும் அடங்கி ஒடுங்கியது. சுதந்திரம் உதயமாகியது. சுதந்திர அரசியல் மலர்ந்தது. இப்போது அது ஓர் சுதந்திர நாடு. சுதந்திர அரசியல், முதலாளித்துவ ஆட்சியுடன் ஆரம்பமாகியது.

கிட்டத்தட்ட பத்து வருடங்கள் முதலாளித்துவ ஆட்சி. பின் மக்களுக்கு வெறுப்பு. ஒரே வெறுப்பு. முதலாளித்துவ ஆட்சி ஒழிக்கப்பட்டு, நடுநிலை சோஷலிச ஆட்சி அமைக்கப்பட்டது.

**மணியம்**

அதாவது முதலாளித்துவத் தலையும், சோஷலிச வாலும் கொண்ட ஒரு ஆட்சிமுறை. அதனுல், தொழிலாளர் ஒரு சில துறைகளில் பலன் பெற்றது உண்மைதான். என்றுலும் கொழுத்தது முதலாளிகள்தான். நடுத்தர மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர்.

இந்த ஆட்சியில் பல கஷ்டங்கள் நிகழ்ந்தாலும் தொடர்ந்து சில வருடங்கள் நிலையாக நின்று ஆட்சி செலுத்தப்பட்டது. காலத்துக்குக்காலம் பலப்பல நிகழ்ச்சிகள். வேலை நிறுத்தம். ஒரே குழப்பமும் கொந்தளிப்பும். அதன் பலன் பொருளாதார நெருக்கடி. இதற்குப் பல மார்க்கங்களையும் எடுத்து விளம்பினர். அதில் ஒன்றுதான் இந்த 'சர்வாதிகாரம்'.

சர்வாதிகாரம் ... சர்வாதிகாரம்...சர்வாதிகாரம்.

அந்தச் சர்வாதிகாரி ஒரு கம்யூனிசவாதி. எதிர்க்கட்சித் தலைவர்களதும், சில முக்கியஸ்தர்களும் சிறையில் அடைக்கப்பட்டனர். மக்களிடையே ஒரே பீதி, வெறுப்பு ஆத்திரம். செய்வது என்ன? நாட்டின் பொருளாதாரம் முன்னேறியது. அதே நேரத்தில் முதலாளித்துவம் முற்றுக ஒழிக்கப்பட்டது.

பேச்சுச் சுதந்திரம் மறுக்கப்பட்ட அந்த ஆட்சியில் ஒரு துணிகரமான செயல் நடந்தது. மக்களில் ஒருவன் சர்வாதிகார ஆட்சிகூடாது, கூடவே கூடாது என குரல் எழுப்பி விட்டான். எழுப்பியே விட்டான். அவன் சர்வாதிகாரியின்முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான். அந்த இடத்திலும் சர்வாதிகார ஆட்சி வேண்டாம் எனக் கூறினுன்.

'அப்ப, அவர் குளோஸ் தான்' நண்பன் குறுக்கிட்டான்.

இல்ல இங்கே தான் சுவையிருக்கிறது.

சர்வாதிகாரி கோபம் கொள்ளவில்லை. ஆத்திரப்படவில்லை. கருணை உள்ளத்தோடு அவனை அணுகி, 'சபாஷ்! நீதான் எனக்கு ஏற்றவன். இன்று தொடக்கம் நீ எனது மெய்க்காப்பாளன். ஹிட்லருக்கு கோயபெல்ஸ் எப்படியோ அப்படி'.

'கடவுள் எங்கே?' என்று கேட்டு ஸ்ரீ பரமஹம்சரை அணுகிய, விவேகானந்தரை எப்படித் தன் சீடன் ஆக்கினுரோ அதேபோல் சர்வாதிகாரியின் மெய்க் காப்பாளனுன் அவன்.

செய்தி கேட்ட எல்லோரும் வியந்தனர்.

மெய்க்காப்பாளனின் வேலை ஆரம்பமாகியது. நாளுக்கு ஒரு திட்டம் வேளைக்கு ஒரு செயல் அவன் சொல்ல வேண்டியதுதான் பாக்கி. எல்லாம் நடந்தே முடிந்தன. சர்வாதிகாரிக்கும் அவனில் நம்பிக்கை நல்லெண்ணம் பூரண திருப்தி.

ஃ

ஒரு நாள்,... ...

ஓய்வாக இருக்கும் போது பழைய காலச் சம்பவங்களில் மூழ்கி எழுந்தான். அப்போ அவன் எண்ணத்தின் குறுக்கே ஒன்று தட்டியது. அதன் சாயல் அவன் மனதில் கவ்விக்கொண்டது. 'விறு விறு'வென அவன் எண்ணப் புரு பல மைல்களுக்கப்பால்பறந்துசென்று வட்டமிட்டது.

சில வருடங்களுக்கு முன் ஜனநாயக ஆட்சி அந்தத் தீவில் நடைபெற்றுக்கொண்டிருந்த காலம். அவன் ஓர் குமாஸ்தாவாகப் பணி புரிந்து கொண்டிருந்தான். அப்போது ஒருத்தியிடம் அவன் மனம் விட்டுத் தன் விருப்பத்தைக் கேட்டாள்.

'நான் உன்னை விரும்புகிறேன்...?'

அவன் கூறி முடிப்பதற்கு முன் அவள் பதில் கூறி விட்டாள்.

'அதற்கு வேறு ஆளைப் பாரும்'

ஆத்திரம் வந்தாலும் அமைதிப்படுத்திக் கொண்டான். அது ஜனநாயக ஆட்சி. ஒருவர் விருப்பத்தில், சுதந்திரத்தில் கை வைக்க அவன் விரும்பவில்லை. அது அவ்வளவுடன் முடிந்தது.

இன்று அவன் தன் விருப்பத்தை புனராலோசனை செய்தான். அவன் மூளை சுழன்றடித்து வேலை செய்தது. விட்டானு? இல்லை ஒரு துண்டு கடதாசி எடுத்தான். எழுதினுன். பக்கத்துராணுவ வீரனிடம் கொடுத்தான். அது உரிய இடத்திற்குப் போய்ச் சேர்ந்தது.

பட்டப் பகல். ராணுவ 'ஜீப்' பறந்து கொண்டிருந்தது. என்ன நடக்குமோ, ஏது நடக்குமோ எனப் பலரும் பயந்து விளித்தனர். குறிப்பிட்ட இடத்தில் 'ஜீப்' நின்றது. தேடிய வீட்டிற்குள் சென்றுர் ஓர் அதிகாரி. அங்கு நின்ற அவளிடம் எஜமானனின் உத்தரவைக் காட்டி வரும்படி அழைத்தான். அவளால் மறுக்க முடியுமா? அல்ல மறுத்தாலும் அவர்கள் விட்டுவிட்டா போவார்கள். இப்பேறு, மெய்க்காப்பாளனின் படுக்கை அறையில் அவள். அவளும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப மனதை மாற்றிக் கொண்டாள். மக்களுக்கு அவன் சர்வாதிகாரி. ஆனுல் அவனுக்கு அவள் சர்வாதிகாரி.

காலஓட்டத்தில் பல மாற்றங்கள். ஹிட்லரின் சர்வாதிகாரமே நிலைக்கவில்லை என்றுல் இது என்ன பிரமாதம்? முதலில் மக்கள் பயந்து தான் இருந்தனர். பழகப் பழகத் துணிந்து விட்டார்கள். ராணுவத்தின் ஒரு பகுதியே மக்கள் பக்கம்.

ஃ

எழுச்சி......... கிளர்ச்சி ......புரட்சி.

சர்வாதிகார ஆட்சி ஒழித்துக் கட்டப்பட்டது.

'அப்போ அந்தச் சர்வாதிகாரியின் முடிவு?' ஒருவன் அவசரப்பட்டான்.

'அவன் மெய்க் காப்பாளன்?' மற்றவன் துரிதப்படுத்தினுன்.

'மெய்க்காப்பாளன் மனைவி?—இன்னெருவன் ஏங்கினுன்.

பொறுங்களேன் இனித் தான் கதையின் துன்பியல் வருகிறது.

சர்வாதிகாரி ஆட்சி அழிந்து, மக்கள் ஆட்சி மலர்ந்தது. சர்வாதிகாரி மெய்க்காப்பாளன், மனைவி மூவரும் கொண்டுவரப் பட்டனர். அப்போது அவள் நிறை கர்ப்பிணி.

ஒன்று, இரண்டு, மூன்று டுமீல்...டுமீல்......டுமீல் பகிரங்கமாகச் சுடப்பட்டனர்.

'அந்தக் கர்ப்பிணியையுமா?' ஒரே குரலில் மூவரும் கேட்டனர்.

கர்ப்பிணியை மன்னிக்க வேண்டும் என்றுதான் பலரும் விரும்பினர் வேண்டினர். ஆனுல் அது மறுக்கப்பட்டது. காரணம் சர்வாதிகாரியின் சீடன் குழந்தை. தந்தையின் இரத்தத்தில் ஊறிய குணங்கள்குழந்தைக்கும் இருக்கும், ஒரு காலத்தில் தாய் தங்கள் கதையை தந்தையின் வரலாற்றின் முடிவைக் கூறும்போது, இவன் ஆத்திரம் கொண்டு ஏதாவது நடக்கலாம் என்ற அடிப்படையில் அவளும் சுடப்பட்டாள்.

இதுதான் கதை.

'ஆ! இவ்வளவு கொடுமையா'.

'எதுதான் கொடுமையில்லை. ஜனநாயக ஆட்சியில் கர்ப்பிணி கொலை செய்யப்படவில்லையா?'

நண்பர்களிடை கருத்து மோதல்.

நான் சமாளித்து விட்டேன். பயப்படாதீர்கள் இப்போ சர்வாதிகார ஆட்சியில்லை. அது வரப் போவதும் இல்லை. எல்லாம் பத்திரிகைகளின் கயிறு திரிப்பு. அவ்வளவுதான்.

(யாவும் கற்பனை)


வேல் படை மருந்து

வண்டுகடி, தேமல், ஊறல், படர்தாமரை. தழுவணி, பித்த வெடிப்பு, நாட்பட்ட கக்கூஸ்பத்து, தண்ணீர்கடி, கரப்பான்

முதலிய சர்ம வியாதிகளைக் குணப்படுத்தும் ஓர் சிறந்த களிம்பு.

விலை ரூ. 1-50 தபால் சிலவு வேறு

தயாரிப்பவர்கள்:

S. P. S. ஜெயம் அன் கோ.,

மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ.,

3, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி! நன்றி!! நன்றி!!!

# தமிழினத்தின் தந்தையே நன்றி

## கோடீசுவரன் அறிக்கை

இந்த நாட்டு அரசாங்கம் சிங்களப் பரீட்சை எடுக்குமாறு பல முனைகளில் நெருக்கியும், நயவஞ்சகமாக ஆசைகாட்டியும், அவற்றிற்கு பலியாகாது பணிய மறுத்த தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்களை முதற்கண் நெஞ்சார வாழ்த்த இந்தச் சந்தர்ப்பத்தில் விரும்புகிறேன். வழக்கில் நாம் ஈட்டிய வெற்றி அவர்களது வெற்றியே. மேலும் இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடிக்க கைகொடுத்து உதவிய தமிழ்பேசும் தேசிய இனத்தின் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கட்கும் ஏனையவர்களுக்கும் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு. செ. கோடீசுவரன், தமது வாழ்க்கைப்படி உயர்வு நிறுத்தம்பற்றிய வழக்கின் தீர்ப்புரை வழங்கிய சிறிது நேரத்தின் பின், சுதந்திரன் மூலம் விடுத்த செய்தியில் கூறியுள்ளார்.

மேலும் அச் செய்தியில் அவர் கூறுவதாவது:-

எங்களின்பக்கம் நீதி-நியாயம் இருந்ததென்பது இன்று நிரூபிக்கப்பட்டு விட்டது. அதேநேரத்தில் இந்தநாட்டு அரசு உலகத்தின் கண்களில் குற்றவாளியாகக் காட்சிதருகிறது.

### வேறுவழி இருக்கவில்லை

நீதிகோரி மிகப் பணிவான முறையில் நீண்டகாலம் முறையிட்டும், எமது அரசு, ஒரு நல்லரசு நடந்துகொள்ளவேண்டிய முறைக்கு முரணாக ஊழியர்களது உரிமைகளைத் தொடர்ந்து அழித்துக்கொண்டே வந்திருக்கிறது. இந்தச்சூழ்நிலையில் அரசோடு நேரடியாக மோதுவதைத் தவிர வேறுவழி அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்துக்கு இருக்கவில்லை.

அரசின் கொடுமையால் அடக்குமுறையையும் எதிர்த்து நடாத்திய போராட்டத்தில் எமது உறுப்பினரும் ஏனையதோழர்களும், சேவையில் தொடர்ந்து இருக்கும் உரிமையை இழப்பதுஉட்பட பல தியாகங்களை செய்யவேண்டியிருந்தது.

### துரோக படலம்

துரதிர்ஷ்டவசமாக, தமிழ் பேசும் மக்களின் கொடியதும் சூழ்ச்சி மிக்கதுமான எதிரிகளான தேசிய தொழிற் சங்கங்கள் என்று வர்ணிக்கப்படும் சங்கங்களால் ஏமாற்றி இழுக்கப்பட்டவர்களாலும், தமிழ்பேசும் மக்களது நலனுக்கு முன்பு தங்கள் சொந்த நலனைக் கருதியவர்களாலும் புறமுதுகில் குத்தப்பட்டோம்.

தமிழ்பேசும் தொழிலாளர்கள் தங்களது உரிமைகளைப்பூரணமாகப் பெறுவதற்கு இன்னும் பலகல் தொலைவு இருக்கிறது. உரிமை பெறுவதற்கு இன்னும் பல கஷ்டமானபோர்க்களங்களை அவர்கள் சந்திக்க வேண்டியிருக்கும்.

### ஒற்றுமைக்கு அறைகூவல்

இதற்காக தமிழ்பேசும் தொழிலாளர்களை ஒரு அணிக்குள் திரட்டவேண்டிய அவசர-அவசியமான பணி காத்திருக்கிறது.

இந்தப் பணியை இனிது நிறைவேற்ற, வெற்றிக்களிப்பிலுல் புதுமுறுக்குப் பெற்றிருக்கும் தோழர்கள் மட்டுமல்ல, தங்களது அறியாமையால் எங்களைக் கைவிட்ட நண்பர்களும் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

### சட்ட வல்லுனருக்கு நன்றி

எங்களதுவழக்கறிஞர்கள், சாட்சியம் கொடுத்த பெரியார்கள், கேட்டபொழுதெல்லாம் நிதி அள்ளிக் கொடுத்த நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் எங்களது இதயம் கனிந்த நன்றி உரித்தாகுக.

## விலகல்கடிதம்

1961-ம் ஆண்டு அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்திலிருந்து தமிழ்பேசும் அரசாங்க எழுதுவினைஞர்கள் வெளியேறும் பொழுது எழுதிய விலகல் கடிதத்தின் தமிழாக்கம் வருமாறு:-

கௌரவ பொதுச் செயலாளர், அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம், கொழும்பு.

ஐயா,

இதன் கீழ் ஒப்பமிடும் லிகிதர் சேவைச் சங்க உறுப்பினராகிய நாங்கள் கௌரவ நீதி அமைச்சருக்குத் தாங்கள் அனுப்பியுள்ள 24-12-60 திகதியிட்ட நிருபம்எமது உரிமைகளையும் பலியிடுவதாகுமெனக் கருதுகிறோம். அரசகருமமொழிச் சட்டத்தின் விளைவுகள் எம்மைப் பாரதூரமாகப் பாதிக்கக்கூடியன வாகையால், லிகிதர் சேவைச் சங்கத்தின் 1956ம் ஆண்டின் பேராளர் மாநாட்டின் சங்கத்திற் களிக்கப்பட்ட அதிகாரக் கட்டளையைமீறும் எந்த நடவடிக்கையும் மிகவும் முறையற்றதாகும்.

அரசகருமமொழிச் சட்ட நடைமுறை எமக்குப் புதிய சேவை நிபந்தனைகளை விதிப்பதால்சங்கம் அதனை எதிர்த்து, எமது உரிமைகளையும் நலன்களையும்பாதுகாத்து நாம்எவ்வித இடர்ப்பாட்டுக்கும் உள்ளாகாது தொடர்ந்து பணியாற்ற வழிசெய்யும் வகையில் குறித்த சட்ட நடைமுறையை மாற்றியமைக்க முயன்றிருக்க வேண்டும். அதுவேகடந்த காலத்தில் எங்களுக்களிக்கப்பட்ட உறுதிமொழிகளுக்கமைந்த செயலாகும்.

அரசகருமமொழிச் சட்டத்தைச்செயற்படுத்துவதற்கு நீங்கள் ஒத்துழைப்பளிக்க முன்வந்துள்ளதான செய்தியும், இது விடயத்தில் ஒத்துழைக்காத உறுப்பினரைக் கைகழுவுவதான பயமுறுத்தலும் அரசியலோடு சம்பந்தப்பட்ட தன்மையுடையவையும் வேண்டப்படாதனவுமென்பதுடன் எங்கள் சங்க நோக்கங்களுக்கு அப்பாற்பட்டவையுமாகும். அரசகரும மொழியைக் கற்றற்குக் காலம் கேட்டு நிற்கும் உங்கள் வேண்டுகோளின் தன்மையும் அத்தகையதே; அந்த வேண்டுகோளே தங்கள் சங்கத்தில் நம்பிக்கை வைத்துள்ள உறுப்பினரைக் காட்டிக்கொடுக்கிறோம் என வருத்தத்துடன் ஒப்புக்கொள்வதாயுள்ளது. இத்தகைய அரசியல் சம்பந்தமான ஒரு வேண்டுகோள் விடுப்பதற்கு எங்களுக்கு ஒரு தொழிற் சங்கம் அவசியமில்லை.

குறித்தசபையின்செயல்களையும், செய்யாது ஒழிந்தவையையும் இனி நாம் பொறுத்துக்கொள்ளஇயலாது. ஆகையினாலும் பிரதிநிதிகளின் விசேட மாநாடு கூடவேண்டுமென்ற நமது வேண்டுகோளுக்கு நடந்த கதியிஞும்-இதுவரை இக்கடிதம் பெற்றதை ஒப்புக்கொள்ளவில்லையெனவும் நாம் அறிகிறோம்-உங்கள் சபையைக் கண்டிப்பதற்கு இன்னுமொரு முறை கூடுதல் தானும் ஏற்புடையதன்று. இச்சந்தர்ப்பத்தில், எங்கள் மரியாதையைக் காக்குமுகத்தால் நாம் மிக வருத்தத்துடனும் உள்ளக்கொதிப்புடனும் செய்யக்கூடிய ஒன்றேயொன்று, இதுவரை நாம் உழைத்தும் நொந்தும் உருவாக்கிய பொது லிகிதர் சேவைச் சங்கத்தின் உறுப்புரிமையிலிருந்து உடனடியாக விலகுகின்றோமென சமர்ப்பிப்பதாகும்.

தியாகி கந்தசாமியின் உள வெழுச்சி [illegible] வாழ்க.

# 'சந்ததிப் புகழைக் காத்த சகோதர...'

—தமிழ்க் கொண்டல்—

அந்தமில் புகழைக் கொண்ட
அருந்தமிழ் ஈழமீதில்
நிந்தனை அடைய நின்ற
நிலைதனை எண்ணி நொந்து
முந்தைய புகழைத் தேடி
முடிவிலாதுழைத்தே வென்றாய்;
சந்ததிப் புகழைக் காத்த
சகோதரா வாழி நீயும்.

வீரம்கொள் தமிழர் என்ற
விருதினை விளங்க வைத்தாய்
தீரம் கொள் உன்தன் செய்கை
திக்கெல்லாம் போற்றும் நண்பா
கூரம்பாய் நின்று குன்றாக்
குலமொழி உரிமை காத்தாய்
சூரங்கொள் நெஞ்சோய் நீயும்
சிறந்ததோர் பாடம்தந்தாய்.

பொங்கிஞய் பொறுமை விட்டாய்
போகமும் யாவும் விட்டாய்
தங்கநேர் தமிழர் வாழ்வு
தனியனாய்க் காக்க நின்றே
இங்கு நம்ஈழந் தன்னில்
இனிமையள் தமிழைக் காத்தாய்
மங்கிடாப் புகழைப் பெற்றாய்
மணிவிளக்காக நின்றாய்.

ஆடியில் வீசும் காற்றில்
அகப்பட்ட சருகேயென்ன
வாடினாள் தமிழீழம் அன்னை
வருந்தினாள்; கண்டு நீயும்
ஓடினாய் உரிமை தேடி
ஓய்விலாதுழைத்து வெற்றி
கோடீஸ்வரனே கண்டாய்
கொடுத்தனை வாழ்வு; வாழி!

# சேக்ஸ்பியர் விழாவும் கலையரசு விழாவும்

தமிழ் முறைப்படி நிறைகுடம் வைத்து குத்துவிளக்கேற்றி கோலமிட்டு, சேக்ஸ்பியரின் சிலையினையும்வைத்து சேக்ஸ்பியர் விழா 4-ம்திகதி ஹொட்டல் ரொப்ரபானில் நடைபெறுகிறது. இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு. க. செ. நடராசா விழாவுக்குத் தலைமை தாங்குகிறார்.

இலங்கையில் தமிழ் நாடகக்கலைவளர்ச்சிக்கு 1915-ம் ஆண்டுமுதல் இன்றுவரை தொண்டாற்றிவரும் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் 75-வது பிறந்த தின விழாவும் [illegible] கொண்டாடப்படும்.



—கலையரசு சொர்ணலிங்கம்—

பிரிட்டிஷ்கவுன்சில் கலாச்சார ஆலோசகர் திரு. ஆர். பிரேடி, கலையரசின் சீடரும், இலங்கை வானொலி தமிழ் நாடகத்துறைத் தலைவருமான திரு. எஸ். சண்முகநாதன், திரு. சி. வி. இராஜசுந்தரம், முன்னாள் நீதிபதி திரு. சி. எக்ஸ். மாட்டின் ஆகியோர் உரைநிகழ்த்துவர். கலையரசு சொர்ணலிங்கத்துக்கு வெள்ளிக் கேடயம் ஒன்றினை கலையரசு அரங்கின் சார்பில் திரு. மாட்டின் வழங்குவார்.

திரு. கே. பாலச்சந்திரன் வரவேற்புரை வழங்குவார். திரு. கே. எஸ். மகேசன் நன்றியுரை பகர்வார். ஓர்தேநீர் விருந்தும் இடம்பெறும்.

இவ்விழாவில் பங்குபற்ற விரும்புபவர்கள் திரு. கே. எஸ். நடராசா, திரு எஸ். சண்முகநாதன் (இலங்கை வானொலி), திரு. கே எஸ். மகேசன் (தினகரன்), திரு. கே. பாலச்சந்திரன்(டைம்ஸ் ஒவ் சிலோன்) ஆகியவர்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

கலையரசின் தமிழ்நாடகக் கலைப்பணியை ஒட்டி அவருடைய பெயரால் சகல சாதனங்களும் அமைந்த ஓர் நாடக அரங்கத்தை நிர்மாணிக்க கலையரசு அரங்கு எண்ணியிருக்கிறது. இந்த அரங்க நிர்மாணத்துக்கான ஆக்க வேலைகள் சேக்ஸ்பியர் தின விழா அன்றே ஆரம்பமாகவிருக்கிறது.

## அ. எ. வி. சங்கத்தின் வேண்டுகோள்

அஞ்சல் திணைக்களங்களில் கடமையாற்றும் தமிழ் பேசும் சகல தர ஊழியர்களும் இன்றுவரை எத்தகைய சிங்களப் பரீட்சைக்கும் தோற்றாதிருந்தால், அவர்களைப் பற்றிய விபரத்தை அஞ்சல் எழுது வினைஞர் சங்கம் அனுப்பி வைக்கும்படி வேண்டியுள்ளது.

கொள்கைக்காக நேர்மையுடன் போராடிவரும் அனைவரையும் ஒன்று படுத்தி ஆக்கப் பணியில் ஈடுபடுத்தவே இவ்விபரம் வேண்டப்படுகிறது.

தொடர்வு கொள்ள வேண்டிய முகவரி: செயலாளர், அஞ்சல் எழுது வினைஞர் சங்கம், 676, காலிவீதி, கொழும்பு-3.


## பரீட்சை வழிகாட்டிகள்

கடந்த 5 தொடக்கம் 10 வருடப் பழைய கேள்வித் தாள்களுக்கான மாதிரி விடைகள் அடங்கியவை. மாணவர்களுக்கு மிகவும் நன்மை பயக்கும் முறையில் மிக விரிவாக வரையப்பட்டவை.

இலங்கைப் பல்கலைக் கழக
புதுமுகத் தேர்வு
ஜி. ஸி. ஈ. உயர்தர
(இலங்கை) தேர்வு

English Medium

| | |
|---|---|
| Zoology | Rs. 10/- |
| Botany | Rs. 10/- |
| Physics | Rs. 10 - |
| Applied Mathematics | 10/- |

தமிழ் மூலம்

| | |
|---|---|
| தமிழ் | ரூ. 10/- |
| அரசியல் | ரூ. 10/- |
| ஐரோப்பிய வரலாறு | ரூ. 10/- |
| இந்திய வரலாறு | ரூ. 10/- |

தபாற் செலவு : ஒவ்வொரு பிரதிக்கும் 50 சதம்
வி. பி. பி. அனுப்பப்படமாட்டா.

யுனைட்டெட் இன்ஸ்டிடியூட்ஸ்,
நெல்லியடி — கரவெட்டி

கிளைகள்:
107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்,
13, முதலாவது சப்பெல் ஒழுங்கை, கொழும்பு-6.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னியின் செல்வன் ஆங்கிலப் படமாகிறது

## புரட்சி நடிகர் தயாரிக்கிறார்

பேராசிரியர் 'கல்கி' எழுதிய 'பொன்னியின் செல்வன்' ஆங்கிலப் படமாகத் தயாரிக்கப்படவிருப்பதாக புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அறிவித்துள்ளார். பொன்னியின் செல்வராக நடிக்கும் எம். ஜி. ஆரே ஆங்கிலம் பேசி நடிக்கப் போகிறார். பத்மினி சரோஜாதேவி முதலானோரும் ஆங்கிலம் பேசி நடிப்பார்கள்.

அமரர் கல்கியின் புகழ் பெற்ற சரித்திர நாவல்களில் ஒன்று 'பொன்னியின் செல்





வன்'. இந்த நாவலை எம். ஜி. ஆர். பிக்சர்ஸார் பிரமாண்டமான முறையில் தயாரிக்க வேண்டிய ஏற்பாடுகள் யாவும் முடிவடைந்து விட்டன.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் 'பொன்னியின் செல்வன்' என்ற பிரதம பாகத்தை ஏற்று நடிப்பதுடன் அவரே படத்தை டைரக்ட் செய்யவும் போகிறார்.

தமிழில் மட்டுமல்லாமல் இப்படம் ஆங்கிலத்திலும் தயாராக விருக்கிறது என புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். கூறினார். பண்டைய தமிழ் மன்னர்களின் ஆட்சி முறையை, நீதிச் சிறப்பை வெளியுலகிற்கு பறைசாற்ற இம்முயற்சி பயன்படுமாம். தமிழ்ப் படம் 18 ஆயிரம் அடியிலும் ஆங்கிலப் படம் 12 ஆயிரம் அடியிலும் தயாரிக்கப்படும்.

ஈஸ்ட்மென் கலரில் தயாராகப்போகும் 'கல்கி'யின் 'பொன்னியின் செல்வன்' திரைக்கதை வசனத்தை சக்தி கிருஷ்ணசாமி எழுதுகிறார்.

பத்மினியும் சரோஜாதேவியும் பொன்னியின் செல்வனில் சேர்ந்து நடிக்கப் போகிறார்கள். பத்மினிக்கு இப்படத்தில் இரட்டை வேடம் கொடுக்கப்படுகிறது.

மற்றும் நம்பியார், அசோகன், மனோகர், ராம்தாஸ், டி. எஸ். துரைராஜ் ஆகியோரும் தோன்றுகின்றனர். இவாகள் அனைவரும் ஆங்கிலமும் பேசி நடிப்பார்களாம்.



## திரையுலகில் சிவாஜி புகுந்தது அறிஞர் அண்ணாவால்

புரட்சி நடிகருக்கும், நடிகர் திலகத்துக்கும் இன்று கருத்து மோதல் ஏற்பட்டிருக்கிறது. இதற்கான அடிப்படைக் காரணம் ஒரு பெரிய வரலாற்றுப் புராணமாகும். இந்த வரலாற்றை நமது சென்னை நிருபர் வாரா வாரம் விளக்குவார்.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆரும் நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் பற்பல நாடக சபாக்களில் நடிகர்களாக விருந்து படிப்படியாக முன்னேறியவர்கள். புரட்சிநடிகர் சினிமா வானில் புகழ் பெறஆரம்பித்ததும் சுயமரியாதை இயக்கத்துடனும் திராவிட கழகத்துடனும் நெருங்கிய தொடர்புடையவரானார். கழகத்தை ஒட்டியே அவருடைய புகழும் வளர்ந்தது.

நாடக உலகில் இருக்கும் போதுதான் சிவாஜி கணேசனுக்கு பெரியார், அண்ணா போன்றோரின் தொடர்பு கிடைத்தது. பெரியார்தான் 'சிவாஜி' என்ற பட்டத்தையும் வழங்கினார். நாஷனல் பிக்சர்ஸ் உரிமையாளர் திரு. பெருமாள் தயாரித்த 'பராசக்தி' திரைப்படத்தில் அண்ணாவின் சிபார்சின்பேரில் சிவாஜி கணேசனும் எஸ். எஸ். ராஜேந்திரனும்தோன்றினர். சிவாஜியை கதாநாயகனாகப் போடுவதற்கு அறிஞர் அண்ணாவேதான் மூலதாரராகவிருந்தார் என்றால் மிகையாகாது.



சினிமாவில் பிரவேசிப்பதற்காக சிவாஜிகணேசன் ஆரம்பத்தில் பெரும்பாடு பட்டார். இன்றுள்ள பல பெரும் தயாரிப்பாளர்களை அண்டி சிவாஜி கணேசன் சிறுவேடங்களாவதுகொடுக்கும்படி வேண்டியபோதெல்லாம் கேலியும் கிண்டலும் தான் பரிசாகக் கிடைத்தன.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராக

## எம். ஜி. ஆர்—சிவாஜி தகராறு—(வரலாறு)




சிவாஜி இல்லாமலிருந்தாலும்கூட அக்கழகத்துள் நிலவிய சகோதரபாசத்துடன் இணைந்திருந்தார் என்பதை மறக்கமுடியாது.

'பராசக்தி'யைத் தொடர்ந்து 'மனோகரா' போன்ற வெற்றிப் படங்கள் அடுத்தடுத்து வெளிவர ஆரம்பிக்கவே சிவாஜிக்கு பேரும் புகழும் பொருளும் சேர ஆரம்பித்தன.

எங்கிருந்தாலும் வாழ்க.

சொந்தக் காரணங்களை முன்னிட்டு சிவாஜி கணேசன் ஒரு கட்சிக்கோ குழுவுக்கோ கட்டுப்படாமல் பொதுமனிதனாகவிருக்க விரும்பினார்.

தி. மு. க விலிருந்து ஒதுங்கிய சிவாஜி கணேசனை சில கழக உறுப்பினர்கள் வன்மையாகக்கண்டிக்கவே செய்தனர். ஆனால் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட தலைவர்கள் கவுரவமான முறையில் கருத்துவெளியிட்டனர்.

'தம்பி நீ எங்கிருந்தாலும் வாழ்க' என்று ஆசிகூறினார் அண்ணா. (தொடரும்)

## வில்லுப்பாட்டுக் குழுவிற்குப் பாராட்டு

'பண்டைத் தமிழர்களின் கலாச்சார நிகழ்ச்சிகளில் மிகவும் தொன்மையான வில்லுப்பாட்டுக் கலையை ஈழத்தில் மீண்டும் அறிமுகப்படுத்தி, ஈழத்தின் பல பாகங்களிலும் பரப்பி வருவதையிட்டு மட்டுநகர் மாஸ்டர் சிவலிங்கம் வில்லுப்பாட்டுக் குழுவினருக்குத் தமிழ் பேசும் நல்லுலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது', இவ்வாறு மட்டுநகர் மாஸ்டர் சிவலிங்கம் வில்லுப்பாட்டுக் குழுவினர் 85வது வில்லுப்பாட்டுக் கச்சேரிப் பூர்த்தி விழாவிற்குத் தலைமை வகித்

### அறிமுகப்படுத்துகிறோம்

### அடுத்த வாரம்

துப் பேசுகையில் கவிஞர் திமிலைத்துமிலன் பாராட்டினார்.

விழா ஆரம்பத்தில் அமரர்களான யோகர் சுவாமி, காருகுறிச்சி அருணாசலம், ஸ்பென்ஸர் இராசரெத்தினம் ஆகியோரின் ஆன்ம சாந்திக்காக இரு நிமிட மௌனம் அனுட்டிக்கப்பட்டது.

வில்லுப்பாட்டுக் குழுத் தலைவர் மாஸ்டர் சிவலிங்கம் தமது குழுவிற்கு அளிக்கப்பட்ட பாராட்டுகளுக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

இத்தகைய தமிழிசை விழாக்கள் மென் மேலும், நாடெங்கணும் அவ்வப்போது நடைபெற்றால் தமிழ் [illegible] ஐயமெதுவுமில்லை.

—'சோதி'.

## அருணகிரிநாதர் இசை விழா

அருணகிரிநாதர் இசை விழா ஏப்ரல் மாதம் 24, 25, 26-ம் திகதிகளில் வெள்ளவத்தை மாணிக்க விநாயகர்



திரு. பா. தியாகராஜன்

ஆலயத்தில் 'காளிமுத்து அரங்கில்' நடைபெற்றது.

வெப்பத்தின் கொடுமை தாங்கொணாது மலைகளின் மடியில் தவழ்வதற்குச் சென்றிராதவர்களை கலைமகளின் இனிமை வெள்ளத்தில் நீந்துதற்காக இவ்விழாவை ஒழுங்கு செய்து எமக்களித்த திரு. பா. தியாகராஜன் அவர்களைப் போற்றாமல் இருக்க முடியாது.

மற்றைய விழாக்களில் காணப்படுவது போல் இசைக் கலைஞரின் வளர்ச்சிக்கும் ஊக்கத்திற்கும் இடமளிக்கவில்லை என்றோ சகல வல்லமை பொருந்திய முதுகலைஞர்களுக்கு போதிய இடமளிக்கவில்லை என்றோ, ஆண் கலைஞருக்கு கூடிய இடமும், பெண்கலைஞர்களுக்கு குறைந்த இடமும் என்று முகங்கோணக் கூடிய நிலையையோ இங்கே காணக் கூடியதாக இடமளிக்கப்படவில்லை. பலருக்கும் பல விதத்திலும் ஊக்கமளிக்கப் பட்டது.

அருணகிரிநாதர் தமிழ் இசை மன்றத்தினரின் சிறப்பு மலரில் கண்ணோட்டம் செலுத்துங்கால், தலைமையுரையில் காணப்படும் சில வாக்கியங்கள் கலையார்வம் கொண்டோரையெல்லாம் தலைசாயச் செய்கிறது. இந்நிலை மென்மேலும் மோசமாகாது,—திருத்தங்கள் காணப்படும் என்பதற் கறிகுறியாக, இத்தினங்களில் மேலும் பல கலை விழாக்கள் பல இடங்களில் நிகழ்ந்திருப்பினும், இவ் விழாவிற்கும் பெருந்திரளில் மக்கள் [illegible] யிருந்தது சான்று [illegible] துடன் விழாவிற்கு ஒரு பெரு வெற்றியுமாகும்.

## நாடகப் போட்டி

நாடகப் போட்டி முடிவுபெற இன்னும் ஒரே ஒரு வாரம் மட்டும்தான் இருக்கிறது. உங்கள் விடைகளை அனுப்பிவைக்க தாமதம் வேண்டாம்.

### முடிவுத் திகதி 11-5-64

குறிப்பு: ஒரு உறைக்குள் ஒருவர் எத்தனை விடைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால் போதிய முத்திரைகள் ஒட்ட வேண்டும்.

### நாடகப் போட்டி

1963-ம் ஆண்டில்..............................................
(ஊரின் பெயர்)

நடைபெற்ற தமிழ் நாடகங்களில்

சிறந்த நாடகம்..............................................

சிறந்த நடிகர்..............................................

சிறந்த நடிகை..............................................

சிறந்த நகைச்சுவையாளர்..............................................

சிறந்த கதாசிரியர்..............................................

சிறந்த இயக்குநர் (டைரக்டர்)..............................................

சிறந்த தயாரிப்பாளர்..............................................

சிறந்த வெளியீட்டாளர்..............................................

ஒப்பம்:..............................

முகவரி..............................

..............................

..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களத்தில் கடமையாற்ற...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மையாற்றிய சிங்களமல்லாத உத்தியோகத்தர் தமது பெறுமதியை இழப்பாரென்றும், மற்றும்படி திறமையில்லாத சிங்கள உத்தியோகத்தரின் பெறுமதி இரண்டு மடங்காகிவிடுமென்பதும் இவர்கள் அறிந்திருப்பார்களென்று நம்ப இடமுண்டு.

மொழி மசோதாவை அமுலாக்கும் காலத்தை நீடித்து வைக்க வேண்டியிருந்ததே, மசோதாவினால் ஏற்பட்ட சிக்கல் தொடர்ந்திருப்பதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதென்பதற்குச் சான்று பகருகின்றது.

### சுற்றுநிருபங்களின் நோக்கம்

திறைசேரி சுற்று நிருபங்களை அனுப்பிய திறைசேரிக் காரியதரிசி அவை அனுப்பப்பட்ட நோக்கத்தை விளக்க இங்கு சாட்சியம் அளிக்கவில்லையாதலால்,



வழக்கின் வெற்றிக்குத் துணை நின்ற வழக்குரைஞர் திரு. எஸ். சர்வானந்தா.

அச் சுற்று நிருபங்களைக் கொண்டே அவற்றின் நோக்கத்தைத் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. அப்படிப் பார்க்கும் பொழுது, அவை ஒரே ஒரு நோக்கம் கொண்டவை என்பதில் எனக்கு எவ்வித ஐயமுமில்லை. அச்சுற்றுநிருபங்கள் அனுப்பப்பட்ட விலாசதாரருக்கு, அதாவது நிரந்தரக் காரியதரிசிகளுக்கும், பழைய நியமன உத்தியோகத்தர்களுக்கும், அரசகரும மொழியின் அமுல் சம்பந்தமாகக் கிளம்பிய பல விஷயங்களையொட்டியும் மந்திரி சபையின் தீர்மானங்களை அறிவிக்கவே, அவை அனுப்பப்பட்டன.

### என்னால் ஒப்புக் கொள்ள முடியாது

அரசகரும மொழிச் சட்டத்தை அமுலாக்குவதற்காக, சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டுமென்று உத்தியோகத்தரை வேண்டுவது, சேவை விதிகளில் மாற்றமுண்டாக்குமென்பதில் ஐயமில்லையெனினும், மந்திரி சபையின் தீர்மானத்தை ஒரு உத்தியோகத்தருக்கு அறிவிப்பதும், அவருக்கு 'மந்திரி சபையின் இந்த முடிவின் பிரகாரம் தங்கள் சேவையில் பின்வரும் மாற்றங்கள் செய்துள்ளோமென்பதை இதனால் அறிவிக்க விரும்புகிறோம்' என்று கூறுவதும் ஒன்றே என்பதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது.

சேவை நிபந்தனையில் ஏற்படும் மாற்றங்களைச் சுற்று நிருபத்தின்மூலம் அறிவிப்பது வசதியான முறையென்ற போதிலும், இன்ன நோக்கத்துக்காக அச்சுற்று நிருபம் அனுப்பப்பட்டதென்பதை சம்பந்தப்பட்ட அதிகாரி காட்டவேண்டியது அவசியமாகும்.

இலங்கையிலுள்ள பொதுச் சேவை மீது மந்திரிகளுக்கு அதிகாரம் இல்லை. இதினின்று, மந்திரியின் கையாளாகிய நிலையில் இருக்கும் திறைசேரிக் காரியதரிசிக்கு பொதுச்சேவைக் கொமிஷனால் நியமிக்கப்பட்டவர்களின் சேவை நிபந்தனைகளை மாற்ற அதிகாரம் கிடையாதென்பதும், அத்தகைய அதிகாரம் பொதுச்சேவைக் கொமிஷனுக்கே உண்டென்பதும் தொடருகிறது.

சுற்று நிருபத்தை எடுத்துப்பார்க்குமிடத்திலும், என்ன அடிப்படையில் வாழ்க்கைப்படி உயர்வு நிறுத்தப்படுமென்பது தெளிவாகவில்லை. மேலோட்டமாகப் பார்க்கும்பொழுது, ஒரு உத்தியோகத்தர் சிங்களத்தில் போதிய அளவு தேர்ச்சி பெறும் வகையில் பரீட்சையை எடுக்காமலோ அல்லது பரீட்சையில் தோல்வியுற்றாலோ, அதற்காக அவரது தண்டனையாக வாழ்க்கை உயர்வுப்படி நிறுத்தப்படுமென்பது அரசாங்கத்தின் தீர்மானம் எனப் புலப்படுகிறது. அப்படியாயின், ஒரு உத்தியோகத்தருக்கு வாழ்க்கை உயர்வுப்படி நிறுத்தல் சம்பந்தமான பொதுச் சேவைக் கொமிஷனின் விதிகளை அனுசரிக்கவேண்டும். இதுவே, அதிகாரம் பொதுச் சேவைக் கொமிஷனிடமிருந்து—திறைசேரிக் காரியதரிசியிடமிருந்தல்ல, வந்திருக்க வேண்டுமென்பதைச் சுட்டுகிறது.

அது தண்டனையாகவல்ல, வாழ்க்கைஉயர்வுப்படியைச் சம்பாதிக்க உண்மை, விசுவாசம், நேர்மை, திறமை இவற்றுடன் சிங்களமொழிச் சட்டத்தை அமுலாக்கும் நோக்கத்துடன், சிங்களம் தருதிகாலை பரீட்சையில் தேறுவதும ஒரு அதிகப்படியான தேவையாகச் சேர்க்கப்பட்டதானால், அதற்கும் பொதுச்சேவைக் கொமிஷனிடமிருந்தே கட்டளை பிறப்பிக்க வேண்டிவரும். ஏனெனில், வாழ்க்கை உயர்வுப்படி நிறுத்தலும் ஒழுங்கு முறையின் கீழ் வருகின்றது.

### பி 9 குறிப்பிடவில்லை

குறிப்பிட்ட சந்தர்ப்பங்களுக்கிடையே, வாழ்க்கை உயர்வுப்படியை நிறுத்த வேண்டியது இவைக்கள அதிபரின் கடமையாகும் என்று பி 9 எந்தஇடத்திலும் குறிப்பிடவில்லை. இந்தச் சுற்று நிருபங்கள் எல்லாவற்றையும் பார்க்குமிடத்து, மந்திரி சபையின் முடிவுகளை நிரந்தரக் காரியதரிசிகளுக்கும்," இலாக்கள அதிபர்களுக்கும் அறிவித்து விட்டால், அரசாங்கத்தின் அம்முடிவுகளை அவர்கள் தமக்குச் சிறந்ததெனப்பட்ட விதத்தில் அமுலாக்கினால் அதுவே சிறந்த வழியாகுமென திறைசேரிக் காரியதரிசி கருதியிருப்பதாகவே படுகிறது.

### சேவை ஒப்பந்தமே மாற்றப்பட்டுள்ளது

அரசகருமமொழி மசோதாவையும், இந்தச் சுற்று நிருபங்களையும் வாசிக்கும் எவரும், சிங்களத்தில் ஏற்கனவே உத்தியோகத்தர்கள் கடமையாற்றும்படி கேட்காமல் விடப்பட்டது ஏனெனில், சிங்களத்தில் வேலை செய்ய முடியாதென்பதை அரசாங்கம் உணர்ந்திருந்ததே காரணமாகும் என்பதைவிட வேறு ஒரு முடி



வழக்கின் வெற்றிக்குத் துணை நின்ற வழக்குரைஞர் திரு. வி. நாகேந்திரா.

வுக்கும் வரமுடியாதென்றே நான் நினைக்கிறேன். அரசகருமமொழி மசோதாவையும், அதை அமுலாக்கும் தேவையையும் கருதாது, சேவை நிபந்தனைகளில் தனக்கிருந்த உரிமையொன்றை நிலைநாட்டவே அரசாங்கம் இச்சுற்றுநிருபத்தை அனுப்பியது என்று கூறும் வாதத்தை, திறைசேரிக் காரியதரிசி அந்தக் காரணத்துக்காகத்தான் அச்சுற்று நிருபம் அனுப்பப்பட்டது என்று சொல்லமுடியாத பட்சத்தில், நான் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை.

ஆங்கில மூலத்தில் சேவைக்கு எடுக்கப்பட்ட கோடீசுவரன், ஆங்கிலத்தில் வேலைசெய்வதென்பதுதான் அவர் ஒப்புக்கொண்ட சேவை ஒப்பந்தத்தின் சாராம்சமாகும். அரசகருமமொழி நிறைவேற்றப்பட்ட காலம்வரை, சிங்களத்தில் அறிவு இருக்கவேண்டிய தேவை அவருக்கு இருக்கவேயில்லை. அவரைச் சிங்களத்தில் கடமையாற்றச் சொல்வது, சேவை நிபந்தனையில் செய்யும் ஒரு மாற்றமாகாது; அது சேவை ஒப்பந்தத்தையே மாற்றுவதாகும்.

ஆகவே சேவை நிபந்தனைகளை மாற்றும் அதிகாரத்தின் பிரகாரம் திறைசேரிக் காரியதரிசி எடுத்தநடவடிக்கையாகவே சுற்றுநிருபம் பி 9 அனுப்பப்பட்டதென்பதல்ல, அரசகருமமொழி மசோதா பற்றிய மந்திரிசபை முடிவை நிரந்தரக் காரியதரிசிகளுக்கும், இலாக்கள அதிபர்களுக்கும் தெரிவிக்கும் அறிக்கையேயாகுமென்ற வாதம் சரியென்பதையே இவையெல்லாம் சுட்டுகிறது.

### தீர்ப்பு

இந்தச் சந்தர்ப்பத்தில் சுற்று நிருபம் பி 9 ன்படி, தனது விசுவாசம், நேர்மை திறமை இவற்றினால் சேவையிலுள்ள வாழ்க்கை உயர்வுப்படியைச் சம்பாதித்த கோடீசுவரனுக்கு அதைக் கொடுக்காமல் கோலை அரசாங்க அதிபர் நிறுத்தியது பிழையென்ற முடிவுக்கே நான் வரவேண்டியுள்ளது.

வாதிக்கு 1-4-62 லிருந்து கிடைக்கவேண்டிய வாழ்க்கை உயர்வுப்படி அளிக்கப்பட வேண்டுமென்றும், வழக்குச் செலவுக்கும் அவர் உரித்தானவரென்றும் தீர்ப்பளிக்கின்றேன்.

# போராட்டமே...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

யினமே! ஏன்? இலங்கை முழுவதும் வாழும் எம் கன்னித் தமிழினமே! அன்று சிக்காக்கோ நகர மக்கள் எழுப்பிய உரிமைக் குரலுக்கேற்ப உரிமையிழந்து வாடும் நாம் யாவரும் ஒன்று திரண்டு ஒரு அணியின் கீழ் நின்று 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்ற தத்துவத்தை நிலைநாட்ட, உரிமைப் போர்தொடுக்க-இந்த மேதினத்தன்று சங்கற்பம் செய்து கொள்வோம்.

ஓங்குக பாட்டாளிகளின் ஒற்றுமை.

# காதலின் உன்னதமான....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து இம்மியும் வழுவாது இருக்க வேண்டும். இத்தகைய உயர்ந்த காதல் உலகை உய்விக்கும். இந்தத் தூய உள்ளக் கலப்பிலே, உலகின் பொய், வஞ்சனை, சூது, ஏற்றத் தாழ்வு—எல்லாமே அழிந்து ஒழிந்துவிடும். — இதை விளக்கும் வகையில் என் கதைகளைப் படைக்க வேண்டும் என முடிவு செய்கின்றேன்.

### கதை பிறந்தது

பேனாவை எடுக்கின்றேன் எழுதுகின்றேன். கமலா என்ற கன்னிப் பெண், தன் கல்லூரித் தோழியாகிய சரோவுக்குக் கடிதம் எழுதும் பாணியில் கதை அமைகிறது. வில்லன், வில்லி இல்லாத, நல்லவர்கள் மட்டும் பாத்திரங்களாக வரும் கதை இது. கண்ணிலும் கருத்திலும் நிறைந்து, கண்ணியமான முறையிற் காதலராவவர்கள், கஷ்டம் எதுவுமின்றிக் கணவன்—மனைவியராகின்றனர்.

கதையைத் திருப்பித் திருப்பிப் படிக்கின்றேன்; திருப்பித் திருப்பி எழுதுகின்றேன். திருப்தி ஏற்படுகின்றது. (இப்போது படிக்கும் போது, இது ஒரு ...ணக் கதையாகத் தோன்றுகிறது என்னவோ உண்மை தான்!)

கதையைச் "சுதந்திரன்" பத்திரிகைக்கு அனுப்புகின்றேன்.

கதை, சுவரில் அடிபட்ட பந்தாகத் திரும்பி வரவில்லை; கிணற்றுள் போட்ட கல்லாக "கப்சிப்" என்று கிடக்கிறது. நீண்ட நாட்களுக்குப் பிறகு ஆசிரியர் அவர்களிடம் என் கதை நிலை பற்றி விசாரிக்கின்றேன்.

### எழுத்தாளனானேன்

அடுத்த வாரச் "சுதந்திரன்" என் 'மலர்ந்த காதலு'டன் வெளியாகின்றது.

இமயத்தை வென்ற இறுமாப்பும் பெரு மகிழ்ச்சியும் ஏற்படுகின்றன. காதலிலே வெற்றியடைந்திருந்தால் கூட இத்துணை மகிழ்ச்சி அடைந்திருப்பேனோ!

எல்லாம் நன்கு நினைவிருக்கும் இந்நேரத்தில் ஒன்றே ஒன்றுதான் மறந்துவிட்டது-அந்தச் "சுதந்திர"னை எத்தனை தடவை படித்தேன் என்பது!

இனி, அதிகம் ஏன்? இப்படித்தான் நான் எழுத்தாளனானேன்; இதற்குப் ... ஆளாகின்றேன்!

# காணி விநியோகத் திட்டத்தில் திருத்தம்

மன்னார் மாவட்டத்தில் காணி விநியோகம் என்ற தலைப்பில் 19-4-64ம் திகதி 'சுதந்திரன்' இதழில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. அச்செய்தியில் விவாகமாகாதவருக்கு மாத வருமானம் 12,000 ரூபாவிற்குக் குறையாததாகவும், விவாகமானவருக்கு மாத வருமானம் 24,000 ரூபாவிற்குக் குறையாதும் இருக்க வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. மார்ச் மாதம் 10ம் திகதி மன்னார் அரசாங்க அதிபர் வெளியிட்டுள்ள அறிவித்தலின் பிரகாரமே இச் செய்தி வெளியிடப்பட்டது.

பின்னர் வெளிவந்த அரசாங்க அதிபரின் அறிவித்தலில் மேற்குறிப்பிட்ட வருமானம் பற்றிய அம்சத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. திருத்தம் வருமாறு:-

விவாகம் ஆகாத நடுத்தர வகுப்பினர் — ஒரு வருடத்தில் 12,000 ரூபா வரைக்கும் வருமானம உடையவராய் இருத்தல் வேண்டும்.

விவாகமானவர்—ஒரு வருடத்துக்கு 24,000 ரூபா வரைக்கும் வருமானம் உடையவராய் இருத்தல் வேண்டும்.

குறிப்பிட்ட தொகை வருமானத்தின் உச்சவரம்பாகும். அதற்கு உட்பட்டவர்களும் இத் திட்டத்தில் நிலம் பெற விண்ணப்பிக்கலாம்.

இத் திட்டத்தில் நிலம் பெறுவதற்கு 15-5-64 வரைக்கும் மன்னார் அரசாங்க அதிபரால் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். மாதிரி விண்ணப்பம் 19ம் திகதி சுதந்திரனில் வெளியாகியது.

ஜி. ஸி. ஈ. உயர்தரத் தேர்வும்
பல்கலைக் கழகப் புதுமுக தேர்வும்
இலங்கையின் மிகப் பிரசித்தி வாய்ந்த இன்ஸ்டிடியூட், இலங்கையிலேயே சிறந்த அஞ்சல் மூலம் கல்வி, விவேக மீட்டல் பாடங்கள், பரீட்சை வழிகாட்டிகள், வழங்குகிறது.
யூனைட்டெட் இன்ஸ்டிடியூட்ஸ்,
நெல்லியடி கரவெட்டி
கிளைகள்:
107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
13, முதலாவது சப்பெல் ஒழுங்கை, கொழும்பு-6.

ஆனந்தா லேகியம்
இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.
நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.
ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும், பத்தியமில்லை;
பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.
இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.
பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.
வி. பி. பி. செலவு வேறு
தயாரிப்பாளர்:
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புதுமைகள் பாரீர் பாரினிலே - (1)

(அன்ரனி பெர்னண்டோ—கிரிலப்பனை)

## ஒட்டுக்கேட்கும் வித்தை!

அமெரிக்காவில் வீடுகளிலும், கடைகளிலும், தெருக்களிலும் தொலைபேசிகள் மலிந்து கிடக்கின்றன. ஐந்து கோடிக்கும் அதிகமான தொலைபேசிகள் அங்குள்ளன. நாளொன்றுக்கு அங்குள்ள தொலைபேசிகளில் சுமார் இருபது கோடி சம்பாஷணைகள் நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. நினைக்கும்போது புதுமையாகத்தான் இருக்கிறது அல்லவா?

அங்கே, தொலைபேசியில் நடைபெறும் சம்பாஷணைகளைக் கள்ளத்தனமாக ஒட்டுக்கேட்கும் பேர்வழிகள் பல்லாயிரக்கணக்கில் இருப்பதுதான் இதைவிட ஆச்சரியமான புனிதமாக இருக்கிறது. பெரிய களவுகள், கொள்ளைகள், கடத்தல்கள் போன்ற பல செயல்களுக்கு உதவியாகவும், மற்றும் பல காரணங்களுக்காகவுமே இவர்கள் பெரிய இடத்துத் தொலைபேசிச் சம்பாஷணைகளை ஒட்டுக்கேட்டு இரகசியங்களை அறிந்துகொள்கின்றனர். இந்தச் சட்டவிரோதச் செயலை ஒழித்துக்கட்டும் முயற்சியில் அமெரிக்க அரசாங்கம் மிகுந்த சிரத்தை எடுத்து வருகிறது.

நமது நாட்டில்கூட இப்படித் தொலைபேசிச் சம்பாஷணைகளைச் சிலர் ஒட்டுக்கேட்டதாகப் பத்திரிகைகளில் செய்திகள் அடிபட்டன. தெருவிலிருந்து வீட்டிலுள்ள தொலைபேசிக்குச் செல்லும் கம்பிகளில் வேறு கம்பிகளை இணைத்துச் சம்பாஷணையைக் கேட்க முடியுமென்பதை நாமறிவோம். இக்காலத்தில் இவை பழங்கதைகளாகிவிட்டன.

விஞ்ஞானம் வேகமாக முன்னேறிவரும் அமெரிக்காவில் இந்த ஒட்டுக்கேட்கும் சட்டவிரோதச் செயலிலும் தீவிர முன்னேற்றம் காணப்படுகிறது. கம்பிகள் எதையும் இணைக்காமலே தொலைபேசிச் சம்பாஷணைகளைக் கேட்பதற்கு மட்டுமன்றித் தொலைபேசி ஒன்றோ வானொலிப் பெட்டியொன்றோ இருக்கும் ஒரு வீட்டில் குடும்பத்தினர் கதைப்பவைகளையெல்லாம் எதுவித சிரமுமின்றித் தூரத்தில் இருந்து கேட்பதற்கும் நவீனமான வழிகளை அவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கால்மைல் தூரத்தில் யாராவது பேசிக்கொண்டிருக்கும் பேச்சுகளை இழுத்தெடுக்கும் ஆற்றல் வாய்ந்த 'ட்ரான்ஸ் மிட்டர்' கருவியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தக்கருவி ஒரு தீப்பெட்டி அளவுதான் இருக்கும். பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட சில கருவிகள் இதையும்விட நூதனமானதாய் இருக்கின்றன. நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் ஓர் இருளடைந்த அறையில் நடக்கும் பேச்சுவார்த்தைகளைக்கூட இக்கருவிகளின் உதவியால் சுலபமாகக் கேட்கமுடிகிறது. விரலில் அணியும் மோதிரத்தில், கைக்கடிகாரத்தில், கழுத்துப் பட்டியில் அல்லது சப்பாத்தினுள் ஒளித்து வைக்கக் கூடிய அளவிற்கு மிகச் சிறியனவாய் நுட்பமாக அமைக்கப்பட்டுள்ளன இக்கருவிகள்.

ஒட்டுக்கேட்கும் தொழில் பெயர்பெற்றவர்களுள் அமெரிக்காவில் டேர்னெட் ஸ்பின்டல் என்பவன் முதலிடம் பெற்றுனென்று தெரிகிறது. இவன் தனது கழுத்துப் பட்டியில் ஒளித்து வைத்திருக்கும் சின்னஞ் சிறு கருவியொன்றின் உதவியால், தனக்குத் தேவையான இரகசியப் பேச்சுவார்த்தைகளைப்பலமைல்களுக்கு அப்பால்உள்ள பதிவுசெய்யும்கருவிஒன்றிற்கு அனுப்பிவைத்தானும். சுமார் ஐந்நூறு யார் தூரத்தில் அறையொன்றில் நடக்கும் சம்பாஷணைகளை அந்த அறையின் சாளரத்திற்கு நேராக பீங்கான்போன்ற ஒரு கருவியைப் பிடிப்பதன்மூலம் எதுவித சிரமும் இல்லாமல் அவனுல் கேட்க முடியுமாம்.

நமது வீட்டில் பாவிக்காத வேளைகளில் சும்மாகிடக்கும் வானொலிப் பெட்டியின் அருகிலும், மேசைமீது சும்மா கிடக்கும் தொலைபேசியின் அருகிலும் நடக்கும் சம்பாஷணைகள் யாவையும் அந்த மனிதனுல் கேட்க முடியுமாம். அதற்கு வேண்டிய கருவிகளையெல்லாம் அவனே தயாரித்துக்கொள்வதே விந்தையிலும் விந்தையாகும். மின் அலையொன்றை அனுப்பிக் குரல்களைப் பொறுக்கும் நவீன கருவியொன்றை அவன் கடைசியாகக் கண்டுபிடித்திருக்கிறுன்.

நாம் இரகசியம் பேசும்போது, 'சுவர்களுக்கும் காதிருக்கும் கவனம்' என்று சும்மா பேச்சுக்குச் சொல்கிறோம். இப்போது அது வெறும் பேச்சாக இல்லாது உண்மையாகிவிட்டது. சுவர்களுக்கு மட்டுமென்ன, நமது வீட்டிலுள்ள எல்லாப் பொருட்களுக்கும் காதுகள் முளைக்க ஆரம்பித்துள்ளன. இனிக் கவனமாக இருக்க வேண்டியதுதான்.

என்னதான் கவனமாக இருந்தாலும் விஞ்ஞானம் போகும் போக்கைப் பார்த்தால் இனிமேல் இரகசியம் என்ற சொல்லுக்கே இடமின்றி நமது செயல்கள், பேச்சுகள் எல்லாம் பகிரங்கமாகிவிடும்போல் தெரிகிறது. ஆழம்காண முடியாத மனித உள்ளத்தின் அடித்தளத்திலே உள்ள எண்ணக் குவியல்களை எல்லாம் சினிமாப் படம்போல் திரையில் காட்டக்கூடிய கருவிகள் எதிர்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டாலும் ஆச்சரியம் இல்லையன்றோ!

# புரட்சிக் கவியே! போனுயோ?

( கல்முனை வாசகன் )

தமிழ் கூறும் நல்லுலகமே அன்று சோகமெனும் சமுத்திரத்துள் தத்தளித்தது. தமிழ்நெஞ்சங்கள் விம்மி வெதும்பி அழுதன. கவிஞர்கள் கண்ணிரால் தாரை வார்த்தனர். அன்றோடு முடிந்ததா அந்தக் கொடுமை மிகு துயரம்? இல்லை. இன்றும் பல கோடி மக்களின் இதயத்தில் வேதனைக் கீதம் முனகிக் கொண்டேயிருக்கின்றது. இன்றென்ன, இனி என்றுமே இந்த நிலைமை நீடிக்கத்தான் செய்யும். ஆமாம்; அன்றுதான் சித்திரை இருபத்தோராந் தேதி செவ்வாய்க்கிழமை. ஐயோ! தாழ்வுற்ற தமிழர்களின் தாழ்வு நிலை நீக்க, நாளும் நலிந்து அரும்பாடுபட்டு, புரட்சிக்கனல் வீசும் பைந் தமிழ்ப் பாக்களை 'பாழ்பட்ட சமுதாயமே பார்!' என்று பாழ்பட்ட சமுதாயத்தின் கண் முன் விட்டெறிந்த சீர்திருத்தச் செம்மல் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைத் தின்று ஏப்பமிட்ட கொடிய நாள் அது!

—செந்தமிழ்த் தாயே! உனக்கு யாரிட்ட சாபமோ? தங்கமணித் தமிழால் திருவாரம்....உனக்குப் பூணவரும்......தன்மானத் தமிழர்களை...நடுவில் தொலைப்பதற்கென்றே காலனவன் முழு மூச்சாய் நிற்கிறுனே......! ஐயோ!......தமிழ் தாயே! யாரிட்ட சாபமோ?...... அம்மா!

—பாரதியின் நிழலாட.. அதைக் கண்டு மனங்களித்தாட நாமிருந்தோம். இன்று பாரதியின் நிழல் கூட... அடியோடு மறைந்தோட...... எங்கள் மனம் துன்பத்தில் உழன்று...காலனவன் பிரித்துவிட்டான் பாரதியின்—தாசனவன் சுப்புரத்தினத்தை!

'நண்பா! சுப்புரத்தினம் யார் என்று நினைக்கிறுயா? கேள்! பிரெஞ்சு ஆட்சிக்குட்பட்டிருந்த புதுச்சேரியிற் தான், 1891ம் ஆண்டு சித்திரைத் திங்கள் 29ந் திகதியன்று கனக சுந்தர முதலியாருக்குப் புதல்வனுய் உதயமானுர் பாரதிதாசன். தந்தையவர் வைத்த பெயர்தான் 'சுப்பு ரத்தினம்' பாரதியின் மீது அளவற்ற அன்புடையவராதலின்'பாரதிதாசன்'என தன் பெயரை மாற்றிக் கொண்டார். 'பாரதிதாசன்' என்னும் பெயருக்குமுன்பெல்லாம் அவரைப்பெற்றோர்களும் உறவினர்களும் நண்பர்களும் 'சுப்பு' என்றே அழைப்பார்கள். பாரதியின் கவிதைகளிற் புலனுற்ற 'சுப்பு' தன்னை, பாரதியின் மானசிகச் சீடனுக மாற்றிக் கொண்டு கவிதைகள் எழுதலானுர். பாரதியின் பாடல்களை அவர் தன்னைமெய்மறந்த [illegible] இல்லையென்றே கூறலாம்.

தன் பாட்டால் நம்மைக் கவர்ந்த அந்தப் பெருந்தகைக்கு...... நாம் 'நன்றிக் கடன்' செய்ய வேண்டும். ஆமாம்—

அவர் தந்த பாடல்களை
இசைக்க வேண்டும்!
அவர் பிறப்பை-இறப்பை
பெருமனதாய் உன்ன
வேண்டும்!
அவர் பெருமை கூறல்
வேண்டும்!
அவர் திருவுருவை (படத்தை)
மதிக்க வேண்டும்!

—இவைகளே நாமவர்க்கு வாழ்க்கை பூரகவும் செய்ய வேண்டிய 'நன்றிக் கடன்களாகும்!'

# பெண்களும் உத்தியோகமும்

— க. சரோஜாதேவி, திருமலை —

இன்று பெண்களும் ஆண்களைப் போல உத்தியோகத்திற்கு வெளிப்பட்டுச் செல்லுங் காட்சி இலங்கையின் எந்த மூலையிலும் காணலாம். பெண்கள் ஆண்கள் செய்யும் எந்த வேலையையும் செய்யத் தயார் என மார்புதட்டி முன் வருவதைக் கண்டு ஆணுலகம் அஞ்சுகின்றது. இன்னும் சில ஆண்டுகளின் பின் ஆண்கள் பெண்களைப் போல வீட்டிலிருக்க வேண்டி வருமே என்று கூடக் கவலைப்படும் அளவுக்குப் பெண்கள் உத்தியோகங்களில் உயர்ந்துவிட்டனர். பெண்கள் உத்தியோகம் செய்வதைச் சிலர் ஆதரிக்கின்றனர். ஆனல் பலர் வெறுக்கின்றனர். நாமும் இப் பிரச்சினையைப் பற்றி இரு பக்கப்பட நடுநிலைமை கொண்டு ஆராய்வோம்.

பெண்களை அடிமையாக்கி அடுப்பங்கரைப் பொம்மையாக்கி ஆட்டிய காலம் மலையேறிவிட்டது. இக்கருத்தை 'வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்' என்று பெண்கள் கும்மி வாயிலாகப் பாரதி பாடுகிறுர். ஆம் அக் காலம் மலை ஏறிவிட்டது தான். பெண்கள் ஆண்களுடன் போட்டி போட்டுக் கல்வியிலும் ஆண்களிலும் பார்க்க முன்னேற்றமடைகிறுர்கள். ஆண்கள் செய்யும் எக் காரியத்தையும் பெண்களும் திறம்படச் செய்கின்றனர். அரசியலில் பெண்களுக்கு ஆண்களைப் போல் சம வாக்குரிமை உண்டு. அப்படியிருக்கும் போது பெண்களுக்கும் ஆண்களைப் போல் உத்தியோகம் கொடுத்தால் என்ன? கடந்த யுத்த காலங்களில் ஆண்களெல்லாம் போருக்குப் போக அரசியல் வர்த்தக வேலைகளையெல்லாம் பெண்கள் திறம்படச் செய்ய வில்லையா?

நாகரிகம் அடைந்த நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷியா போன்ற நாடுகளில் பெண்கள் உழைக்கிறுர்களே. ஏன் நம் நாட்டுப் பெண்களும் உழைக்கக் கூடாது. இன்னும் ஏன் நாம் இவர்களைபடைத்து அடுப்பங்கரைப் பொம்மைகளாகக் கணிக்க வேண்டும். இது சுயநலமுள்ள ஆண்களின் அட்டகாசம் என்று காரசாரமாக எதிர்க்கின்றனர். ஆனல் மறு சாரார்—

பெண்கள் இயற்கைப் படைப்பிலே அன்பிற்கும் தாய்மைக்கும் உறைவிடமானவர்கள். உடலமைப்பே மென்மையையும், அன்பையும், தாய்ப் பண்பையுங் கொண்டது. இது மனித வர்க்கத்தில் மட்டுமல்ல மிருக வர்க்கம் முதலிய எல்லா உயிரினங்களிலும் காணப்படும் உண்மை. பெண்களின் உடல் கஷ்டப்பட்டு வேலை செய்யக்கூடியதாக அமையவில்லை. பெண்ணின் இருப்பிடம் இல்லம். பெண் கிருகலெட்சுமி. இல்லத்தை இழந்து வெளியில் சென்று பெண்கள் உத்தியோகம் பார்ப்பதால் உண்டாகும் தீமைகளும், கஷ்ட நஷ்டங்களும் அளவில. குழந்தைகளைத் தாதியிடம் ஒப்படைத்துவிட்டுப் பெண்கள் வேலைக்குப் போனுல் அக் குழந்தைகளுக்குத் தாய்க்குத் தெரியாமல் உண்டாகும் துன்பங்களை அத் தாய் அறிவாளா? தென்னுலிராமனிடம் பூனை வளர்க்கக் கொடுத்த கதையாகத்தான் பிள்ளைகளின் முடிவு கடைசியில் இருக்கும். குழந்தையின் பழக்க வழக்கமும், குணசுபாவங்களும் தாதியைப் போன்றே இருக்கும்.

பூனை இல்லா வீட்டில் எலிக்குக் கொண்டாட்டம் என்பது போல் எஜமானி இல்லா வீட்டில் வேலைக்காரிக்குக் கொண்டாட்டம். வீடு அவர் ஆட்சியில் அல்லோல கல்லோலப்படும். காலை தொடங்கிக் கஷ்டப்பட்டு வீட்டுக்கு நிம்மதிக்கு வந்தால் வீடு நரகம் போல் காணப்படும். வீட்டில் நிம்மதியில்லை, குடும்பத்தில் அமைதியில்லை. பிள்ளைகட்கு நோய் என்று தொல்லை. இப்படிப் பல தொல்லைகள் கூடிவிடும். வீட்டில் அப்பெண் வேலைக்குச் செல்லாதிருந்தால் இத் தொல்லைகள் இல்லையல்லவா?

பெண்களுக்குப் பிள்ளைகளை வளர்ப்பதை விடச் சிறந்த தொழில் இல்லை. தொட்டிலாட்டும் கை சட்டமியற்றும் என்பது பழமொழி தான் கொண்ட கணவனையும், தன் பிள்ளைகளையும் கண்காணிப்பதே பெண்ணின் முதல் வேலை. பெண்களால் செய்யக்கூடிய படிப்பித்தல், ஆரோக்கிய சாலைகளில் வேலை பார்த்தல் என்பனவும், மண முடியாக் கன்னியர்க்குகந்ததே. இல்வாழ்க்கையை மேற்கொண்ட பத்தினிகட்கு ஏற்றவையல்ல. ஆனல் பெண்கள் அடியோடு படிப்பு வாசனையற்றவர்களாக இருக்கக் கூடாது.

பெண்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யும் போது கடவுள் ஆகிவிடுவார்கள். கண்ணகி, தமயந்தி, திரௌபதி போன்றவர்கள் தக்க உதாரணங்களாக அமைகின்றனர். எனவே நம் பெண்களும் தங்கள் கடமைகளை உணர்ந்து உயர்வுடைவார்களாக.

## பூக்கள்

(கிண்ணியா எஸ்லெம்)

வண்ண வண்ணப் பூக்கள்-இசை
வண்டுகள் மொய்த்திடும்
பூக்கள்
மண்ணில் மலர்ந்திடும் பூக்கள்
—நறு
மணம் பரப்பிடும் பூக்கள்.

பூத்துக் குலுங்கிடும் பூக்கள்
—இன்ப
புன்னகை பூத்திடும் பூக்கள்
நாத்து நடுவிடும் பூக்கள்—புவி
நங்கையர் விரும்பிடும் பூக்கள்.

தேனைத் தெளித்திடும் பூக்கள்
—நற்
தென்றலை நுகர்ந்திடும்
பூக்கள்
கண்ணைக் கவர்ந்திடும் பூக்கள்
—நம்
கருத்தைத் தொட்டிடும்
பூக்கள்.

பார்த்து மகிழ்ந்திடும் பூக்கள்
—நாம்
பறித்துச் சூடிடும் பூக்கள்
நீரில் மிதந்திடும் பூக்கள்
—தினம்
நீரைப் பருகிடும் பூக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## கவிஞர் விதைத்த வீரம் என்றும் நிலைத்து நிற்கும்

### பாரதிதாசன் இழப்பையிட்டு தந்தை விடுத்துள்ள செய்தி

'பாரதிதாசன் மறைந்த செய்தியைக் கேட்டு துக்கம் அடைந்தேன். பாரதியாரின் அடியிலே வந்த வீரத் தமிழ் மகன் மறைந்ததைப்பற்றி தமிழ் உலகு அனைத்தும் வாடி நிற்கிறது. தமிழ் முழங்கிய பாரதிதாசன் மறைந்த போதிலும் அவரின் வீர உணர்ச்சி நிலை நிற்கவேண்டுமென்றே விரும்புகிறேன். துயருற்று நிற்கும் பாரதிதாசன் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேம்!

புரட்சிக் கவிஞர் மறைந்த செய்திகேட்டு தமிழரசுத் தந்தை திரு சா. ஜே. வே. செல்வநாயகம் தெரிவித்த அனுதாபச் செய்தியில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

#### இ. த. அ. க கொழும்புக்கிளை

கவிஞரின் மறைவையொட்டி இலங்கைத் தமிழரசுக்கட்சிக் கொழும்புக்கிளை விடுத்த அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளதாவது:-

'திடுக்கிட்டோம் இந்தச் செய்தி கேட்டு! நம்ப முடியவில்லை! நம்ப விரும்பவில்லை!!

'பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால் சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு' என்று தன்மானம் முழங்கிய வீரத் தமிழ்மகன் தமிழ்ப் பற்றையும் தமிழ் உணர்ச்சியையும் தமிழ் வீரத்தையும் தமிழ் மக்களுக்குக் கனல் பறக்க ஊட்டிய உரமிக்க மாவீரன் குரல் ஓய்ந்துவிட்டது என்பதை நாம் எப்படி நம்பமுடியும்? பாரதிதாசனுகப் பாரதியாரின் பரம்பரைத் தீயை வளர்த்து தமிழனுக்கு ஆண்மை வழங்கிய இலக்கியத் தளபதியை நாம் இழப்பதா? இந்த கட்டத்திலா?

நலிவுற்று மெலிவுற்றிருக்கும் ஒரு பெருமை நிறைந்த இனத்திற்கு உருவமும் உயிரும் உணர்ச்சியும் ஊட்டும் தளபதிகளை நாம் தேடி நிற்கும்போது தமிழினத்தின் ஒரு வீரத் தளபதியை இழந்து நிற்கிறேம்.

இன்னுமொரு பாரதிதாசன் எமதுமத்தியில் இனி எப்போ?

பாரதிதாசனின் பேரிழப்பில் எமக்கு ஆறுதல் கூற அன்புடையவர்களைத் தேடி நிற்கும் இலங்கைத் தமிழராகிய நாம் இந்தவீரத் தமிழனது குடும்பத்தவர்க்கு எவ்வழியில்தான் ஆறுதல் கூறப் போகிறேமோ?'

#### தமிழ் எழுத்தாளர் மன்றம்

தமிழ் எழுத்தாளர் மன்றம் விடுத்த அனுதாபச்செய்தியில் தெரிவித்துள்ளதாவது:-

கன்னித் தமிழில் வண்ண வண்ணக் கவிபாடி தமிழ் இலக்கியமணிமண்டபத்தை அணிசெய்வதுடன் மட்டும் நின்றுவிட்டவர் அல்லபாரதிதாசன் அவர்கள். வீழ்ச்சி உற்ற தமிழகத்தின் எழுச்சி வேண்டி பரணி பாடிய பெரும் புலவன், கொஞ்சு தமிழில் விஞ்சு செயல்கள் வேண்டி வீரப் பண் பாடிய 'எங்கள் கவிஞன்' மறைந்துவிட்டான். இந்த உரிமையுடன் நாம் இனி யாரை 'எங்கள் கவிஞர்' என்று அழைப்பது?...கவிஞரின் ஆத்ம சாந்தியடைய அவன் கண்ட தமிழுலகைச் சமைக்க நாம் விரதம் ஏற்போமாக.

#### இ. அ. வா. மு. சங்கம்

இலங்கை அருந்ததிய வாலிபர் முன்னேற்றச் சங்கச் செயலாளர் திரு. க. மகேசரன் விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளதாவது:-

பாரதிதாசன் அவர்கள் பாரதியாருக்கு அடுத்து கவிஞரானவர் என்றாலும் அவரைவிட பாரதிதாசனது கவிதைகள் இளைஞர்களுக்கு எழுச்சியூட்டத்தக்க 'விதத்திலும் கவிதையில் உயிரூட்டும்படியான சக்தியும் இருந்தன. 'பொங்கு தமிழுக் கின்னல் விளைத்தால் சங்காரம் நிசமென சங்கே முழங்கு' என்று கூறிய ஒரே கவிஞர் புரட்சிக் கவிஞர். அவர் பாடாத பொருளில்லை. அவர் பாடல் கேட்காத தமிழரில்லை. இத்தகைய கவிஞரின் சிறந்த கவிதைகளை தமிழ்நாடு அரசாங்கம் தொகுத்து அரசாங்க வெளியீடாக வெளியிட்டு அன்னவர்க்கு அஞ்சலி செய்யக் கேட்டுக்கொள்கிறேம். அத்துடன் புரட்சிக் கவிஞரின் பிரிவை ஈடுசெய்ய இப்பொழுது வாழும் கவிஞர்களுக்கு ஆதரவு கொடுத்து வாழவைப்போமாக!

#### இஸ்லாமியர் முன்னேற்றக் கழகம்

இஸ்லாமியர் முன்னேற்றக் கழகம் இணைச் செயலாளர் ஜனப் எஸ். ஏ. பி. கரீம் விடுத்த செய்தி:

இலக்கியத் துறையிலே புதுமையை புகுத்திய மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் அடிச் சுவட்டிலே வந்த சுப்புரெத்தின பாரதிதாசன் அவர்களது திடீர் மறைவு எம்மை மாத்திரமல்ல தமிழ் உலகையே ஆருத்துயரிலாழ்த்துகிறது.

அவர் கலையின் இவ்வாண்டு இரண்டாவது பேரிழப்பாக இருந்தபோதிலும் கூட அவர் எம்முடனேயே அன்றுபோல் இன்றும் அண்டி வாழ்கிறர், என்பதை அவரது புதுமைக் கருத்துக்கள் கொண்ட புத்துணர்ச்சியூட்டும் படைப்புக்கள் எடுத்துக்காட்டுகின்றன.

ஒரு சமூகத்தையே ஆக்குவித்த அமரர் பாரதிதாசன் ஆன்மா சாந்திக்கு ஆதிமூதலானவனை வேண்டுவதுடன் அவர் காட்டித் தந்த பாதையை நாம் பேணிப் பாது காப்போமாக!

#### முத்தமிழ் மறுமலர்ச்சி மன்றம்

கடந்த சித்திரை முதலாம் நாள் முத்தமிழ் மறுமலர்ச்சி மன்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தைத் தொடக்கி வைத்துப் பேசிய தோழர் ஏ. வைத்தியநாதன், "ஒரு நல்ல நோக்கத்தை அடிப்படையாக வைத்து இம் மன்றம் செயல்பட விழைந்துள்ளதுகண்டு மகிழுகின்ற அதே வேளையில், ஆரம்பித்து ஆரம்பித்து அடையாளந் தெரியாமல் போன எத்தனையோ மன்றங்களைப் போல இம் மன்றமும் ஆகாமல் பெயருக்கேற்ப முத்துறைகளின் மூலமும் அரிய பல தொண்டுகள் புரிய வேண்டுமென ஆசிக்கின்றேன்." என்று குறிப்பிட்டார்.

மருததானையிலிருக்கும் மேற்படி மன்றப் பணிமனையில் நடந்த இக் கூட்டத்தில் தலைவரைத் தொடர்ந்து மற்றும் பலர் பேசியபின்பு நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர்: கலைஞர் அ. தங்கையா, உப தலைவர்: திரு. ஆ. வைத்தியநாதன், இணைச் செயலாளர்கள்: திருவாளர்கள் எஸ். கணேசன், இரா. ஐசெக், பொருளாளர்: திரு. அ. விவேகானந்தன். ஆலோசனைக் குழு: திருவாளர்கள் க. செல்லத்துரை, ஆர். எஸ். எஸ். அழகேசன், சி. வே. இராமையா. ஏ. பி. ஜோசப், கி. வெங்கடாசலம், பி. சேதுரட்னம், அ. துரைராசா, ஆர். வரதராஜன், செ. மு. அப்துல் அமீது.

#### நூல் நிலையத் திறப்பு விழா

"நாட்டு மக்களின் ஒற்றுமைக்காகவும் விசேடமாய் இன்றைய தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காகவும் இவை போன்ற நூல் நிலையங்களும் சனசமூக நிலையங்களும் அவுரைகளை எம்மிடையே புகட்டும் முன்னேடிகளாக அமைய வேண்டும். அதற்காக என்ன தொல்லைகளிருந்தாலும் அங்கத்தவர்கள் இயன்றளவு ஊக்கமும் ஆக்கமும் புரிய வேண்டும்."

இவ்வாறு வெல்லாவெளி சிவசௌரி சன சமூக நிலைய மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. பெ. ஏரம்பமூர்த்தி அவர்களின் தலைமையில் நடைபெற்ற நூல் நிலையத் திறப்பு விழாவில், நூல் நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசிய தலைவர் குறிப்பிட்டார். அதைத் தொடர்ந்து அங்கத்தவர்கள் பலர் உரை நிகழ்த்தினர்.

#### கோப்பாய் பகுதி சுகாதார வார விழா

அகில இலங்கை மக்கள் சுகாதார வார விழா (1964) கோப்பாய் பகுதியின் அங்குரார்ப்பணக் கூட்டம் 28-3-64 சனிக்கிழமை பி. ப 3 மணிக்கு கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய பயிற்சி கலாசாலைமண்டபத்தில் கோப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. பாலசுந்தரம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு நல்லூர் கொக்குவில், கோப்பாய் நீர்வேலி, புத்தூர், [illegible] களில் உள்ள சமூக சேவையில் ஈடுபட்டு உழைக்கும் பிரமுகர்கள் அநேகரும், ஆசிரியர்களும், இதர அரசாங்க நிலைய அதிகாரிகளும், பெண்மணிகளும் சமுகம் கொடுத்தனர்.

திரு. கா. த. முத்தையா, கோப்பாய் பகுதி சுகாதார நிலைய பொறுப்பாளர், வரவேற்புரை நிகழ்த்தினர்.

தலைவர் தமது முன்னுரையில் இவ்வாண்டு விழா, வெள்ளிவிழாவாகத் திகழ்கின்றதென்பதைக் குறிப்பிட்டார்.

திருமதி இ. ஆனந்தகுமாரசுவாமி, அதிபர் கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய பயிற்சி கலாசாலை, திருமதி. வே. கந்தையா, தலைவி, நீர்வேலி மாதர்சங்கம், திரு. வே. சின்னையா, விவசாய போதனையாளர், புத்தூர், ஆகியோரும் விழா சம்பந்தமாக சொற்பொழிவு ஆற்றினர்.

பின்வரும் உத்தியோகத்தர் தெரிவுசெய்யப்பெற்றனர்: தலைவர்: திருமதி. இ. ஆனந்தகுமாரசாமி, அதிபர் கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, இணைச்செயலாளர்: திரு. க இராசரத்தினம் அவர்கள், மாஜி கோப்பாய் கிராம சபைத் தலைவர், திரு. க. இராசசிங்கம், (சுகாதாரபரிசோதகர், நீர்வேலி), பொருளாளர்: திரு. க. குமாரசுவாமி, (மாவட்ட பால்விநியோகமேற்பார்வையாளர்).

#### ஆலங்கேணித் தமிழ்ப்பாடசாலை

இவ்வருடம் கல்வி இலாகாவினல் ஒதுக்கப்பட்ட தனது பணத்தில், ஆலங்கேணித் தமிழ்ப்பாடசாலைக்கு ஒரு புதிய கட்டிடம் அமைப்பதற்கு மூதூர் முதல்வர் ஜனப் எம். ஈ. எச். முஹம்மதலி பத்தாயிரம் ரூபாய்ஒதுக்கியுள்ளதாக ஆலங்கேணித் தமிழ்ப்பாடசாலையில் நடந்த பெற்ருேர் ஆசிரியர் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிப் பேசும்போது தெரிவித்தார்.

திரு. எம். வைரமுத்து பாடசாலைக் குறைகளை விளக்கி, ஜனப் முஹம்மதலியை வரவேற்றுப் பேசினர். திரு. சு. அம்பலவாணர் நன்றி கூறினர்.

#### நில்வீதி அரசினர் தமிழ்ப் பாடசாலை

##### இல்லங்கள் விளையாட்டுப்போட்டி

கொழும்பு நில்வீதி அரசினர் மத்திய கல்லூரியின் தமிழ் ஆரம்ப பாடசாலையின் நான்கு இல்லங்களான கம்பர், வள்ளுவர், பாரதி ஆதியவற்றிற்கிடையே இவ்வாண்டின் வருடாந்த விளையாட்டுப் போட்டி சமீபத்தில் மேற்படி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. கொழும்பு வட்டார வித்தியாதரிசி திரு. செ. இரத்தினசபாபதிஅவர்கள் மேற்படி விழாவிற்குத் தலைமை வகித்தார். விழாவிற்கு சமுகம் அளித்த அனைவரையும் தலைமை ஆசிரியர் திரு. ஆ. க சுப்பிரமணியம் வரவேற்றுச் சொற்பொழிவாற்றினர். மேற்படி விளையாட்டுப்போட்டியின்போது உதவி வித்தியாதிபதி திரு. வி. துரைசிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

பாடசாலைக் கீதத்துடன் ஆரம்பமான மேற்படி விழாவில் வெற்றிபெற்ற இல்லங்களுக்கும், மாணவ மாணவிகட்கும் திருமதி.ஜி. ஏ. துரைசிங்கம், பாலர்பகுதி வித்தியாதரிசினி அவர்கள் விருதுக்கேடயம், வெற்றிக் கிண்ணங்கள், பரிசுகள், தராதரப் பத்திரங்கள் என்பவற்றை வழங்கினர்.

சகல போட்டிகளினதும் முடிவில் இளங்கோ இல்லம் முதலாவதாகவும், பாரதி இல்லம்இரண்டாவதாகவும் கம்பர் இல்லம்மூன்ருவதாகவும், வள்ளுவர் இல்லம் நாலாவதாகவும் இடம் பெற்றன.

திரு. பி. பாலசுப்பிரமணியம் தம்பதிகள் வழங்கிய வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக்கொள்ள நான்கு இல்லங்களும் பலத்த போட்டியிட்டன. ஈற்றில் இளங்கோ இல்லமே அதிகப்புள்ளிகள் பெற்று முதலாம் இடத்தை அடைந்து இவ்வாண்டுக்குரிய பாலசுப்பிரமணியம் வெற்றிக் கேடயத்தைத் தமதாக்கிக்கொண்டது.

ஈற்றில் விழாவைச் சிறப்பித்த அனைவருக்கும் மேற்படி விளையாட்டுப்போட்டிச் செயலாளர் திரு. அரசதம்பி, ஆசிரியர், நன்றியுரை கூறினர்.

#### சங்கானை இந்து முற்போக்கு வாலிபர் விளையாட்டுப் போட்டி

சங்கானை இந்து முற்போக்கு வாலிபர் விளையாட்டுப்போட்டி 19-4-64 ஞாயிற்றுக் கிழமை மூன்று மணியளவில் சங்கானைப் பாரதி மைதானத்தில் மத்தியஸ்தர் திரு. த. லோகநாதன், திரு. க. நகுலநாதன் ஆகியோர் பொறுப்பில் நடைபெற்றது.

அன்றைய தினம் ஆசிரியர் திரு. மு. சிவானந்தம் தலைமை வகித்தார். பின்பு விளையாட்டுப் போட்டி முடிவில் ஆசிரியை செல்வி. நாகலிங்கம் அவர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டன. அதையடுத்து 'விளையாட்டும் முற்போக்கும்' என்னும் விடயம் பற்றி ஆசிரியர் திரு. சிவானந்தம், ஆசிரியர் திரு. சிவகுரு ஆகியோர்சொற்பொழிவாற்றினர்.


பிரதம விருந்தினர்களாகச் சங்கானையிலுள்ள பெரியோர்களும், ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

#### தாலாட்டுப்பாடல் சேகரிப்பு

திரு. ஆறு. அழகப்பன், எம். ஏ., தமிழ் விரிவுரையாளர் (கீழைத்துறை), அண்ணமலைப் பல்கலைக் கழகம், பின்வரும் வேண்டுகோளைத் தமிழ் பேசும் மக்களுக்கு விடுத்துள்ளார்:

'நம் தமிழ்நாட்டில் வாய்மொழிஇலக்கியமாகவழங்கி வரும் தாலாட்டுப்பாடல்களைச் சேகரிக்கும் தமிழ்ப் பணியில் நான் ஈடுபட்டுள்ளேன். கோடிக் கணக்கான தாலாட்டுப்பாடல்கள் பரம்பரை பரம்பரையாகத் தாய்மார்களால் பாடப்பட்டு வருவதும் அவை இன்று கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருவதும் நாம் அனைவரும் அறிந்ததே. அப்படிப் பாடப்பட்டுவரும் தாலாட்டுப் பாடல்களில் ஒரு இலட்சம் பாடல்கள் வரை தொகுத்துத் தமிழ்த் தாயின் திருவடிகளில் படைக்க நினைக்கின்றேன். இத்தொண்டு இனிது நிறைவேற உங்கள் இல்லத்தில் பாடப்படும் பாடல்களையும் முடிந்தால் உங்களுக்குத் தெரிந்தவர் இல்லங்களில் பாடப்படும் பாடல்களையும் இயன்றமட்டும் எனக்கு எழுதி அனுப்பப் பணிவன்புடன் வேண்டுகின்றேன். இச்செய்தியைஇத்துறையில் உதவக்கூடிய உங்கள் நண்பர்களுக்கும் தெரிவித்து அவர்களையும்எனக்காக அன்புடன் உதவ வேண்டுகின்றேன். நீங்கள் எனக்குச்செய்யும் இவ்வுதவிக்கு நான் என்றும் பெரிதும் நன்றியுடையேன்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 6-வது வெற்றி வாரம்

கிங்ஸ்லி
(கொழும்பு)

வெலிங்டன் நிந்தவூர்சினிமா
(யாழ்ப்பாணம்) (நிந்தவூர்)

தாஜ்மஹால் சந்தியா
(கல்முனை) (கம்பளை)

மற்றும் 5 திரைகளில்

எம். ஜி. ஆர்.-சரோஜாதேவி
ராதா-டி. ஆர். ராஜகுமாரி
அசோகன்-நாகேஷ்
மணிமாலா
மற்றும் பலர் நடித்த

ஆர். ஆர். பிக்சர்சாரின்

# பெரிய இடத்துப் பெண்

# 4வது புகழ் வாரம்!

மைலன் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜயா (மட்டுநகர்)
மற்றும் 4 திரைகளில்

# பணம் பந்தியிலே



# 8ம் திகதி வெள்ளி முதல்!

எல்பின்ஸ்டன் (மருதானை) வின்ஸர் (யாழ்ப்பாணம்) நெல்சன் (திருமலை) இம்பீரியல் (மட்டக்களப்பு)
அசோகா (புத்தளம்) வேல்ஸ் (கண்டி) இம்பீரியல் (இரத்தினபுரி)

சிவாஜி கணேசன்-விஜயகுமாரி
எஸ். எஸ். ஆர்.-முத்துராமன்
சகஸ்ரநாமம்-ஒ. ஏ. கே. தேவர்
மற்றும் பலர் நடித்த







# குங்குமம்

டைரக்ஷன்: கிருஷ்ணன்—பஞ்சு
இசை: கே. வி. மகாதேவன்
பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

# 4வது சனத்திரள் வாரம்!

செல்லமஹால்—றெக்ஸ்
மற்றும் திரைகளில்!

எம். ஜி. ராமச்சந்திரன்—சரோஜாதேவி
நடித்த

# தர்மம் தலை காக்கும்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
கெபிட்டல்

பலரின் வேண்டுகோளுக்கிணங்கவும்
காலம் சென்ற காருக்குறிச்சி அருணசலத்திற்கு
அஞ்சலியாகவும் காண்பிக்கப்படுகிறது.


# கொஞ்சும் சலங்கை

# 4வது இணைந்த மாதமாக வெற்றிப் பவனி வருகிறது!

சென்ட்ரல் (மருதானை) மற்றும் எண்டர்டெயின்மென்ட்ஸ் திரைகளில்!

சிவாஜி கணேசன், சரோஜாதேவி, எம். ஆர். ராதா, பாலாஜி
ரங்கராவ், பத்மினி பிரியதர்சினி, கருணாநிதி
மற்றும் பலர் நடித்த

பிரசாத் மூவிசாரின்



# இருவர் உள்ளம்

கதை: டாக்டர் லட்சுமி
வசனம்: கலைஞர் கருணாநிதி
பாடல்கள்: கண்ணதாசன்
இசை: கே. வி. மகாதேவன்
டைரக்ஷன்: பிரசாத்

இளமைத் துடுக்கில் இன்ப போதை யேறி உல்லாச வாழ்வு வாழ்ந்த பணக்கார வாலிபன், கன்னி ஒருத்தியின் காதலைப் பெற தனது இளமை அத்தனையையுமே பலியிட முன் வந்தான்.

கெட்டவன் என்றும் கெட்டவனாகவே வாழ்வானா—
அவன் திருந்தவே முடியாதா?

திரை தான் பதில் கூறும்


இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1964-ம் வருடம் மே மாதம் 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org